பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 19 சனிக்கிழமை (03-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:38

ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர்களின்

# நான்கு அமைச்சுகளுக்கு ஜனாதிபதி புதிய செயலாளர்களை நியமிப்பு!

## தாம் பொறுப்பேற்காத அமைச்சுகளிலும் அதிகாரம் செலுத்த ஜனாதிபதியின் முயற்சி இது என்று அரசியல் அவதானிகள் கருத்து

கொழும்பு,ஜனவரி3

**ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர்களின் பொறுப்பில் உள்ள நான்கு அமைச்சுகளுக்கு ஜனாதிபதி புதிய செயலாளர்களை நியமித்திருக்கிறார். இது அரசியல் வட்டாரங்களில் பலரின் கவனத்தை ஈர்த்திருக்கின்றது. ஜனாதிபதி தாம் பொறுப்பேற்காத அமைச்சுகளிலும் அதிகாரம் செலுத்துவதற்காகவே இந்தப் புதிய செயலாளர் நியமனங்களைச் செய்திருக்கிறார் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.**

அமைச்சுகளின் செயலாளர்களை 60 வயதுடன் ஓய்வு பெறச் செய்ததை அடுத்தே ஜனாதிபதி புதிய நியமனங்களை நேற்று மேற்கொண்டார்.

நீர்ப்பாசன அமைச்சு, சமூக நலன்புரி அமைச்சு, அரச போக்குவரத்து அமைச்சு, உள்நாட்டலுவல்கள், மாகாணசபை உள்ளூராட்சி அமைச்சு ஆகியவற்றுக்கே புதிய செயலாளர்களை ஜனாதிபதி நியமித்திருக்கிறார்.

கடந்த நவம்பர் 4ஆம் திகதி தாம் பொறுப்பேற்ற பாதுகாப்பு அமைச்சு, ஊடகத்துறை அமைச்சு ஆகியவற்றுக்கு ஜனாதிபதி புதிய செயலாளர்களை ஏற்கனவே நியமித்திருந்தமை தெரிந்ததே.

ஆயினும், நேற்று புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்ட நான்கு அமைச்சுகளும் ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர்களின் பொறுப்பிலேயே இருக்கின்றன.

நீர்ப்பாசன அமைச்சின் செயலாளராக எஸ்.டபிள்யூ.ராஜபக்ஷ, சமூக நலன்புரி அமைச்சின் செயலாளராக செல்வி எம்.என்.குருப்பு, அரச போக்குவரத்து அமைச்சின் செயலாளராக பி.வீரஹெண்டி, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைசின் செயலாளராக பி.எம்.லீலாரத்ன ஆகியோர் இப்போது நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

தான் பொறுப்பேற்ற அமைச்சுக்களை

(16ஆம் பக்கம் பார்க்க)

## சார்க் மாநாட்டில் ஜனாதிபதி பங்கேற்பு

கொழும்பு,ஜன.3

பாகிஸ்தானில் நாளை ஆரம்பமாகும் 'சார்க்' தலைவர்களின் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்து கொள்ளவிருக்கிறார்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி இன்று பாகிஸ்தான் புறப்படவிருக்கின்றார்.

இந்தியா, பாகிஸ்தான், பூட்டான், பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு ஆகிய நாடுகளின் தலைவர்கள இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

மாநாட்டில் ஆராயப்படவிருக்கும் விடயங்கள் குறித்து அந்த நாடுகளின வெளிவிவகார அமைச்சர்கள் பாகிஸ்தானில் கடந்த இருதினங்கள் கூடி ஆராய்ந்தனர். (ம-3)

ஜனாதிபதியின் நடவடிக்கை தேர்தல் என்றால்

## சவாலை ஏற்றுக்கொள்ள அரசு அதிகாரபூர்வமாகத் தீர்மானம்!

கொழும்பு,ஜன.3

ஜனாதிபதியின் ஜனநாயக மாற்று நடவடிக்கை பொதுத்தேர்தல் என்றால அந்தச் சவாலுக்கு முகம் கொடுத்து பொதுத் தேர்தலை எதிர்நோக்குவதென அரசு நேற்றுமுன்தினம் அதிகாரபூர்வமாகத் தீர்மானித்தது என்று வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதியின் அந்தச் சவாலை ஏற்று "சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியா அல்லது ஐக்கிய தேசிய முன்னணி அரசா" என்ற இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யும் வாய்ப்பை மகள்முன் வைத்து அரசு பொதுத் தேர்தலை எதிர்நோக்கும் எனவும் அமைச்சர் கருணாநாயக்க கூறியிருக்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசின் அரசியல் சபையின் விசேட கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் குறித்துத்தகவல் வெளியிடுகையிலேயே அவர் இவற்றைத் தெரிவித்திருக்கிறார்.

அரசியல் நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ள பிரதமரும் அரசும் இணக்கத்துக்குவர முன்வராவிடின், ஜனநாயக மாற்றுவழியைக் கடைப்பிடிக்க தான் நிர்ப்பந்திக்கப்படலாம் என்று ஜனாதிபதி கூறியிருப்பது குறித்து அரசியல் சபைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது எனவும் கூறியிருக்கும் அமைச்சர் கருணாநாயக்க, பொதுத்தேர்தல்தான் ஜனாதிபதியின் ஜனநாயக மாற்று நடவடிக்கை என்றால் அந்தச் சவாலை ஏற்றுக்கொள்வதென அரசு அதிகாரபூர்வமாகத் தீர்மானித்தது எனவும் தெரிவித்தார்.

இன்றைய அரசியல் நெருக்கடி மேலும் தொடருமேயானால் சமாதான முயற்சியைப்போன்று நாட்டின் பொருளாதாரமும் பெரும் பின்னடைவைக் காணும் என்பது இக்கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டதாகவும்அமைச்சர் கருணாநாயக்க கூறினார்.

## யாழ். இராணுவ உயர் பதவிகளில் புதிய நியமனங்கள்; இடமாற்றங்கள்

கொழும்பு,ஜன.3

யாழ். இராணுவ பிரதி கட்டளைத் தளபதியாக பிரிகேடியர் ஷாமென் குலதுங்க நியமிக்கப்பட்டிருக்கிறார். இப்பதவியை வகித்த மேஜர் ஜெனரல் வி.ரத்னசபாபதி அடுத்த மாதத்தில் ஓய்வு பெறவிருப்பதால் அவர் இராணுவத் தலைமையகத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறார்.

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்ல இராணுவத்தில் மேலும் பல நியமனங்களைச செய்திருக்கிறார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

நயினாதீவு விகாரையில் புத்தர் சிலை பிரதிஷ்டை செய்ய

## அஸ்கிரிய, மல்வத்தை பீடாதிபதிகள் திங்களன்று யாழ்ப்பாணம் வருவர்

யாழ்ப்பாணம்,ஜன.3

நயினாதீவு ரஜமகா விகாரையில் புத்த பகவானின் 4 அடி உயரச்சிலை ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை பிரதிஷ்டை செய்யப்படவிருக்கிறது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ள அஸ்கிரிய, மல்வத்தை, பீடங்களின் பீடாதிபதிகள் உட்பட 50இற்கு மேற்பட்ட பிக்குகள் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இந்த நிகழ்வை ஒட்டி பிரித் ஓதுதலும் இடம்பெறும். பலாலி படைத்தளத்தில் அன்று காலை 9.30 மணிக்கு செய்தியாளர் மாநாடு நடைபெறும்.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா இந்தநிகழ்வை ஏற்பாடு செய்துள்ளார். (ம-3)

## திறமை அடிப்படை வீதம் உயரும்; மாவட்ட மட்ட அனுமதி குறையும்

பல்கலைக்கழக அனுமதிக்கு புதிய யோசனை

கொழும்பு,ஜன,3

இவ்வாண்டில் பல்கலைக்கழகங்களுக்கு திறமை அடிப்படையில் அனுமதிக்கப்படும் மாணவர் எண்ணிக்கையை 40வீதத்திலிருந்து 60 வீதமாக அதிகரிக்க தேசிய கல்வி ஆணைக் குழு யோசனை தெரிவித்திருக்கிறது. அதேவேளை, மாவட்ட மட்டத்திலான அனுமதியை 55 வீதத்திலிருந்து 35 வீதமாகக் குறைக்கவும் யோசனை. தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பொதுக்கல்வி தொடர்பான தேசியக் கொள்கைத் திட்டமொன்றுக்கான பூரண யோசனைகளாக இந்த மாற்றங்களை தேசிய கல்வி ஆணைக்குழு முன்வைத்திருக்கிறது.

எவ்வாறாயினும், பின்தங்கிய மாவட்டங்களாக இனங்காணப்பட்டிருக்கும் மாவட்டங்களிலிருந்து தற்பொழுது தெரிவுசெய்யப்படும் 5 சத வீத மாணவர் எண்ணிக்கையில் மாற்றம் செய்யாதிருக்கவும் ஆணைக்குழு யோசனை தெரிவித்திருக்கிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, அம்பாறை, பதுளை, மொனறாகலை, அம்பாந்தோட்டை, நுவரெலியா, அநுராதபுரம், பொலன்நறுவை ஆகியவை பின்தங்கிய மாவட்டங்களாக கணிக்கப்படுகின்றன.

2006ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றும மாணவர்களில் 80 விதமானோரை திறமை அடிப்படையிலும் 20 வீதமானோரை

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் திட்டமிடல், அபிவிருத்தி செயலகம் கிளிநொச்சியில் திறப்பு

கிளிநொச்சி,ஜன.3

விடுதலைப்புலிகளின் திட்டமிடல், அபிவிருத்திச் செயலகம் நேற்று முன்தினம் முதல் கிளிநொச்சியில் செயற்படத்தொடங்கியுள்ளது. அதன் முதலாவது கூட்டம் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், திட்டமிடல், அபிவிருத்திச் செயலகத்தின் பணிப்பாளர் தூயவன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

புலிகளின் பொருளாதார ஆலோசகரும் திட்டமிடல், அபிவிருத்தி செயலக சிரேஷ்ட ஆலோசகருமான டாக்டர் ஜே.மகேஸ்வரனும் கூட்டத்தில் முக்கியமாக கலந்து கொண்டார்.

'சிரான்' பணிப்பாளரான செல்வின் இரேனியஸ், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களினதும் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரிவுகளினதும் தலைவர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

விடுதலைப்புலிகளின் கொள்கை வழிகாட்டிகளையும் வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி தேவைகளுக்கான யுக்திகளையும் இச்செயலகம் வகுக்கும். (ம)

## பலாலி உயர்பாதுகாப்பு வலயம் அருகே குடியமர விரும்புவோர் விவரம் சேகரிப்பு

பலாலி, உயர்பாதுகாப்பு வலயத்தின் முன்னணி எல்லைப்பகுதியில் இருந்து 600 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள வீடுகளில் குடியமர விரும்பும் குடும்பங்களின் விவரங்களை கிராம சேவையாளர்கள் சேகரிக்கவுள்ளனர்.

அப்பகுதியிலுள்ள வீடுகளில் மீளக்குடியமர விரும்பும் குடும்பங்களின் விவரங்களை வழங்கும்படி பலாலித் தலைமையகம் யாழ். செயலகத்தைக கேட்டுள்ளது.

இதையடுத்து மீளக்குடியமர விரும்பும் குடும்பங்களின் விவரங்களை கிராம சேவையாளர்கள் மூலம் சேகரிக்க செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசத்தில் 7ஆயிரம் வீடுகள் உள்ளன என்று பலாலி கட்டளை அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

ஆனால், அந்தப்பிரதேசத்தில் அவ்வளவு வீடுகள் இல்லை என அந்தப் பகுதிமக்கள் தெரிவிக்கின்றனர். (ம-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்


# வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகம் செயலகத்தில் நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.3

வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகம் யாழ். செயலகத்தில் நேற்றுக்காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் அலுவலகத்தை நாடா வெட்டித்திறந்து வைத்தார்.

அரச அதிபர் மற்றும் மாவட்ட மேலதிகப் பதிவாளர் பொ.ஈஸ்வரதாஸன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல், செயலகத் திட்டப் பணிப்பாளர் புசுந்தரம்பிள்ளை, பிரதம கணக்காளர் எஸ்சண்முகரட்ணம் ஆகியோர் உட்பட செயலக உயர் அதிகாரிகளும் அலுவலர்களும் நிகழ்வில் கலந்துகொண்டார். (ம-5)



வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகத்தைத் திறந்து வைத்தபின்னர் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் உரையாற்றுகிறார். உதவிப் பதிவாளர் நாயகம் (இடது) ந.சதாசிவஐயர் மற்றும் மேலதிக அரச அதிபர் (வலது) பத்தினியம்மா திலகநாயகம் போல் ஆகியோர் அருகில் உள்ளனர்.

# பதிவாளர் திணைக்களத்தின் பணிகள் பிரதேச செயலகங்களுக்கு விஸ்தரிப்பு

## யாழ். அரச அதிபர் பத்மநாதன் தெரிவித்தார்

யாழ்ப்பாணம்,ஜன.3

யாழ். செயலகத்தில் இயங்கும் பதிவாளர் திணைக்களத்தின் பணிகள் இவ்வருடம் முதல் பிரதேச செயலகங்களுக்கு பன்முகப்படுத்தப்படவுள்ளன.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன்.

வடக்கு வலய உதவிப்பணிப்பாளர் நாயக அலுவலகத்திறப்பு விழா யாழ். செயலகத்தில் அமைந்துள்ள கட்டடத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு வலய உதவிப்பதிவாளர் நாயகம் என். சதாசிவஐயர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்திற்கான காணிப் பதிவு மற்றும் இறப்புப்பிறப்புப் பதிவுகள் யாழ். செயலகத்தில் இயங்கும் உதவிப்பதிவாளர் நாயக அலுவலகத்தில் நடைபெற்றுவருகின்றன. இதனால், தூர இடங்களில் இருந்து வருகைதரும் பொதுமக்கள் இதனைப் பெறுவதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

அதுமட்டுமல்லாது தமது தேவைகளை நிறைவேற்ற வருவோர் தரகர்களிடம் ஏமாறும் நிலையும் காணப்படுகின்றது. இவற்றைத் தவிர்க்கும் வகையிலேயே இந்தப்பணிகளை பிரதேச செயலகங்களுக்கு விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக, யாழ்ப்பாணம், சங்கானை, கோப்பாய் மற்றும் நல்லூர் ஆகிய நான்கு பிரதேச செயலகங்களிலும் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் இந்தப்பணிகளை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வடக்கு வலய உதவிப்பதிவாளர் நாயத்தின் அலுவலகம் யாழ். மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளமை இப்பகுதி மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

வடக்கு வலயம் மற்றும் கிழக்கு வலயம் ஆகிய இருபகுதிகளுக்குமான உதவிப்பதிவாளர் நாயத்தின் அலுவலகம் இதுவரை மட்டக்களப்பு மாவட்டத்திலேயே இயங்கிவந்தது. இதனால், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தோர் பல இடர்பாடுகளை எதிர்கொண்டனர்.

இதனைக் கருத்திற் கொண்டு வடக்கு வலயத்திற்கு என ஓர் அலுவலகத்தை இங்கு திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் விளைவாக, வடக்குக்கான அலுவலகம் யாழ்ப்பாணத்திலும், கிழக்குக்கான அலுவலகம் மட்டக்களப்பிலும் இயங்கவுள்ளன. இதன் மூலம் அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் பயனடைவர்.

இந்த இரு அலுவலகங்களுக்குமான உதவிப்பதிவாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ள என்.சதாசிவஐயர், இரு பகுதிகளிலும் உள்ள மக்களின் தேவைகளை அறிந்து சிறப்பு சேவையாற்றி எமது மண்ணுக்கு பெருமை சேர்க்கவேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல், திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை, பிரதம கணக்காளர் என்.சண்முகரட்ணம் மற்றும் மேலதிக மாவட்டப்பதிவாளர் பி. ஈஸ்வரதாஸன் உட்பட செயலக அதிகாரிகள் கலந்துகொண்டனர். (எ-5)

## அரசாங்க அலுவலகங்களில் மனித உரிமைகள் மீறப்படுகிறதா?

### ஆராய்வதற்கு அதிகாரிகள் குழு நியமனம்

கொழும்பு,ஜன.3

அரச அலுவலகங்களுக்குத் திடீர் விஜயம் மேற்கொண்டு அங்கு இடம்பெறும் மனித உரிமைமீறல் சம்பவங்கள் தொடர்பாக ஆராய்ந்து விசாரணை செய்வதற்கென அதிகாரிகள் குழுவொன்றை மனித உரிமைகள் ஆணைக்குழு நியமித்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசேட பயிற்சிகளைப்பெற்ற அதிகாரிகளே மேற்படி விசாரணைக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இத்திடீர் விசாரணைகளின் போது மனித உரிமை மீறல் சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அதுகுறித்த அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்திற்கும் அரசாங்கத்துக்கும் அனுப்பி வைக்கப்படும். பின்னர் குற்றம் இழைத்தவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிககைகள் எடுக்கப்படும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின தலைவர் ராதிகா குமாரசாமி தெரிவித்தார். (ம-4)

## அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியக்காரர்களுக்கு

# இம்மாதம்முதல் சம்பள உயர்வு வழங்கும் சுற்றறிக்கை நேற்றுமுன்தினம் வெளியானது

அரச ஊழியர்களுக்கும் ஓய்வு பெற்றோருக்கும் சம்பள உயர்வு வழங்கும் சுற்றறிக்கை பொதுநிர்வாக, மறுசீரமைப்பு அமைச்சினால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. இச்சுற்றறிக்கை வெளியிடப்படுவதில் காலதாமதம் ஏற்படுமென முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

இச்சுற்றறிக்கையின்படி, அரச அதிகாரிகளின் சம்பளத்தில் கொடுப்பனவுகள் இன்றி கூட்டு சம்பளம் 10 வீதம் அல்லது ஆயிரத்து 250 ரூபா ஆகிய இரண்டில் எது கூடியதோ அது சம்பள உயர்வாக வழங்கப்படும்.

அரச அலுவலக தொழிலாளி ஒருவின் வருடாந்த சம்பளம் 40 ஆயிரத்து 800 ரூபாவிலிருந்து 55 ஆயிரத்து 800 ரூபாவாக உயரும். இது 36.76 சதவீத உயர்வாகும் இதன்படி மேலதிக நேரக் கொடுப்பனவு மணித்தியாலத்துக்கு 14 ரூபா 16 சதத்திலிருந்து 19 ரூபா 37 சதமாக அதிகரிக்கும்.

எழுதுவினைஞர்களின் வருடாந்த சம்பளம் 47 ஆயிரத்து 880 ரூபாவிலிருந்து 62 ஆயிரத்து 880 ரூபாவாக உயரும். இது 31.32 சதவீத உயர்வாகும். இதன்படி மேலதிக நேரக் கொடுப்பனவு 16 ரூபா 62 சதத்திலிருந்து 21 ரூபா 83 சதவீதமாக அதிகரிக்கும். ஏனைய சேவைகளுக்கான வருடாந்த சம்பளம் 97 ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து 1,12,500 ரூபாவாக உயரும். இது 15.38 சதவீத அதிகரிப்பாகும்.

2003 டிசெம்பர் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன் ஓய்வூதியம் பெறுவோரின் அடிப்படை ஓய்வூதியத்துக்கு 10 சதவீத அதிகரிப்பு வழங்க திறைசேரி அனுமதி வழங்கியிருக்கிறது.

இம்மாதம் முதல் இந்த சம்பள அதிகரிப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

# கொயிலாமனை ஊடான மந்துவில் வீதி பல நிபந்தனைகளுடன் நேற்றுத் திறப்பு

## மக்கள் போராட்டத்தால் கிடைத்த பயன்

தென்மராட்சி,ஜன.3

கொடிகாமம் கொயிலாமனை ஊடாக மந்துவிலுக்குச செல்லும் வீதி நேற்றுக் காலை பொதுமக்களின் பாவனைக்கு நிபந்தனையுடன் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்த வீதி மூடப்பட்டிருந்ததால் பாதிக்கப்பட்ட இப்பகுதியில் குடியிருக்கும் 60 குடும்பங்களும் இவ் வீதியை காலை 6.00 மணி தொடக்கம் மாலை 7.00 மணிவரை பயன்படுத்துவதற்குத் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாலை 7.00 மணிக்குப் பின்னர் இவ் வீதியைப் பயன்படுத்துவோர் அங்குள்ள காவரணில் அனுமதி பெற்று பயன்படுத்தலாமெனவும் -

இங்கு வசிக்கும் குடும்பங்கள் தவிர்ந்த ஏனையோர் இப்பகுதிக்கு வரும் வேளைகளில் அடையாள அட்டையைக் கையளிக்க வேண்டுமெனவும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை 10.30 மணிக்கு கொயிலாமனை நாவலர் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனும் 52ஆவது படையணியைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டு கலந்துரையாடினர். அதன் பின்னரே நிபந்தனைகளுடன் அந்த வீதி திறந்து விடப்பட்டது.

இப் பகுதியில் படையினரின் முகாம் அமைந்துள்ளதால் இந்த நிபந்தனை விதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. வீதி திறக்கப்பட்டதும் படை அதிகாரிகளின் வாகனங்களும் பிரதேச செயலரின் வாகனமும் இவ் வீதி வழியாக மந்துவில்வரை வந்தன என்றும் கூறுப்பட்டது.

இவ் வீதியைத் திறக்கக் கோரி நேற்றுமுன்தினம் இப் பகுதி மக்களால் தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனை அடுத்தே படையினர் நிபந்தனையுடன் வீதியைத் திறக்கச் சம்மதித்துள்ளனர். (ம-117-31)

# காணாமற்போன பெண் ஒருவர் குளத்திலிருந்து சடலமாக மீட்பு

கடந்த 27ஆம் திகதி காலையிலிருந்து காணாமற்போன பெண் ஒருவர் 6நாள்களின்பின் குளம் ஒன்றில் அழுகியநிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த மகேஸ்வரன் மகேஸ்வரி (வயது 45) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

நல்லூர் பண்டாரிக் குளத்தில் பெண்ணின் சடலம் ஒன்று கிடப்பதைக்கண்ட ஒருவர் தெரிவித்த தகவலின் படி அங்கு சென்றவர்கள் சடலத்தை மீட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அழுகிய நிலையில் மீட்கப்பட்டு யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலம் அங்கு நடைபெற்ற மரண விசாரணையை அடுத்து இறந்தவரின் கணவரிடம் கையளிக்கப்பட்டது.

இவர் ஒரு மனநோயாளி எனவும், யாழ். போதனாவைத்தியசாலை மன நோயாளர் கிளினிக்கில் சிகிச்சை பெற்று வந்தவர் எனவும் கணவனால் தெரிவிக்கப்பட்டது.

### நாவலர் மண்டபத்தில் 'முடக்கம்' நாடகம் நாளை இடம்பெறும்

செயல்திறன் அரங்க இயக்கத்தின் சமூக விமர்சனப்பாங்கான முடக்கம் நாடகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் மாலை 4.00 மணிக்கு இடம்பெறும்.

சமகால நாட்டு நிலைமைகளை நகைச்சுவை உணர்வுடன் நிகழ்த்தப்படும் இந்த நாடகத்தை தே.தேவானந்த எழுதி நெறியாள்கை செய்துளளார். மக்களின் அவலங்களை சர்வதேச தொண்டு நிறுவனங்களும் அதிகாரிகளும் எவ்வாறு பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்ற சூக்குமத்தை விமர்சன நோக்கில் நாடகம் பேசுகிறது என்று அதன் ஏற்பாட்டாளர்களான செயல்திறன் அரங்க இயக்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

### திருவாசக முற்றோதல்

யாழ்பாணம்,ஜன.3

சங்கானை வெலவில் இழுப்பைத் தாழ் முருகமூர்த்தி தேவஸ்தானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு விசேட பூசை, அபிஷேகம் திருவாசக முற்றோதல் நடைபெறும். (ம-3)

### காணிப் பதிவாளராக புதியவர் நியமனம்

யாழ் மாவட்ட காணிப்பதிவாளராக மேலதிக மாவட்டப் பதிவாளர் பொ.ஈஸ்வரதாஸன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் காணிப்பதிவாளராக கடமையாற்றிய என்.சதாசிவஐயர், வடக்கு வலயம் மற்றும் கிழக்கு வலயம் ஆகியவற்றின் உதவிப் பதிவாளர் நாயகமாக பதவி உயர்வு பெற்றுச் சென்றதை அடுத்தே அவரது இடத்திற்கு பொ.ஈஸ்வரதாஸன் நியமிக்கப்பட்டுள்ளார்.

காணிப் பதிவாளருக்கான பணிகளுடன் தற்போது கடமையாற்றும் இவர் மேலதிக மாவட்டப் பதிவாளராகவும் கடமையாற்றுவார். (ம-5)

### பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சை செங்குந்த இந்துகல்லூரியில்

திறந்த பல்கலைக்கழக பட்டப்பின் கல்விடிப்ளோமா பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்வியங்காடு செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்வி உளவியல் என்ற பாடப் பரீட்சையே இன்று நடைபெறவுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை கல்வி அடிப்படைகள் என்ற பாடப் பரப்பிலும் எதிர்வரும் 10ஆம் திகதி கல்வி தொழில்நுட்பம் என்ற பாடப்பரப்பிலும பரீட்சை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆலயங்களிலும் வீடுகளிலும் பூசைகள் தமிழ் மொழியிலேயே இடம்பெற வேண்டும்

## பேரூர் ஆதீன முதல்வர் உரை

யாழ்ப்பாணம்,ஜன.3

ஆலயங்களிலும் வீடுகளிலும் பூசைகள் அனைத்தும் தெய்வீகத்தன்மை வாய்ந்த தமிழ் மொழியிலேயே இடம்பெற வேண்டும்.

- இப்படிக் கூறினார், இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த பேரூா ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார். நேற்று வெள்ளிக்கிழமை மாலை திருநெல்வேலியிலுள்ள சைவகுருமார் பயிற்சிக் கல்லூரியில் சுவாமிகளுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய முன்றிலில் அவர் அருளுரை ஆற்றினார். அப்போதே சுவாமிகள் இப்படிக் கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ் மொழி என்பது தெய்வீகத் தன்மை வாய்ந்தது. இறைவனுக்கு மிகவும் பிடித்த மொழி இதுவாகும்.

ஆலய நிகழ்வுகள் ஆயினும்சரி, அன்றி வீட்டில் இடம்பெறுகின்ற பூசைகள் ஆயினும்சரி, அவை தமிழ் மொழியிலேயே நடத்தப்பட்ட வேண்டும் -

திருமணங்கள், புதுவீடு குடிபுகுதல் போன்ற மங்கல நிகழ்வுகளில் மட்டுமன்றி நீத்தார் கடன் போன்ற கிரியைகளும் தமிழிலேயே இடம்பெற வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை பேரூட் ஆதீனம், இந்தியாவில மேற்கொண்டு வருகிறது. இங்கு உள்ள குருமார்களுக்கும் அதற்கான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். எமது பூசைகள் அனைத்தும் தமிழிலேயே இடம்பெற வேண்டும் - இப்படி பேரூர் ஆதீன முதல்வர் தெரிவித்தார். (ம)

## உளவுத்துறை அதிகாரிகளின் கெடுபிடிகளால்

# அமெரிக்காவுக்கான விமானசேவையை பிரிட்டன் திடீரென இடைநிறுத்தியது!

லண்டன்,ஜன.3

தீவிரவாதிகளின் தாக்குதலுக்குப் பயந்து அமெரிக்க விமான நிலையங்களின் அதிகாரிகள் நடத்தும் அத்துமீறிய சோதனைகளை அடுத்து, அமெரிக்காவுக்கான விமான சேவைகளை பிரிட்டன் தற்காலிகமாகத் திடீரென நேற்று முதல் இடைநிறுத்தியுள்ளது.

அமெரிக்காவின் டல்லாஸ் விமான நிலையத்தில் தரையிறங்கிய பிரிட்டிஷ் பயணிகள் விமானத்தில் அமெரிக்க உளவுத்துறையினர் நேற்றுமுன்தினம் நடத்திய நீண்டநேரத் திடீர் சோதனைகளையடுத்தே மேற்படி முடிவை பிரிட்டன் எடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து அமெரிக்கா உத்தியோகபூர்வமாக உடனடியாக எதுவும் தெரிவிக்கவில்லை.

லண்டன் விமான நிலைய அதிகாரி ஒருவர் கூறுகையில்:-

"அமெரிக்காவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அதிகாரிகள் விமானங்களில் திடீர் சோதனை நடத்துகின்றனர். அமெரிக்கப் பாதுகாப்புக்கு ஒத்துழைக்கும் வகையிலேயே எமது விமான சேவைகளை இடைநிறுத்தியுள்ளோம். விரைவில் மீண்டும் வழமைபோல் சேவைகள் நடைபெறும்" - என்றார்.

அமெரிக்காவுக்கான விமான சேவைகள் இறுதிநேரத்தில் திடீரென நிறுத்தப்பட்டதால், பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

2001ஆம் ஆண்டு நியூயோர்க் உலக வர்த்தக மைய இரட்டைக் கோபுரம் விமானங்கள் மூலம் மோதித் தாக்கப்பட்டதையடுத்து, அமெரிக்க விமான நிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. அது தற்போது தீவிரமடைந்திருக்கின்றது.

பிரிட்டனில் இருந்து டல்லாஸ் விமான நிலையத்திற்கு நேற்றுமுன்தினம் வந்த பயணிகள் விமானத்தில் அமெரிக்க உளவுத்துறையினர் தீவிர தேடுதல் நடத்தினர்.

தரையிறங்கியவுடன் அதிரடியாக அந்த விமானத்துக்குள் ஏறிய உளவுத் துறையினர், பயணிகளையோ அல்லது விமான ஊழியர்களையோ விமானத்திலிருந்து இறங்க அனுமதிக்கவில்லை.

விமானத்திலிருந்த 247 பயணிகளிடமும், 17 ஊழியர்களிடமும் சுமார் மூன்று மணித்தியாலங்களுக்கும் மேலாகக் கடுமையான சோதனை நடந்தது. நீண்டநேரமாக இந்த விமானத்தில் சோதனை நடத்தியதற்கான காரணத்தை விமான நிலைய அதிகாரிகள் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.


ஆனால், விமானத்தில் பயணம் செய்தவர்களில் ஒருவரின் பெயர் தேடப்படும் முக்கிய தீவிரவாதியின் பெயரை ஒத்திருந்ததால் இச்சோதனை நடத்தப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுதவிர மேலும் 6 நாடுகளின் விமானங்களிலும் சோதனைகள் நடைபெற்றன.

அமெரிக்காவில் தரையிறங்கவுள்ள ஐந்து நாடுகளின் விமானங்களைக் கடத்தி, அமெரிக்கா மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்று உளவுத்துறை எச்சரிக்கை விடுத்திருந்ததை அடுத்தே அமெரிக்க அரசு தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

அனைத்து நாடுகளும் பாதுகாப்பைத் தீவிரப்படுத்துவதில் ஒத்துழைக்கவேண்டும் என்று அந்நாட்டு அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

(ஒ)



வட அமெரிக்க நாடான ஹெய்ட்டி தனது 200ஆவது சுதந்திர தினத்தை நேற்றுக் கொண்டாடியது. பிரான்ஸின் ஆதிக்கத்தில் இருந்த ஹெய்ட்டி, உலகில் கறுப்பினத்தவரின் முதல் குடியரசு நாடாகும்.

மேற்கத்தைய நாடுகளுக்கு கறுப்பினத்தவர் அடிமைகளாகச் செல்வதைத் தடை செய்த முதல் நாடும் ஹெய்ட்டி ஆகும். ஹெய்ட்டியில் தற்போது அரசுக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் இடையே நடந்துவரும் மோதல்களில் உயிரிழப்புகள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேஷியா, மெக்ஸிக்கோ, தாய்வான் புத்தாண்டு தினத்தில் பூகம்பத்தால் பாதிப்பு!

ஜகார்த்தா,ஜன.3

இந்தோனேஷியா, மெக்ஸிக்கோ, தாய்வான் ஆகிய மூன்று நாடுகளிலும் ஒரேநாளில் - புத்தாண்டு தினத்தில் - நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்தோனேஷியாவில் பாலித் தீவிலும், மெக்சிக்கோவில் அகப்புல்கோ நகரிலும், தாய்வானின் தென்பகுதியிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

கடலில் மையம்கொண்டிருந்த நிலநடுக்கம் மேற்படி நாடுகளைத் தாக்கியது என்று மெக்ஸிக்கோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், நிலநடுக்கத்தின் காரணமாக மேற்படி மூன்று நாடுகளிலும் எவரும் உயிரிழக்கவில்லை. ஆனால், சிலர் சிறுகாயமடைந்தனர்.

மேற்படி நாடுகளில் ஏற்பட்ட நிலநடுக்கம் சக்திவாய்ந்ததாக இருந்தபோதும், அங்குள்ள கட்டடங்களின் உறுதி காரணமாகவே நிகழவிருந்த அனர்த்தம் தவிர்க்கப்பட்டது என்று கூறப்படுகின்றது.

ஈரானிய பூகம்பப் பேரழிவு உலக நாடுகள் அனைத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு முன்னரே புத்தாண்டு தினத்தில் மேற்படி மூன்று நாடுகளிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

மேற்படி நாடுகளில் புத்தாண்டைக் கோலாகலமாக கொண்டாடிய மக்களின் உற்சாகத்தை இந்த நிலநடுக்கம் பாழாக்கிவிட்டது.

இந்தோனேஷியாவின் பாலித் தீவில் நள்ளிரவில் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. அங்குள்ள லோம்பாக் பகுதியே நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டது.

6.1 ரிச்டர் அளவில் பதிவாகிய இந்த நிலநடுக்கத்தில் சில கட்டடங்கள் இடிந்தன.

புத்தாண்டைக் கொண்டாடுவதற்காக சுற்றுலாத் தளமாக பாலித் தீவிற்கு வந்திருந்த வெளிநாட்டவர்கள் தமது அறைகளை விட்டு அலறியபடி ஓட்டமெடுத்தனர் என்று கூறுகிறார் அங்கிருந்த வெளிநாட்டு நிருபர் ஒருவர்.

தாய்வானிலும் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் கட்டடங்கள் சில சேதமடைந்தன என்று அந்நாட்டு அதிகாரி ஒருவர் கூறினார். இங்கு ஏற்பட்ட நிலநடுக்கம் 5.7 ரிச்டர் அளவில் பதிவாகியது.

"நிலநடுக்கத்தால் பல கட்டடங்கள் விரிசலடைந்தன. கடலில் ராட்சத அலைகள் எழுந்தன. கடல் நீண்டநேரம் கொந்தளிப்பாக இருந்தது" - என்று தாய்வான் அதிகாரி ஒருவர் கூறினார்.

மெக்ஸிக்கோவில் 6.3 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தை உணர்ந்ததும் வீடுகளில் இருந்தவர்கள் வெட்ட வெளிகளை நோக்கி ஓட்டமெடுத்தனர்.

அங்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால், தலைநகரின் பல பகுதிகள் இருளில் மூழ்கின.

கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன. வீதிகள் இரண்டாகப் பிளவுபட்டன. இதனால், வாகனங்கள் பயணிக்கமுடியாத நிலை அங்கு ஏற்பட்டது. பயணத்தை மேற்கொண்டிருந்த வாகனங்கள் அனைத்தும் வீதி ஓரங்களில் நிறுத்தப்பட்டன.

1985ஆம் ஆண்டு இங்கு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 10 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டனின் 'பீகிள்' ஆய்வுக்கலம் செவ்வாய்க் குழியில் விழுந்தது?

லண்டன்,ஜன.3

பிரிட்டன் அனுப்பிய 'பீகிள்-2' ஆய்வுக்கலம் செவ்வாய்க் கிரகத்திலுள்ள குழியில் தவறுதலாக விழுந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது, எனினும், இதனை விஞ்ஞானிகள் உறுதிசெய்யவில்லை.

பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிக்கு சவால் விடுக்கும் வகையில், செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்யும் முயற்சியில் இறங்கினர். அதற்கான 'மார்ஸ் எக்ஸ்பிரஸ்' விண்கலத்துடன் இணைந்து 'பீகிள்-2' ஆய்வுக் கலத்தை விண்ணில் ஏவினர்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் விண்கலத்தில் இருந்து பிரிந்த பீகிள் ஆய்வுக்கலம், படு வேகமாக செவ்வாயின் தரையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது, திடீரென விண்கலத்துடனான அதனது தொடர்புகள் துண்டிக்கப்பட்ட தகவலை விண்கலம், 'ஈசா' ஆய்வுமையத்திற்கு அனுப்பியது.

கிறிஸ்மஸ் தினத்தில் செவ்வாயில் தரையிறங்கத் திட்டமிடப்பட்ட ஆய்வுக்கலம், இன்னமும் அங்கு தரையிறங்கவில்லை என்று கூறப்படுகின்றது. தரையிறங்கியதும். ஆய்வுக் கலத்திலிருந்து விண் கலத்திற்கு சமிக்ஞை (ரொக் இசை) அனுப்புவதற்கு ஏற்ற வகையில் ஆய்வுக் கலத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆனால், சமிக்ஞை இதுவரை கிடைக்காததால், அது இன்னமும் தரையிறங்கவில்லை என்றும், தொடர்ந்து வரும் நாள்களில் அது தரையிறங்கலாம் என்று விஞ்ஞானிகள் கூறினர்.

ஆனால், இப்போது அந்த ஆய்வுக்கலம் செவ்வாயிலுள்ள இரண்டாயிரம் அடி ஆழமுள்ளதாகக் கருதப்படும் 'இசிபிஸ் பிளனிற்றா' என்ற குழிக்குள் விழுந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இந்த குழிக்குள் விழுந்திருந்தால், ஆய்வுக் கலத்திலிருந்து தகவல்கள் வெளிவர முடியாது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அதேநேரம் -

'மார்ஸ் எக்ஸ்பிரஸ்' விண்கலம் தற்போது செவ்வாய்க் கிரகத்திற்கு சுமார் 200 கி.மீ. உயரத்தில் வட்டமிட்டபடி அந்த கிரகத்தை ஆய்வு செய்துவருகின்றது. இந்த விண்கலம் 'இசிபிஸ் பிளனிற்றா' குழிக்கு மேலாகப் பறந்து ஆய்வு செய்யும்.

அத்தருணம்,பீகிள் ஆய்வுக்கலம் இந்த குழிக்குள் விழுந்திருந்தால் அது குறித்து விண்கலத்திலிருந்து தகவல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# வால் நட்சத்திரத்தின் துகள்களை சேகரிக்கின்றது அமெ. விண்கலம்

வால் நட்சத்திரத்தின் துகள்களைச் சேகரிக்க உள்ளது அமெரிக்க விண்கலமான 'ஸ்டார்டஸ்ட்' இந்த விண்கலம் 2006ஆம் ஆண்டு பூமிக்குத் திரும்பும் என்று வாஷிங்ரன் பல்கலைக்கழகத்தின் 'ஸ்டார்டஸ்' தலைமை ஆராய்ச்சியாளர் டான்பிரவுன்லீ தெரிவித்தார்.

'ஸ்டார்டஸ்ட்' ஆய்வு விண்கலத்தை அமெரிக்காவின் நாஸா நிறுவனம் 5 ஆண்டுகளுக்கு முன் விண்ணில் செலுத்தியது.



'ஸ்டார்டஸ்ட்' விண்கலத்தையும் வால்நட்சத்திரத்தையும் சித்திரிக்கும் ஓவியம்

இலங்கை நேரப்படி இன்று நள்ளிரவு 1.40 மணி அளவில் இந்த விண்கலம் வால் நட்சத்திரத்துகள்களைச் சேகரிக்கும் இன்றைய தினம் 'வைல்ட் - 2' என்ற வால் நட்சத்திரமும் 'ஸ்டார்டஸ்ட்' விண்கலமும் 300 கி.மீ. தொலைவுக்குள் மணிக்கு 21 ஆயிரத்து 960 கி.மீ. வேகத்தில் ஒன்றையொன்று அண்மிக்கின்றன.

5-கி.மீ. விட்டமுடைய வால்நட்சத்திரம் பந்து வடிவத்தில் உள்ளது. இரண்டும் அருகே வரும்போது வால் நட்சத்திரத்தைச் சுற்றியுள்ள துகள்களின் ஒளிவட்டம் ஆய்வு விண்கலத்தைக் கடந்து செல்லும். அப்போது அந்தத் துகள்களைச் விண்கலம் சேகரித்து வைத்துக்கொள்ளும். துகள்களைச் சேகரிப்பதற்கான கருவி தயார் நிலையில் உள்ளது.

# வைகோவின் பிணை மனு சில தினங்களில் தாக்கல்

எதிர்வரும் 6ஆம் திகதிக்கு பிறகு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பிணை மனுத்தாக்கல் செய்ய விருப்பதாகக் கட்சியின் முன்னாள் மத்திய அமைச்சர் கண்ணப்பன் தெரிவித்தார்.

வைகோவை நேற்றுச் சிறையில் சந்தித்துப் பேசினார் கண்ணப்பன். கட்சிப் பிரமுகர்களிடம் கலந்தலோசித்த பின்னர் வைகோ இம்முடிவை எடுத்திருப்பதாகவும் அவர்தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வருகிறது. அதனால், தேர்தல் பணிகளை மேற்கொள்ள வைகோ வெளியில் இருந்தால்தான் நன்றாக இருக்கும் என கட்சிப் பிரமுகர்கள் வைகோவை வலியுறுத்தி இருந்தனர்.

வைகோவுடன் பொடா சட்டத்தின கீழ் கைதான ம.தி.மு.கவினர் 8பேர் தாக்கல் செய்த பிணை மனு ஜனவரி 6ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது. அதன் முடிவு தெரிந்தபின்னர் வைகோ பிணை மனுத் தாக்கல் செய்வார் எனத் தெரிகிறது.

# அமெரிக்க உளவு விமானங்கள்: வடகொரியா கடும் கண்டனம்

கடந்த மாதம் மட்டும் 180 தடவைகள் அமெரிக்க உளவு விமானங்கள் தமது வான் பரப்பில் பறந்தன என்று வடகொரியா குற்றஞ்சாட்டி கடும் கண்டனமும் தெரிவித்திருக்கிறது.

அத்துடன், கடந்த திங்கட்கிழமை மட்டும் யூ-2 ரக அமெரிக்க விமானம் தமது வான்பரப்பில் நாள் முழுவதும் பறந்து உளவு பார்த்தது என்றும் வடகொரியா கூறியிருக்கிறது.

அமெரிக்க உளவு விமானங்கள் தமது வான்பரப்பை ஆக்கிரமித்துள்ளதை வைத்துப்பார்க்கும்போது ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி தமது நாட்டின் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்த முனைகிறது என்று வடகொரிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடகொரியா அடிக்கடி இது போன்ற குற்றச்சாட்டை கூறிவருவது வழக்கம். ஆனால், இவற்றிக்கு அமெரிக்கா ஒருபோதும் பதிலளிப்பது இல்லை. அதேபோல் இந்தத் தடவையும் வடகொரியாவின் குற்றச்சாட்டு குறித்து அமெரிக்கா எதுவும் தெரிவிக்கவில்லை.

வடகொரிய இராணுவ நடவடிக்கைகளை தான் தொடர்ந்து கண்காணித்து வருவதாக மட்டும் அமெரிக்கா கூறிவருகிறது.

## 'சார்க்' அமைச்சர்கள் கூட்டம் ஆரம்பம்

'சார்க்' அமைப்பில் உள்ள நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் நேற்றுத் தொடங்கியது. இன்றும் இந்தக் கூட்டம் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை 'சார்க்' உச்சி மாநாடு தொடங்குகிறது. அக்கூட்டத்தில் பல்வேறு வரைவு ஒப்பந்தங்கள் தாக்கல் செய்யப்பட உள்ளன. அவற்றை இறுதி செய்யும் பணியில் அமைச்சர்கள் இறங்கியுள்ளனர்.

'சார்க்' நாடுகளுக்கு இடையே தடையற்ற வர்த்தகம், பயங்கரவாதம் தொடர்பாக 1987இல் கொண்டுவரப்பட்ட சார்க் உடன்படிக்கைக்கு துணை உடன்படிக்கை உள்ளிட்டவற்றுக்கான வரைவை அமைச்சர்கள் இறுதி செய்கிறார்கள்.

(ஒ)

# சவூதியை ஆக்கிரமிக்க அமெரிக்கா முனைந்ததாம்!

சவூதியின் எண்ணெய் வளத்தைக் கைப்பற்றுவதற்காக அமெரிக்காவும், பிரிட்டனும் இணைந்து அந்த நாட்டின் மீது தாக்குதல் நடத்தி, அந்த நாட்டைக் கைப்பற்ற 1973ஆம் ஆண்டு முனைந்தன என்று லண்டன் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. இனிவரும் காலங்களிலும் எண்ணெய் வளத்தைக் குறிக்கோளாக வைத்து சவூதி மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பேரழிவு ஆயுதங்கள் உள்ளன என்று தெரிவித்து ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்து, அந்த நாட்டின் எண்ணெய் வளத்தைக் கைப்பற்றியது. அமெரிக்காவின் அடுத்த குறி வடகொரியாவா? அல்லது சிரியாவா? என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், சவூதி அரேபியா மீதும் குவைத் மீதும் படையெடுக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது என்று அந்தப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

தீவிரவாதிகளின் செயற்பாடுகள் இந்த நாடுகளில் அதிகரித்துவிட்டன என்றும் -

அமெரிக்காவின் பாதுகாப்புக்காகவே இந்தத் தாக்குதலை நடத்துவதாகவும் -

அமெரிக்கா காரணம் கூறமுற்படும் என்று அப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

அரபுலகின் எண்ணெய் வளத்தைக் கைப்பற்றவே அமெரிக்கா முனைகிறது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

05-12-2003 இல் காலமாகிய



## முருகேசு ஆழ்வாப்பிள்ளை

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் நாளை (04-01-2004) ஞாயிற்றுக கிழமை காலை 7 மணியளவில் நுணுவில் பிள்ளையார் கோயிலின் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதிலும் அதைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் முற்பகலில் நடைபெறவுள்ள வீட்டுக் கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் முதலானவற்றிலும் கலந்துகொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும அன்புடன் அழைக்கின்றோம்.

(26696)(34-12-17-32)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

குலானை வளவு,
துன்னாலை மேற்கு, கரவெட்டி.

# கௌரி கொமினிக்கேசன் ஆதரவில்

சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் நடத்தும்

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

காலம்: 24, 25 (சனி, ஞாயிறு)
ஜனவரி 2004

இடம்: இராமநாதன் கல்லூரி மைதானம்,
மருதனார்மடம்.

***விண்ணப்பப் படிவம் கிடைக்கும் இடங்கள்:***

1. கௌரி கொமினிக்கேசன்
   கே.கே.எஸ்.வீதி, மருதனார்மடம்.
2. அருண்ஸ்
   ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(25-24-12-17) (சி-32400)

**விண்ணப்ப முடிவு திகதி: 15.01.2004**


# ST.ANTONEYS TOURS

05.01.2004 இல் பாடசாலை சேவை ஆரம்பமாகிறது.

- சென். பற்றிக்ஸ்
- சென். ஜோன்ஸ்
- கொக்குவில் இந்துக் கல்லூரி
- யா/மத்திய கல்லூரி
- யா/இந்துக் கல்லூரி
- வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை
- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ஆகிய பாடசாலைகளுக்குப் போக - வர வாகன வசதி தேவைப்படுவோர் முற்கூட்டியே பெயர்களைப் பதிவுசெய்யவும்.

*தொடர்புகளுக்கு:* 59, நீதிமன்ற வீதி, மல்லாகம்.
☎ 077 6179097

(26702) (24-12-17)



# தங்கப் பரிசுகள்

"யசோ" நிறுவனத்தினர் தமது வாடிக்கையாளர்களிடையே நடத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

| | |
|---|---|
| முதலாம் பரிசு : | இல. 6466 |
| இரண்டாம் பரிசு : | இல. 5614 |
| மூன்றாம் பரிசு : | இல. 6044 |

பத்து (10) ஆறுதல் பரிசுகள்:
6498, 5213, 5789, 6999, 6115,
5016, 5978, 5435, 6824, 5026

☞ பரிசுக்குரியவர்கள் ஆதாரங்காட்டி பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும்.

**JASO (PVT) LTD,**

*35, Kannathiddy Raod, Jaffna.*

(32-12-17) (26700)


# மரண அறிவித்தல்

## செல்லப்பா சின்னத்தம்பி

நீர்வேலி மேற்கு, நீர்வேலியைச் சேர்ந்த செல்லப்பா சின்னத்தம்பி நேற்று (02.01.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காமாட்சியின் அன்புக் கணவரும் சிவலட்சுமி (இந்தியா), சிவபாலசிங்கம், சிவஞானம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் மகாலிங்கம், தனேஸ்வரி, ஜெககாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் உஷா (இந்தியா), இசா (இந்தியா), தவரூபன் (கனடா), யசோகரன், சிந்துஜா, ஜெனகன் (கனடா), தரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2004) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி மேற்கு,*
*நீர்வேலி,*
*இராசவீதி, கரந்தன்.* (26701) (25-24-12-17)

தகவல்:
இ.சிவபாலசிங்கம்
(மகன்).


# COMPUTER EXPRESS

## Institute of Information Technology

இலங்கையில் தமிழ்மொழிமூலம் வெளிவரும் **கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ** கணனிச் சஞ்சிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி முதலாவது கிளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் புலமைப்பரிசில் திட்டம் - 2004**

புத்தாண்டுப் பரிசாக எமது அனைத்து கணனி கற்கைநெறிகளுக்கும் 80% கட்டணக் குறைப்புச் செய்வதில் பெருமையடைகின்றோம்.

| *பாடநெறிகள்* | | *பாடநெறிக் கட்டணம்* | *செலுத்த வேண்டிய கட்டணம் (20%)* |
|---|---|---|---|
| Diploma in Computer Science | - 4 மாதம் | 6000 | 1200 |
| Honours Diploma in Computer Science | - 4 மாதம் | 8000 | 1600 |
| Advance Diploma in Computer Science | - 6 மாதம் | 10000 | 2000 |
| Diploma in Webpage Designing | - 4 மாதம் | 6000 | 1200 |
| Diploma in Auto CAD 2000 | - 3 மாதம் | 5000 | 1000 |
| Diploma in Graphics Designing | - 4 மாதம் | 6000 | 1200 |
| Diploma in Desk Top Publishing | - 4 மாதம் | 5000 | 1000 |
| Diploma in Hardware Engineering | - 3 மாதம் | 5000 | 1000 |
| Diploma in Accounting Package | - 3மாதம் | 7000 | 1400 |

80% OFF

*Individual Courses*
- ▲ Fox Pro, Pascal
- ▲ C Language/C++
- ▲ Java
- ▲ Internet & E.mail
- ▲ Microsoft Visual Basic 6.0
- ▲ Adobe Page Maker 6.5
- ▲ Microsoft Office 2000
- ▲ Corel Draw 10

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்பட்ட கணனிப் பயிற்சி

*For Kids*
- ● Kids Program
- ● Advanced Kids Program

20ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுசெய்து கொள்ள முடியும்

90% கழிவு

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிக் கருத்தரங்கு 2003 இல் பங்குபற்றி சான்றிதழ் பெற்ற அனைவருக்கும் 90% கட்டணக்குறைப்பு வழங்கப்படும்.

வகுப்புக்கள் ஆரம்பம்: Batch 1: 08-01-2004
Batch 2: 12-01-2004
Batch 3: 15-01-2004
Batch 4: 30-01-2004

COMPUTER EXPRESS
**Institute of Information Technology.**

(Maniam's Building)
இல.152/1. சிராம்பையடி வீதி, யாழ்ப்பாணம்.
(Off Stanly Rd.)
0777-278883.

(26697)(34-12-17-32)


## சமையல் எரிவாயு விலை அதிகரிக்கும்

கொழும்பு,ஜன.3

தாம் சந்தைப்படுத்தும் சமையல் எரிவாயுவின் விலையை இந்த ஆண்டில் அதிகரிக்க 'ஷெல்' மற்றும் 'லொவ்ஸ்' ஆகிய நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன. கொள்கலன் (சிலின்டர்) ஒன்றுக்கு 25 ரூபா விலை அதிகரிப்பு இருக்கும் என்று கூறப்படுகிறது.

"வற்"வரியை 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அரசு உயர்த்தியிருப்பதே சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்படக் காரணம் என்று கூறப்படுகிறது. (ஒ)

## கட்டளைத் தளபதியிடம் முறையிட நடவடிக்கை

கைதடி,ஜன.3

உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள மறவன்புலோ, தனங்கிளப்பு ஆகிய பகுதிகளைச்சேர்ந்த மக்கள் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியைச் சந்தித்து தமது இன்னல்களை முறையிட முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

இதற்காக கட்டளைத் தளபதியைச் சந்திக்கத் தமக்கு வசதி செய்து தருமாறு தென்மராட்சி சனசமூகநிலையங்களின் சமாசம் ஊடாக யாழ்அரச அதிபரிடம் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ-75)

## ஓட்டோ சாரதிகளுக்கு அங்கத்துவ அட்டைகள்

யாழ்ப்பாணம்,ஜன.3

வலி.மேற்கு, வலி.தெற்கு பகுதிகளில் உள்ள ஓட்டோ சாரதிகளுக்கு அங்கத்துவ அட்டைகளை வட பிராந்திய ஓட்டோ சங்கம் வழங்கவுள்ளது.

வலி.மேற்குப் பகுதியில் உள்ள 50 ஓட்டோ சாரதிகளுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமையும், வலி தெற்குப் பகுதியில் உள்ள 30 ஓட்டோ சாரதிகளுக்கும் எதிர்வரும் 6 ஆம் திகதியும் அங்கத்துவ அட்டைகள் வழங்கப்படவுள்ளதாகவும்-

தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள ஓட்டோ சாரதிகளுக்கான அங்கத்துவ அட்டைகள் இந்தமாத இறுதிப் பகுதிக்குள் வழங்கப்படும் எனவும் -

ஓட்டோசங்கம் தெரிவித்துள்ளது. (ஒ-6)

## புதிய . அதிபர் நியமனம்

சுழிபுரம்,ஜன.3

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலத்தின் அதிபராக எஸ். நடராசா பொறுப்பேற்றுள்ளார். வித்தியாலய அதிபராகக் கடமையாற்றி வந்த கா.நடராசா ஓய்வுபெற்றதைத தொடர்ந்து புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ-28)

## சுகாதார நிலைய கட்டடம் கையளிப்பு

வலி.கிழக்கு,ஜன.3

அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் அச்செழு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் புனரமைக்கபட்ட ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் நேற்று வெள்ளிக்கிழமை சுகாதாரத் திணைகளத்திடம் கையளிக்கப்பட்டது.

இதற்கான உத்தியோகபூர்வ நிகழ்வில் வலி.கிழக்கு உதவிப் பிரதேச செயலாளரான திருமதி சா. அஞ்சலாதேவி, க.இராசதுரை, திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கதிரைமலைநாதன், கோப்பாய் பொதுச்சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனைப் பொறுப்பதிகாரி மு.சிவபாலன் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.(ஒ-180)


# விற்பனைக்கு

மோட்டறோலா தொலைபேசி, நல்ல நிலையில் உள்ள SHARP FAX இயந்திரமும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
**M.P.தர்மலிங்கம்**
பத்திரிகை முகவர்,
உடுப்பிட்டிச் சந்தி.

(26698)



# ஆசிரியர் தேவை

Hair Style, ஐசிங் முறையாக பயிற்றுவிக்கக்கூடிய செய்முறையில் அனுபவமும் ஆற்றலும் மிக்க ஒருவர் ஒப்பந்த அடிபபடையில் பணிபுரிய தேவைப்படுகிறார்.

5.1.2004 திங்கள் மாலை 3மணிக்கு நேரில் வரவும்.

"துரிகை
செங்குந்தா வீதி,
கல்வியங்காடு.

(சி-32397)(32)

உதயன்

## வலையில் வீழ்ந்த ஹக்கீம்!

இந்த நாட்டைத் தீராத பிணியாகப் பற்றிப் பிடித்திருக்கும் இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வுகாண வசதியாக இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து இதுவரை பிரஸ்தாபிக்கப்பட்டு வந்தது.

ஆனால், இப்போதோ இடைக்கால நிர்வாகத்தை ஸ்தாபிப்பதற்கு வசதியாக இடைக்கால அரசமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது குறித்து யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்தான் இந்த யோசனையை முன்வைத்திருக்கின்றார்.

ஈழத்தமிழ் மக்களின் உடனடி - அன்றாட - பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்காக, அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்கின்ற இடைக்கால நிர்வாக ஏற்பாடு ஒன்றை - 'தன்னாட்சி நிர்வாக அதிகாரசபை யோசனை' என்ற பெயரில் - புலிகள் முன்வைத்துள்ளனர்.

இலங்கை அரசமைப்பின் வரையறைக்குள் நின்று தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவுசெய்கின்ற இறுதித் தீர்வுத் திட்டத்தையோ, இடைக்கால நிர்வாக ஏற்பாடுகளையோ அமைத்துக்கொள்ளமுடியாது என்பதைப் புலிகளின் தலைமை ஏலவே பல தடவைகள் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது.

இப்போதுள்ள அரசமைப்பு ஈழத்தமிழரின் இணக்கத்தோடு கொண்டுவரப்பட்டதல்ல. அது சிங்களப் பேரினவாதத்தால் தமிழர்கள் மீது திணிக்கப்பட்டது. அதைத் தமிழர்கள் ஏற்கவேயில்லை. எனவே, அந்த அரசமைப்புக்கு உட்பட்ட தீர்வைத்தான் உருவாக்கமுடியும் என்ற வலியுறுத்தல் தமிழர்களைக் கட்டுப்படுத்தமாட்டாது என்பதையும் விடுதலைப் புலிகள் ஏற்கனவே திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டனர்.

எனவே, இந்தப் பின்னணியில் நோக்கும்போது வடக்கு - கிழக்கிற்கு சாத்தியப்பாடான இடைக்கால நிர்வாகம் ஒன்றை உருவாக்குவதற்கும், ஏற்கனவே ஒஸ்லோவில் இணக்கம் காணப்பட்டவாறு சமஷ்டி அடிப்படையில் இறுதித் தீர்வு ஒன்றை எட்டுவதற்கான வாய்ப்பான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும் இடைக்கால அரசமைப்பு ஒன்றைக் கொண்டுவருவது ஓரளவு சரியான மார்க்கமாக இருக்கக்கூடும்.

இந்த வகையில் பார்த்தால் அமைச்சர் ஹக்கீமின் இந்த முன்மொழிவில் சிறிது அர்த்தம் இருப்பதாகக் கொள்ளலாம். ஆனால், அமைச்சர் ஹக்கீம் இந்தத் திட்டத்தை முன்வைப்பதற்குப் பின்னணியில் இருக்கும் காரணங்களையும் நாம் வரிசைப்படுத்திப் பார்க்கத்தான் வேண்டும்.

★ இடைக்கால அரசமைப்பு என்ற யோசனை மூலம் முஸ்லிம்களுக்குத் தனிநிர்வாக அலகுத்திட்டம் என்ற தனது விடாப்பிடி நிலையை வலிமைப்படுத்த அவர் முயல்கின்றார். அதுவும் வடக்கு - கிழக்கில் மட்டுமல்லாமல் அதற்கு வெளியிலும் இருக்கின்ற - நேரடி நிலத் தொடர்பற்ற - பிரதேசங்களை ஒன்றிணைத்து பாரியதிட்டம் ஒன்றுக்கு அவர் அடிகோல எத்தனிக்கின்றார்.

★ சமாதானப் பேச்சுக்களில் மூன்றாம் தரப்பு என்ற தங்களின் கோரிக்கை நிறைவேறாமல் போகலாம் என்ற யதார்த்தத்தை ஏற்கவேண்டிய இக்கட்டு உருவாகி வருவதை உணர்ந்துள்ள அவர், எப்படியும் இந்தப் பேச்சுக்களில் தங்களுக்கு ஒருதரப்பு என்ற அந்தஸ்து கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தலைகீழாக நிற்கின்றார். அதன் வழிமுறை ஒன்றே இடைக்கால அரசமைப்பு யோசனை. சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றும் அரசும் புலிகளும் அந்தப் பேச்சுக்களில் தங்களை இணைக்க மறுத்தாலும் இடைக்கால அரசமைப்பு என்ற தங்கள் யோசனை ஏற்கப்பட்டு அதற்கான பேச்சு முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டால் அதில் தங்களுக்கு ஒரு தரப்புக் கட்டாயம் - நிச்சயம் - கிடைக்கும் என்று ஹக்கீம் நம்புகின்றார்.

★ இந்தியாவில் - பாண்டிச்சேரியில் - உள்ளது போன்ற யூனியன் பிரதேச ஆட்சிமுறையை அவர் உதாரணம் காட்டுகிறார். ஒத்ததாக இங்கு நேரடிநிலத்தொடர்பற்ற பல்வேறு இடங்களில் - பல்வேறு திக்குகளில் - இருக்கும் முஸ்லிம் பிரதேசங்களை ஒன்றிணைத்து முஸ்லிம் அதிகார அலகு ஒன்றை உருவாக்குவதும் அமைச்சர் ஹக்கீமின் தற்போதைய யோசனைகளின் பின்னணியில் இருப்பது தெளிவாகப் புலனாகுகின்றது.

அண்மையில் இந்திய அதிகார வர்க்கத்தின் அழைப்பை ஏற்று அங்கு சுற்றுலா ஒன்றை மேற்கொண்ட அமைச்சர் ஹக்கீம், அந்தச் சுற்றுலாவை முடித்துக்கொண்டு நாடு தரும்பிய ஓரிரு நாள்களில் இந்தப் புதுக்கதையை - புது யோசனையை - கொழும்பில் செய்தியாளர்களை அழைத்து அவிழ்த்துவிட்டிருக்கின்றார்.

இந்த எத்தனத்தின் பின்னணி - ஏவுதல் - முடக்கிவிடும் முயற்சி - எங்குள்ளது, அதன் நோக்கம் என்ன என்பதையெல்லாம் உய்த்துணர்வது ஒன்றும் கஷ்டமானதல்ல.

இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்கப்படும் முயற்சிகளில் ஈழத்தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாகப் பங்குபற்றுபவர்கள் புலிகள். ஆயுதப்பலத்தோடும் தமது மக்களின் ஆதரவுப்பலத்தோடும்,பலமான நிலையில் உறுதியோடு நின்று அவர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இவ்விடயத்தில் தமிழர் தரப்பைப் பலவீனப்படுத்த உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சில சக்திகள் கங்கணங்கட்டிக் கொண்டு செயற்படுகின்றன என்பது யாவரும் அறிந்த உண்மை.

தமிழர் தரப்புடன் முரண்டுபிடிக்கும் சக்திகளைத் தேடிப்பிடித்துத் தூண்டிவிடுவது இச்சக்திகளின் போக்கு.

தமிழர் தரப்பைப் பலவீனப்படுத்த முஸ்லிம்களின் தரப்பை அவர்களுக்கு எதிராகத் திருப்பி விடுவது ஒரு வழமை. கிழக்கில் தமிழர் - முஸ்லிம்கள் குழப்பங்கள் இந்தப் பின்னணியில்தான் தூண்டிவிடப்படுகின்றன என்பதை ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளோம்.

அத்தகைய சக்திகளின் வலையில் முஸ்லிம்களின் அரசியல் தலைவர்கள் தாமே எனக்கூறிக்கொள்ளும் ஹக்கீம் அணியும் வீழ்ந்துவிட்டது என்பதே பிந்திய நிலைவரமாகும்.

# வீட்டிற்கொரு புத்தகம் வழங்கி நூலகங்களை உருவாக்குங்கள்!

## யாழ். - நல்லூர் கோட்ட மகளிர் பொறுப்பாளர் உரை

வலி.வடக்கு,ஜன.3

வீட்டிற்கு ஒரு புத்தகத்தைக் கொடுத்து நூலகம் ஒன்றை உருவாக்கினால் அப்பகுதியில் கல்வி ஒளியைப் பரப்பமுடியும்.

யாழ். நல்லூர் கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூமகள் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். கந்தர்மடம் ஆத்திசூடி சனசமூக நிலையப் பொன்விழாவும் நூலகத் திறப்புவிழாவும் சமீபத்தில் நிலையத் தலைவர் எஸ்.நவரட்ணம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே பூமகள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு சனசமூக நிலையமும் நூலகம் ஒன்றை உருவாக்க வேண்டியது அவசியமாகும். இதற்கு உதவுவது ஒவ்வொருவருடைய கடமையுமாகும். இந்த வகையில் சனசமூக நிலையம் ஒன்றின் அங்கத்தவர்கள் ஆளுக்கொரு புத்தகத்தை நூலகத்துக்கு வழங்கவேண்டும்.

இதன்மூலம் எத்தனை அங்கத்தவர்கள் இருக்கின்றார்களோ அத்தனை புத்தகங்கள் நூலகத்துக்குக் கிடைக்கும். இதன்மூலம் ஒரு புத்தகத்தைக் கொடுக்கும் அங்கத்தவர் பல நூல்களை வாசிக்கவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

பொது அமைப்புக்களில் பெண்களின் அங்கத்துவம் மற்றும் பங்களிப்பு என்பன குறைவாகவே காணப்படுகின்றன. பெண்கள் பொது அமைப்புக்களில் இணைந்து தமது பங்களிப்பைச் செய்வதுடன் சமூகத்திற்கும் பயன்பாடு உடையவர்களாக இருக்கவேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் நூலகங்கள் அமையுமாக இருந்தால் அப்பகுதி கல்வி அறிவில் சிறந்து விளங்கும். இன்று சந்திக்குச் சந்தி இளைய தலைமுறை தேவையற்ற முறையில் நின்று வீண்பொழுது போக்குகிறது. இது சமூகப் பிரச்சினையாக உள்ளது.

இந்த நிலை மாறவேண்டும். இளைய தலைமுறையினர் சமுதாயத்துக்கு முன்னோடிகளாக விளங்கவேண்டும். தத்தமது பகுதிகளில் நூலகங்களை அமைப்பதில் இளைய தலைமுறையினர் அதிக அக்கறை காட்டவேண்டும். தமது ஓய்வு நேரங்களை அவர்கள் நூலகங்களில் கழிப்பதன் மூலம் நற்பிரஜைகளாக உருவாக முடியும்.

- என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் நூலகக் கட்டடத்தை உயர்தொழில்நுட்ப நிறுவன கணக்காளர் க.இராஜேஸ்வரன் திறந்துவைத்தார்.

யாழ். நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சீ.வி.கே.சிவஞானம், கிராம அலுவலர் வ.சந்திரசேகரம் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினார்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ஒ-86)

### புதுவருட தினத்தன்று

## ஆலய வழிபாட்டுக்குச் சென்ற யுவதியின் சைக்கிள் திருட்டு!

யாழ்ப்பாணம்,ஜன.3

புதுவருட தினத்தன்று ஆலய வழிபாட்டுக்குச் சென்ற யுவதி தனது சைக்கிளைப் பறிகொடுத்தார்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் திருநெல்வேலி சிவன் கோயிலுக்குச் சென்ற யுவதி ஒருவர் தனது சைக்கிளை ஆலய முகப்பில் நிறுத்தி வைத்துவிட்டு ஆலயத்துள் சென்றுள்ளார்.

பின்னர் வழிபாடுகளை முடித்துக்கொண்டு வெளியே வந்த யுவதி சைக்கிளைத் தேடியபோது அது திருட்டுப் போயிருந்தமை தெரியவந்தது. இதுபற்றி ஆலயச் சூழலில் நின்ற ஏனையவர்களுக்கு அந்த யுவதி தெரிவித்த போதும் திருட்டுப்போன சைக்கிளைக் கண்டுபிடிக்க முடியவில்லை எனக் கூறப்பட்டது.

இந்தச் சைக்கிளுடன் சேர்த்து அண்மைக்காலத்தில் மூன்று சைக்கிள்கள் மேற்படி ஆலயப் பகுதியில் திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-10)

## கச்சாய் உபதபாலகத்தை சொந்த இடத்தில் இயக்குக!

### மாகாண அஞ்சல் அதிபருக்கு மகஜர்

வலி.வடக்கு,ஜன.3

கச்சாய் உபதபாலகத்தை மீண்டும் பழைய இடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் வடமாகாண அஞ்சல் அதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த காலத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளை அடுத்து தபாலகம் அமைந்திருந்த பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டது.

இதன் காரணமாக குறிப்பிட்ட தபாலகம் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள தனியார் வீட்டில் இயங்கி வருகிறது.

தற்பொழுது இராணுவமுகாம் அகற்றப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மீண்டும் கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகில் தபாலகத்தை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

- என்று அதில் உள்ளது. (எ-86)

## மேய்ச்சலுக்காக ஆடு, மாடுகளை வயல்களுக்குள் செல்லவிடாதீர்!

வலி.மேற்கு,ஜன.3

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்காக வயல் நிலங்களுக்குள் கொண்டு செல்லவேண்டாமென்றும். கட்டாக்காலிகளாக அவற்றைத் திரியவிடவேண்டாம் என்றும் - வலி.மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொன்னாலை, சுழிபுரம், மூளாய் ஆகிய இடங்களிலுள்ள வயல் நிலங்களுக்குள் கடந்த சில தினங்களில் உள் நுழைந்த ஆடு, மாடுகள் நெற்பயிர்களை நாசம் செய்துள்ளதாக விவசாயிகள் பிரதேச செயலரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்தே, பிரதேச செயலர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார் என பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பெருமளவு செலவில் பயிர்ச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளின் நன்மை கருதி ஆடு, மாடுகளை வயல்களுக்குள் கொண்டுசெல்லாமல் தடுக்கவேண்டியது அவசியமானது என்றும் -

வயல்களுக்குள் காணப்படும் ஆடு, மாடுகளின் உரிமையாளர்களுக்கு கிராம அலுவலர்கள் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் -

பிரதேச செயலர் அறிவித்துள்ளார் என்றும் - கூறப்பட்டது. (எ-175)

### நாளை

மார்கழி 20
ஞாயிற்றுக்கிழமை
(04.01.2004)
திதி : துவாதசி
பி.ப. 4.02 வரை
நட்சத்திரம்: கார்த்திகை
முற்பகல் 9.14 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம்: 9.31-11.01
ராகுகாலம்: 5.01-6.31
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நட்பு நிலைத்திருந்தால் நன்மைக்குக் குறைவில்லை.

## கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையை போக்குவரத்துக்குத் திறக்கக் கோரிக்கை

கேரதீவு - சங்குப்பிட்டி இடையேயான கடல்வழிப்பாதையை மீண்டும் பொதுப்போக்குவரத்துக்குத் திறந்துவிடவேண்டும் .

- இவ்வாறு கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கை அடங்கிய மகஜரை யாழ்.மாவட்ட அபிவிருத்தி நல உரிமைச் சங்கத் தலைவர் செ.பத்மநாதன், யாழ். அரச அலுவலர்மூலம் பாதுகாப்பு அமைச்சு உட்பட சம்பந்தப்பட்ட அமைச்சகங்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

பூநகரிக்குச் செல்லவேண்டிய பொதுமக்கள் தற்போது பல்வேறு சிரமங்களையும் அனுபவிக்க நேரிடுகின்றது.

ஒரு முழுநாளை அவர்கள் பிரயாணத்துக்காகச் செலவிடவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது.

ஆகவே, கேரதீவு - சங்குப்பிட்டி கடல்பாதை மீண்டும் பொதுப்போக்குவரத்துக்குத் திறந்துவிடப்படவேண்டும். இந்தப் பாதை திறக்கப்படுமாக இருந்தால் பொதுமக்களின் பயண நேரம் கணிசமாகக் குறைந்துவிடும்.

- இவ்வாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது கேரதீவுப் பகுதியில் இராணுவம் நிலைகொண்டுள்ளது. அப்பகுதிக்கு மக்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. (ஒ-86)

## உலக வங்கி அனுசரணையுடன் ஆங்கில ஆசிரியர்களுக்குப் பயிற்சி

பாடசாலைகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஆங்கிலக் கல்வியில் மேலதிக பயிற்சிகளை வழங்கி, ஆங்கிலக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கல்வி அமைச்சுடன் இணைந்து உலக வங்கியின் அனுசரணையுடன் பிரிட்டிஷ் கவுன்ஸில் ஆங்கிலப் பயிற்சிகளை வழங்கவுள்ளது.

கடந்த வருடம் மே மாதம் எட்டாம் திகதி கல்வி அமைச்சினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட ஆங்கில பாட ஆசிரியர்களுக்கே இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட இந்த ஆசிரியர்களுக்கு இம்மாதம் 15ஆம் திகதியளவில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் வைத்து பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ்ப்பாணம் ஆங்கில பாடக்கல்விப் பிரிவுக்குப் பொறுப்பாக உள்ள உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், உலக வங்கியின் அனுசரணையுடன், யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரிட்டிஷ் கவுன்ஸில் மூலமாகத் தெரிவுசெய்யப்பட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறிகள் பெப்ரவரி மாத இறுதியில் ஆரம்பமாகி நடைபெற உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (எ-152)

### வயல் நிலங்களில் நீர் இல்லை

## நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் நெல்லுக்கு நீர் பாய்ச்சும் விவசாயிகள்

வலி.தெற்கு,ஜன.3

காலபோக நெற்செய்கைக்குத் தேவையான நீர், வயல் நிலங்களில் இல்லாமையால் நீர்இறைக்கும் இயந்திரங்கள் மூலம் நெற்பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் பணிகளை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர்.

குறிப்பாக வலிகாமம் பகுதி விவசாயிகள் இது தொடர்பான பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுவருவதை அவதானிக்கமுடிகிறது.

பயிர்களுக்குத் தேவையான மழை பெய்யாத காரணத்தால், யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்கள் கருகும்நிலை ஏற்பட்டுள்ளது.

உடுவில், கந்தரோடை, சங்குவேலி, மானிப்பாய், சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி, சங்கரத்தை போன்ற பிரதேசங்களில் உள்ள பெரும்பாலான வயல்நிலங்களில் நெற்பயிர்கள் தற்போது கதிர்தோன்றும் நிலையில் காணப்படுகின்றன. பல வயல்நிலங்களில் நெற்பயிர்கள் கதிர்கள் வெளிவந்த நிலையிலும் காணப்படுகின்றன.

தொடர்ச்சியான மழை இன்மையால் இப்பிரதேச வயல்நிலங்களில் வெள்ளம் வற்றி நிலம்காய்ந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால், நெற்பயிர்கள் கருகும் நிலையிலும், கதிர்வந்த பயிர்கள் பதர்களாக மாறவும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

வசதி உள்ள விவசாயிகள் தமது வயல் நிலங்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் கொண்டு நீர் பாய்ச்சி வருகின்றனர். (எ-152-175)

# நாளைய நிகழ்வுகள்

சண்டிலிப்பாய்,ஜன.3

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகள், அரசினர் மதிய மருந்தகங்கள் மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களின் பொறுப பதிகாரிகளுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே.ரி.சிவபாதம் தலைமையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் இவ்வாண்டில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத் திட்டங்கள், அரசினர் வைத்தியசாலைகள எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் பல்வேறு விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்படவுள்ளன. (எ-10-135)

✪ ✪ ✪

காரைநகர்,ஜன.3

காரைநகர் மணிவாசகர் சபையினால் காரைநகர் பாடசாலை மாணவர்களுக்கிடையில் இவ்வாண்டு நடத்தப்பட்ட சைவசமய பாடப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுபெற்ற மாணவர்களுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

மணிவாசகர்சபை வருடாந்தம் நடத்தும் மணிவாசகர் விழா நாளை ஆரம்பமாகித் தொடர்ந்து மூன்று தினங்கள் காரைநகர் ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின்போதே தரம் ரீதியான முதல் ஐந்து இடங்களைப்பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.(எ-10-73)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. (எ-10-51)

✪ ✪ ✪

காரைநகர்,ஜன.3

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை தென்னிந்திய தவில் வித்துவான்களின் நாதஸ்வர தவில் கச்சேரி நடைபெறவுள்ளது.

திருவாதிரை உற்சவத்தின் ஏழாம நாளான நாளை தென்னிந்திய தவில விற்பன்னர்களான திருப்புங்கூர் ரி.ஜி முத்துக்குமாரசாமி திருக்கடவூர் ஜி.பாபு ஆகியோருடன் ஈழத்தின் பிரபல தவில நாதஸ்வர கலைஞர்களும் இணைந்து கானமழை பொழியவுள்ளனர். (எ-10-73)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,ஜன.3

மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலையின் ஆதரவில நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மருதடி விநாயகர் ஆலய அன்னதான மண்டபத்தில் திருவாசக விழா நடைபெறவுள்ளது. (எ-10)

✪ ✪ ✪

சுழிபுரம்,ஜன.3

பண்ணாகம் ஆலடி வைரவப் பெருமான் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. (எ-10-28)

## சித்த மருத்துவ மாணவர்களுக்கான கலந்துரையாடல்

இடம் : சித்த மருத்துவத்துறை, கைதடி.

காலம் : 05.01.2004 திங்கட்கிழமை காலை10 மணி

விடயம் : எதிர்வரும் கல்வி ஆண்டு ஆரம்பமாவது பற்றி. ஆராயப்படுவதுடன் முக்கிய விடயங்களும் ஆராயப்படும்.

செயலாளர்
சி.ம.மா.ஒன்றியம்

(26694)(35-21-13-34)

## வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்
## 2004 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி பற்றிய அறிவித்தல்

2004 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியானது புதிய வரிமதிப்பீட்டின் பிரகாரம் சென்ற வருடம் (2003 ஆம் ஆண்டு) 3 ஆம் கந்தாயத்திலிருந்து நடைமுறையில் இருந்த அறவீட்டு விகிதமே மாற்றமின்றி முதலாம் கந்தாயத்திலிருந்து நடைமுறையில் இருக்கும்.

**2004 ஆம் ஆண்டுக்கான**

1ஆம் காலாண்டுக்கான வரி
மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னரும்

2ஆம் காலாண்டுக்கான வரி
யூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னரும்

3ஆம் காலாண்டுக்கான வரி
செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னரும்

4ஆம் காலாண்டுக்கான் வரி
டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னரும் செலுத்தப்படவேண்டும்.

**விசேட கழிவு**

1. 2004 ஆம் ஆண்டின் 4 காலாண்டுகளுக்குமான தொகையை 31.01.2004 இற்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்துபவர்களுக்கு 10 சதவீதகழிவு வழங்கப்படும்.
2. 2004ஆம் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டுக்குமான தொகையைக் காலாண்டின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துபவர்களுக்கு 5 சதவீத கழிவு வழங்கப்படும்.
3. தண்டம்

*குறிப்பிட்ட காலாண்டுக்கான வரியை அக்காலாண்டு முடிவடைவதற்கு முன் செலுத்தப்படாதவிடத்து,*

1. வெற்றுக்காணிகளுக்கும் குடியிருப்பு ஆதனங்களுக்கும் 15 சதவீத தண்டமும்
2. வியாபார நோக்கத்துக்கான ஆதனங்களுக்கு 20சதவீத தண்டமும் அறவிடப்படும்.

*வரிவிலக்கும் ஆட்சேபனையும்*

சேதமடைந்துள்ள, காலியாகவுள்ள ஆதனங்களுக்கான வரிவிலக்கின் பொருட்டும் விதிக்கப்பட்ட ஆதனவரிக்கெதிரான ஆட்சேபனையின் பொருட்டுமான எழுத்துமூல விண்ணப்பங்கள் 31.01.2004 இற்கு முன்னர் எனக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

வரியிறுப்பாளர்களுக்கு சுகாதாரவசதி போன்ற அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு இவ்வரி நிலுவைகளைச் செலுத்தி எமக்குப்பூரண ஆதரவு தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஏ.எம்.ஜோசெப்,
செயலாளர்,
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
01-01-2004 (C/32399)(34-21-13)

## பத்திரிகையாளர் சங்கம் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.3

மாகாணப் பத்திரிகை ஒன்றுக்கு எதிராக வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் முறைப்பாடு செயதுள்ளது.

மேற்படி சங்கத்துக்கும் அதன் தலைவருக்கும் அபகீர்த்தி உண்டாகக்கும் விதத்தில் சம்பந்தப்பட்ட பத்திரிகை செய்திக்கட்டுரை ஒன்றை வெளியிட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் சங்கம் ஒன்று ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருப்பது இதுவே முதற்தடவை என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

## இடமாற்றம்

வலி.கிழக்கு,ஜன.3

இதுவரை காலமும் கோப்பாய் பொதுச்சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி வந்த டாக்டர் எஸ்.இந்திரராஜா, யாழ்.போதனா வைத்தியசாலையின் மார்புநோய் சிகிச்சை நிலையத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பதில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றி வந்த மு.சிவபாலன் தற்போது கோப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-180)

## கிணறுகள் புனரமைப்பு

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவில். கடந்த ஆண்டு கெயர் நிறுவனத்தின் வேலைத் திட்டதின் கீழ் 13 விவசாயக் கிணறுகள் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில புனரமைக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புத்தூர் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் 5 கிணறுகள் ஒரு லட்சம் ரூபா செலவிலும் அச்செழு கிராம சேவையாளர் பிரிவில் 5 கிணறுகள் ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா செலவிலும், சிறுப்பிட்டி கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் மூன்று கிணறுகள் 75ஆயிரம் ரூபா செலவிலும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.(ஓ-180)

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.3

யாழ். சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் தென் இந்தியாவின் பேரூர் ஆதீன முதல்வர் அருட்திரு. சாந்தலிங்கம் இராமசாமி அடிகளாரைக் கௌரவிக்கும் விழா நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு சைவப் புலவர் வ.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

தேவாரம், அடிகளார் அருளுரை, ஆசீர்வாதம் பெறுதல் முதலியன விசேட நிகழ்வுகளாக நடைபெறும். (எ-10-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.3

வலி.தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் யாழ். பிராந்திய முன்னாள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமியின் சேவைநலன் பாராட்டு விழாவும், முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-10)

★ ★ ★

அச்சுவேலி,ஜன.3

ஞானக்குழந்தைகள் பாலர் முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ். வீதியிலுள்ள ஞானக்குழந்தை இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இல்லத்தினால் நடத்தப்படும் சகல முன்பள்ளிகளின் ஆசிரியர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு ஞானக்குழந்தை இல்லத்தின் தலைவர் எஸ்.பி.காசிநாதன் கேட்டுள்ளார். (எ-10)

★ ★ ★

அச்சுவேலி,ஜன.3

தென்மராட்சிப் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான இந்த ஆண்டுக்குரிய விளையாட்டுப்போட்டிகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இப்போட்டிகளில் கிரிக்கெட் போட்டிகள் இன்றும், நாளை ஞாயிற்றுக் கிழமையும் கைதடி சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. (எ-10-117)

# சு.க. - ஜே.வி.பி. கூட்டு அமைக்க விமல் வீரவன்ஸ எம்.பி. காலக்கெடு

"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி. கூட்டுக் குறித்து இந்த மாதத்துக்குள ஒரு முடிவு எடுக்கப்படவேண்டும். அப்படி முடிவு ஒன்று எடுக்கப்படாவிட்டால் தொடர்ந்து கூட்டுப்பற்றி பேசிக் கொண்டிருக்க முடியாது."

ஜே.வி.பி யின் பிரசாரச் செயலாளரும் எம்.பியுமான விமல் வீரவன்ஸ இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கின்றார் என செய்தி ஊடகம் ஒன்று அறிவித்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான உத்தேச கூட்டுக்குறித்து நீண்டகாலமாக இருதரப்புமே பேசிவருகின்றன. கூட்டுப் பற்றிய இறுதி முடிவு எடுப்பதற்கு அவ்வப்போது காலக்கெடுக்களும் தீமானிக்கப்படுகின்றன. ஆனால், கூட்டு இன்னும் இறுதியாக்கப்படாமல் இழுபட்டுக்கொண்டே செல்கின்றது.

தற்போது ஜனவரி 21ஆம் திகதிக்கு முன் இறுதிமுடிவு எடுப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்திகதிக்கு முன்னர் கூட்டுக் குறித்து இறுதிமுடிவு எடுக்கப்படாவிட்டால் இனிமேலும் இதுகுறித்துப் பேசுவதற்குத் தாம் தயாரில்லை என்று விமல் வீரவன்ஸ கருத்துத் தெரிவித்திருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எப்படியும் ஒரு தீர்மானத்திற்கு உடனடியாக வரவேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இதற்கிடையில் -

ஸ்ரீ.ல.சு.க. - ஜே.வி.பி. இடையிலான உத்தேச கூட்டுக்கு சுதந்திரக் கட்சிக்குள் கடும் எதிர்ப்புச் கிளம்பியிருக்கின்றது.

ஜே.வி.பியுடன் கூட்டுவைத்தால் சு.க.வின் தனித்துவம் அழிந்துவிடும். எனவே, ஜே.வி.பியுடன் கூட்டு வைக்கக்கூடாது என்பதை வலியுறுத்திப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அறுபது எம்.பி.களின் கையெழுததுடன் கூடிய மகஜர் ஒன்றை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் கட்சித் தலைவியும், பொ.ஐ. மு.தலைவியும், ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளிக்கப்போகிறோம்."

- இப்படி பொ.ஐ.முன்னணி எம்.பியான சந்தன கத்தியாராய்ச்சி தெரிவித்திருக்கிறார்.


## அரியாலை ஐக்கிய கழகம்

நடத்தும் மாவட்ட ரீதியிலான

- கரப்பந்தாட்டம் (Set up)
- வலைப்பந்தாட்டம்

விண்ணப்ப முடிவுதிகதி: 05-01-2004

விண்ணப்பிக்க வேண்டிய முகவரிகள்:

திரு,K.நாகேந்திரம்
செயலாளர், அ.ஐ.கழகம்

திரு.C.S.செல்வராஜா
தலைவர், அ.ஐ.கழகம்

(சி-32395) (32-21-16-13)

ஸ்ரீ ராம ஜெயம்

ஸ்ரீமந் நாராயணனின் அருள்பெற்று சுபீட்சமாக வாழ்க!

ஓங்கியுலகளந்த உத்தமன் பேர் பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராட்டினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்குபெருஞ் செந்நெலூடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண் படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்க குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோரெம்பாவாய்

- ஆண்டாள் திருப்பாவை -

ஸ்ரீவைகுண்ட ஏகாதசி விரத தினமாகிய இன்று ஸ்ரீமந் நாராயணனின் திருவருள் பெற்று அனைவரும் சுபீட்சமாக வாழ பிரார்த்திக்கின்றோம்.

யாழ். பழச்சோலை.
இல.16. நவீன சந்தை. யாழ்ப்பாணம்.

தே.கரன்.

(26691)(34-21-13-16)

## ALTERNATIVE MEDICINES
## மாற்றுமுறை மருத்துவம் "அக்குபஞ்சர்"

சகலவிதமான நாள்பட்ட நோய்களுக்கும் அக்குபஞ்சர் மருத்துவத் துறையில் 24 வருட அனுபவம் உள்ளவரும் அக்குபஞ்சர் போதனாசிரியருமான

**Dr.V.P.சுந்தரராஜன் Ph.D.(A.M.)**
**(IBAM / R.M.P. A-9750)**

அவர்களால் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

விரைவில் வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன:-

DOCTOR OF ALTERNATIVE MEDICINE (3 years)
(Tamil, English Medium)
DIPLOMA IN NURSING (23rd Batch)
(Nurses - Aide) (1 Year)

6 மாதகால பாடத்திட்டம். 6 மாதகால செய்முறைப்பயிற்சி (செய்முறைப் பயிற்சி நகரின் பிரபா வைத்தியசாலையில் நடைபெறும்.)

விரிவுரைகள் பதிவுபெற்ற தாதிய உத்தியோகத்தர் (R.N.O)களால் நடத்தப்படும் விசேட ஆங்கிலப் பயிற்சியும் உள்ளடக்கப்பட்டது.

விவரங்களுக்கு:

**சாயி மெடிக்கல் அக்கடமி**

இல. 10. பருத்தித்துறை வீதி. அரச தாதியர் பாடசாலை முன்பாக
யாழ்நகர்.

(26682) (25-21-13-16)


## மரண அறிவித்தல்

### செல்வி சுவாமிநாதன் ஜெயரஞ்சிததேவி

ஏழாலை வடக்கைச் சேர்ந்த செல்வி சுவாமிநாதன் ஜெயரஞ்சிததேவி அவர்கள் 01-01-2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதன் (ஆசிரியர்) மற்றும் திருமதி ரஞ்சிதமலர் (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அருமைப் புத்திரியும காலஞ்சென்றவர்களான ஜெகநாதன், ஜெயரஞ்சிதநாதன் மற்றும் ஜெயானந்தம் (சுவிஸ்), ஜெயசேகரன் (சுவிஸ்), திருமதி ஜெயேந்திராதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பருத்தித்துறை புலோலி மேற்கு, மணல், தம்பசிட்டியிலுள்ள அ.துரைசிங்கம் அவர்களின் இல்லத்தில் இன்று (03-01-2004) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சு.ஜெயசேகரன் (சகோதரன்)

*மணல், தம்பசிட்டி,*
*புலோலி மேற்கு, புலோலி.* (26695) (21-13-16)

பொறியியல் பீட அனுமதி:

# பாதிக்கப்பட்ட யாழ்.மாணவர் வழக்குத் தாக்கல் செய்யமுடிவு

யாழ்ப்பாணம்,ஜன.3

யாழ். மாவட்டத்துக்கான பொறியியல் பீட அனுமதிக் கோட்டாவில் இடம்பெற்ற பாரபட்சம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்வது என பாதிக்கப்பட்ட மாணவர்கள் முடிவுசெய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் நேற்று முன்தினம் கூடி எதிர்கால நடவடிக்கை குறித்து ஆராய்ந்து இந்த முடிவை எடுத்துள்ளனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ யாழ்ப்பாண மாவட்டத்திற்கான பொறியியல்பீட அனுமதிக் கோட்டாவில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தவறுதலான முடிவுகளை எடுத்துள்ளது. அதாவது, 93/94 அடிப்படை கல்வி ஆண்டில் ஒதுக்கப்பட்ட மாவட்டக்கோட்டா எண்ணிக்கையைவிடக் குறைந்த அளவில் யாழ். மாவட்டத்திற்கான கோட்டா வழங்கப்பட்டுள்ளது இதனை யாழ். மாவட்ட நாடாளுமன்ற அங்கத்தவர்களின் கவனத்திற்குச்சமர்ப்பிப்பதோடு, உரிய கோட்டா எண்ணிக்கையைப் பெற்றுத்தருமாறு அவர்களிடம் கோரிக்கை விடுதல்.

★ சட்டவல்லுநர்களின் ஆலோசனையுடன் சட்டத்தரணிகளை அணுகி, உண்மையான கோட்டா எண்ணிக்கையைப் பெறுவதற்காக நீதிமன்றம் செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளல்.

★ உயர்கல்விப்பீட கல்விச்சமூகம் இதுபற்றிய விளக்கத்தை எல்லோருக்கும் பத்திரிகை வாயிலாக அளிக்கவேண்டும். இது அவர்களின் தார்மீகக் கடமையும்கூட. இந்த விடயத்தில் பல்கலைக்கழக மாணவர் அவை எங்களுடன் ஒத்து நிற்பதை நாம் பாராட்டுவதோடு, இலக்கை அடையும்வரை அவர்களது உதவியை வேண்டுவது. இதேவேளை, தமது இலக்கை அடைவதற்கு பாடசாலை அதிபர் சங்கமும், தமிழர் ஆசிரியர் சங்கமும் அதரவைத்தருவதோடு, மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனைகளையும் தரவேண்டும் என மாணவர்கள்கூடி வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## திருமண மண்டபம் நிர்மாணிப்பு

அச்சுவேலி,ஜன.3

அச்சுவேலியில் கல்யாண மண்டபம் ஒன்று நிறுவப்படுகிறது. அச்சுவேலி - பருத்தித்துறை பிரதான வீதியில் பஸ் நிலையத்துக்கு அண்மையில் இந்த மண்டபம் கட்டப்பட்டு வருகிறது.

காலமான தனது தாய், தந்தையரின் நினைவாக அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த தனிநபர் ஒருவரால் "இராஜமாணிக்கம்" கல்யாண மண்டபம் நிறுவப்பட்டு வருகிறது. (ஒ-11)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,ஜன.3

தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், 'போரூட்' நிறுவனமும் இணைந்து குடாநாட்டிலுள்ள 100 முதன்மை ஆசிரியர்களுக்கும் ஆயிரத்து 246 முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் முன்பள்ளி அபிவிருத்திப் பயிற்சிகளை வழங்கவுள்ளன.

முதற்கட்டமாக இம்மாதம் குடாநாட்டிலுள்ள 5கல்வி வலயங்களிலுமுள்ள 100 முதன்மை ஆசிரியர்களுக்கும் பின்னர் முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பயிற்சி நெறிகளை வடக்கு-கிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையமும் வலய, பிரதேச இணைப்பாளர்களும் வலய மட்ட முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் நெறிப்படுத்தவுள்ளனர். (எ-4)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வலி.மேற்கு,ஜன.3

வலிகாமம் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கும் -

விவசாயக் குழுக் கூட்டம் அன்றையதினம் காலை 11.30 மணிக்கும் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டங்களில், பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (எ-175)

## ஏகாதசி விரதம்

யாழ்ப்பாணம்,ஜன.3

அளவெட்டி ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலயத்தில் சுவர்க்க வாயில் வைகுந்த ஏகாதசி உற்சவம் இன்று சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு சுவர்க்கவாயில் தரிசனத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி ஆசிரியர் சைவப் புலவர் கந்த.சத்தியதாசன் சொற்பொழிவு நிகழ்த்துவார். கலாவிநோதன சின்னமணி குழுவினரின் வில்லிசை சிறப்பு நிகழ்வாக இடம்பெறும்.(எ-ரி)

## படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஜன.3

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் ஆதரவுடன் 'ஜஹ்னு பருவா'வின நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட "குஹ்க்ஹல்" (விடுதலையின் விலை) என்னும் அஸாமிய மொழித் திரைப்படம், ஆங்கிலத் துணைத்தலைப்புகளுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படும்.

படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசா, க.சட்டநாதர் ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் கலந்துரையாடல் இடம்பெறும். ஆர்வலர்கள் எவரும் வருகைதந்து பயன் பெறமுடியும் என இணைப்பாளர் தெரிவிக்கின்றார். (எ-ரி)

# வாசகர் திருமுகம்

## பரீட்சைகளில் 'கல்குலேட்டர்' பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்

கணிகருவிகள் (கல்குலேட்டர்கள்) வெகு சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் இக்காலத்தில் ஜி.சீ.ஈ (சாதாரணதர), ஜி.சீ.ஈ (உயர்தர) பரீட்சைகளிற்குத் தோற்றும் மாணவர்கள் கணிகருவிகள் பயன்படுத்தக்கூடாது என்று பரீட்சைத் திணைக்களம் தடைசெய்வது காலத்துக்கு ஒவ்வாத நடவடிக்கையாகும்.

இவ்விடயம் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்துடன் தொடர்பு கொண்டபோது, ஏழை மாணவர்கள் ஏழ்மை காரணமாக கணிகருவிகள் வைத்திருக்கமாட்டார்கள் எனவும், கணிகருவிகள் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டால், செல்வம்மிகுந்த குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் பரீட்சைகளில் வறிய மாணவர்களைப் பின்தள்ளிவிட்டு முன்னேற வாய்ப்பு ஏற்படும் எனவும், பரீட்சைகளில் சம சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்பதற்காகவே கணிகருவிகள் பரீட்சைகளில் பயன்படுத்த அனுமதிக்கப்படவில்லை எனவும் கூறினார். கணிகருவிகள் நடைபாதைகளில் 70ரூபாவிற்கு விற்கப்படும் பொருளாக இன்று காணப்படுகின்றன. இருப்பினும், சில மாணவர்கள் இதனை வாங்கமுடியாத வறுமை நிலையில் இருக்கலாம். மேலும், கிராமங்களில் கணிகருவிகளை வாங்கமுடியாமலும் இருக்கலாம். எனவே, பரீட்சைத் திணைக்களம், பரீட்சைகளின்போது பரீட்சார்த்திகளுக்கு மடக்கை வாய்ப்பாடுகளை மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொடுத்து உதவுவதுபோல, பரீட்சைத் திணைக்களமே தேவையான கணிகருவிகளைக் கொள்வனவுசெய்து பரீட்சார்த்திகளின் உபயோகத்திற்கு வழங்கிவிட்டு, அவற்றை மீளப் பெற்றுக்கொள்ளலாம் என்ற ஆலோசனையை முனவைத்தேன். அவர் இந்த ஆலோசனையை நிராகரிக்கவில்லை. பெருமளவில் மாணவர்களும் பெற்றோரும் கடிதங்கள் மூலம் பரீட்சைத் திணைக்களத்திடம் கணிகருவிகளை பரீட்சார்த்திகளின் பயன்பாட்டிற்கு வழங்கும் நடைமுறையை ஏற்படுத்துமாறு கோரினால், இத்தகைய நடைமுறை ஏற்பட்டு எதிர்காலத்தில் மாணவர்கள் பெரும்பயனடையும் வாய்ப்பு உண்டு.

*திருநெல்வேலி.* **- ச.ஆ.கோபாலமூர்த்தி.**

## போட்டியில் வெற்றியீட்டியும் பரிசு பெறமுடியாத நிலை

யாழ். தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் கடந்த வருடம் மாவட்ட மட்டத்தில் கலாசாரப் போட்டிகளை நடத்தியது. அப்போட்டியில் முதல் இரண்டு இடங்களைப் பெற்றவர்களை தேசியமட்டப் போட்டியிலும் பங்குபற்றவும் மன்றம் ஒழுங்குசெய்தது. தேசிய மட்டப்போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பலர் வெற்றியீட்டினர். ஆனால், வெற்றியீட்டியவர்கள் பற்றிய பெயர் விவரங்களை உரிய நேரத்தில் வெற்றியாளர்களுக்கு பெற்றுக்கொடுக்க யாழ். இளைஞர்சேவைகள் மன்றம் தவறியது. இதில் ஒரு முக்கிய விடயம் என்னவெனில், தமக்கு பரிசில்கள் கிடைக்கக்கூடும் என எண்ணிய சில போட்டியாளர்கள் அப்பெயர் விவரங்களைப் பெற்றுத் தரும்படி யாழ். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தலைமை அதிகாரியிடம் கேட்டிருந்தனர். அவர் அதற்கு "நான் அதைப்பெற்றுத்தரமுடியாது நீங்களே அதனை மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திலிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும் எனக் கூறியிருந்தார். ஆனால், பின்பு எவ்வாறோ அவர் சில வெற்றியாளர்களின் பெயர்களைப் பெற்று பத்திரிகைகளுக்கு வழங்கியிருந்தார். அதில்கூட பல வெற்றியாளர்களின் பெயர்கள் தவறவிடப்பட்டிருந்தன. அவ்வாறு தவறவிடப்பட்ட பெயர்களை உடைய வெற்றியாளர்களுக்கான உறுதிப்படுத்தும் கடிதமும் தேசிய விருது விழாவிற்கான அழைப்பிதழ்களும் விழாவிற்கு இரண்டு நாள்களின் பின்னரே கிடைத்தன. இவ்விடயம் தொடர்பாக யாழ். கிளை அதிகாரியிடம் சம்பந்தப்பட்டவர்கள் நேரில் சென்று கேட்டபோது, தனக்கும் இச்செயற்பாடுகளுக்குமிடையில் எந்தத் தொடர்புமே இல்லை எனவும் தான் அதற்குப் பொறுப்பாளி இல்லை எனவும் கூறினாராம்.

நீண்டகாலத்தின் பின்னர் இம்முறையே தேசிய மட்டப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அதிகமானோர் பங்குபற்றி வெற்றியும் பெற்றனர். யாழ். கிளையினரின் தான்தோன்றித்தனத்தாலும், பொறுப்பற்ற நிலையினாலும் வெற்றியீட்டிய யாழ். மாவட்ட போட்டியாளர்கள் பலர் 24.12.2003 அன்று மகரகமவில் இடம்பெற்ற விருதுவிழாவில் பங்குபற்றி விருதினையும் பணப்பரிசினையும், சான்றிதழையும் அமைச்சர் ஜோன்சன் பெர்னான்டோவிடமிருந்து பெறுகின்ற அரிய வாய்ப்பினை இழந்தனர்.

இப்படியான தவறுகள் இனிமேலாவது' யாழ். மாவட்டத்தில் இடம் பெறாதிருக்க அரச அதிபரோ அல்லது ஏனைய உயரதிகாரிகளோ தான் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

*பல்கலைக்கழகம்.* **பாதிக்கப்பட்ட வெற்றியாளன்.**

# மக்கள் முகம்



கொழும்பு விவேகானந்தா மேட்டுத்தெரு ராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பஜனைக் குழுவினர் நடத்திய 12ஆவது ஆண்டுப் பூர்த்திப் பெரு அருள்விழாவில் கவிஞர் வேலணை வேணியனுக்கு 'கவிப்புயல்' பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்டது.

சமய, சமூகப்பணிகளில் தீவிர ஈடுபாடு கொண்ட இவர், கொழும்பில் இயங்கும் இந்து சமய அமைப்புக்களில் முக்கிய பதவிகளை வகித்து வருகின்றார். கவிதை அரங்குகளிலும் பங்கேற்று வருகின்றார். (ம-3)

* * *



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் ஸ்ரீதரன் 01.12.2003 அன்று திருகோணமலை நீதிவான் எஸ்.தியாகேந்திரன் முன்னிலையில், அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் இளைப்பாறிய உதவிப் பொறியியலாளரும், கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் ஆவார். மேலும், இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினராகவும், சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளைக்குழு உறுப்பினராகவும், உடுவில் தெற்கு கிராம அபிவிருத்திச் சபைத் தலைவராகவும், உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோயில் பரிபாலனசபையின் செயலாளராகவும் சேவையாற்றிய சிறந்த சமய, சமூக சேவையாளருமாவார். (எ-5)

* * *



மானிப்பாயைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபரான கந்தன் செல்லத்துரை, அகில இலங்கை சமாதான நீதிவானாக கொழும்பு மாவட்ட நீதிபதி ஜனாப்.எம்.வை.எம்.இர்ஸடீன் முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சமாசத்தின் செயலாளராகவும், இணுவில் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். கரணவாய் தெற்கு மணியகாரன் அ.மி.த.க. பாடசாலையில் ஆசிரியராகவும், சுதுமலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபராகவும் இவர் கடமையாற்றியிருந்தார்.

சமய, சமூகப் பணிகளில் முன்னின்று உழைத்து வரும் இவர், மானிப்பாய் வடகிழக்கு பாரதி சனசமூக நிலையம், கிராம முன்னேற்றச் சங்கம் ஆகியவற்றின் தலைவரும், கிராமிய உற்பத்திக்குழு, பாலர் பாடசாலை ஆகியவற்றின் ஸ்தாபகருமாவார். (எ-173)

* * *



வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர், கலைஞர் வல்லிபுரம் யோகானந்தசிவம் (கவிஞர் வ.யோ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால், யாழ்ப்பாணம் இடம்பெயர்ந்தோருக்கான விசேட செயற்றிட்டத்தின் கீழ் சர்வதேச மனித உரிமை தினத்தையொட்டி நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.(எ)

* * *



'தென்னைச் செய்கை' என்ற நூலின் ஆசிரியரும், யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஜெகதீசசிங்கம் சத்தியேந்திரன், யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். (எ)

* * *



நல்லூரைச் சேர்ந்த செல்வி குமுதா சோமசுந்தரக் குருக்கள் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட கலாசாரப் போட்டியில் சாஸ்திரீய சங்கீத வீணை இசையில் அகில இலங்கை ரீதியில் முதலாவது இடத்தைப் பெற்று 29.12.2003 அன்று மகரகமவில் ஜனாதிபதி விருதினைப் பெற்றுள்ளார்.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான இவர், காலபூஷணம் திலகநாயகம் போலின் மாணவியும், யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இறுதியாண்டு மாணவியும் ஆவார். (எ)

* * *



யாழ். வண்ணார்பண்ணையைச் சேர்ந்த செல்வன் பத்மநாதன் சியாமகிருஷ்ணா, தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பெற்ற கலாசாரப் போட்டியில் சாஸ்திரீய வாத்தியமான மிருதங்க் இசையில் அகில இலங்கை ரீதியில் முதலாவது இடத்தைப்பெற்று 29.12.2003 அன்று மகரகமவில் ஜனாதிபதி விருதினைப் பெற்றுள்ளார். மிருதங்க வித்வான் இசைக்கலைமணி எஸ்.துரைராஜாவின் மாணவனான இவர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவனும், யாழ். பல்கலைக்கழக கலைப்பீட 3 ஆம் ஆண்டு மாணவனும் ஆவார். (எ)

* * *



கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய அதிபர் பி.முத்துலிங்கம் 22.12.2003ஆம் திகதியன்று யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (எ)

* * *



சாவகச்சேரி கோவில்குடியிருப்பைச் சேர்ந்த அம்பலம் கந்தையா சபாரத்தினம் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கோவில்குடியிருப்பு பகுதியில் உள்ள பொது அமைப்புகளின் ஸ்தாபகர்களில் ஒருவராக உள்ள இவர், சிறந்த சமூக சேவையாளருமாவார். (எ-117)

* * *



கரவெட்டி மத்தி, கரவெட்டியைச் சேர்ந்த தம்பிமுத்து அரிபிரசாதம் அண்மையில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் விவசாய உத்தியோகத்தருமாவார்.

தற்பொழுது விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளராகவும், வதிரி ஸ்ரீபரமானந்தா சிறார், முதியோர் இல்ல ஆச்சிரம சபையின் கௌரவ உறுப்பினராகவும் -

ஞானாசாரியார் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராகவும் இவர் பதவி வகித்துவருகிறார். (எ-70)

# தேர்தல் நடத்துவது ஜனாதிபதியின் கையில்; ஆனால் அதை எதிர்கொள்ள அரசு தயார்!!

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

"நாடாளுமன்றத்தைக் கலைப்பதும் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதும் ஜனாதிபதியின் கைகளிலேயே இருக்கின்றன. எதற்கும் முகம் கொடுக்க அரசு தயார். அதேவேளை, மாகாண சபைத் தேர்தல்களைத் திட்டமிட்டபடி நடத்தியே தீரவேண்டும். ஜனாதிபதி அதனைத் தன்னிச்சையாகப் பின்போட முயன்றால் அதனை அனுமதிக்கமாட்டோம். மக்கள் சக்தியை ஒன்றுதிரட்டி ஜனாதிபதிக்குப் பதிலடி கொடுப்போம்".

அமைச்சரவைப் பேச்சாளரும் அரசமைப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு கூறினார்.

நேற்றுமுன்தினம் அரசாங்க பேச்சாளரின் அலுவலகத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதி, மாகாணசபைத் தேர்தல்களைப் பின்போடத் திட்டமிடப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன. அதைப்பற்றி அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?" என்று கேள்வி எழுப்பப்பட்டபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

பெரும்பாலான மாகாணசபைகளின ஆட்சிக்காலம் இந்த ஆண்டின் முற்பகுதியில் முடிவடைகின்றன. சில வார, சில மாத வித்தியாசத்தில் ஆட்சிக் காலம் முடிவடையும்போது இவற்றிற்குத தனித்தனியான தேர்தல்களை நடத்துவது உசிதமாக அமையாது. நாட்டின் பொருளாதாரமும் அதற்கிடம் கொடுக்காது. எனவே, எல்லா மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்தவேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு.

மாகாண சபைகளின் ஆட்சிக் காலம் முடிவடைந்ததும் அதற்கான தேர்தல்களைக் கட்டாயமாக நடத்த வேண்டும் என்பதை அரசமைப்பு தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது.

ஆனால், ஜனாதிபதி தன்னிச்சையாகத் தேர்தல்களை பிற்போட முயன்றால், அது 1931ஆம் ஆண்டுமுதல் வாகளிக்கும் உரிமையைப்பெற்ற மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் ஒரு செயலாகவே அமையும்.

எனவே, உரியகாலத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தியே தீர வேண்டும் - என்றார் அமைசசர் பீரிஸ்.

---

உ

### ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம், கொக்குவில்

### கணக்காய்வு

மேற்படி ஆலயத்தின் 2003ஆம் நிதியாண்டின் (01.01.2003 தொடக்கம் 31.12.2003 வரையிலான) வரவு - செலவுக் கணக்கினைப் பரிசோதிப்பதற்கு, பதிவு செய்யப்பட்ட கணக்காய்வு நிறுவனங்களிடமிருந்து 08.01.2004 வரை கள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களை லயப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

ானாவளை ஒழுங்கை, - செயலாளர்.
வில். (26671)(12-13-35-21)

---

### ப்பாண மாநகராட்சி மன்றம்

### ஆதனவரி - 2004

2003இல் யாழ்.மாநகரசபையில் நிறைவேற்றப்பட்ட தின்படி, மாநகரசபை எல்லைக்குள் அமைந்த ஆதனங்களில் நீர் விநியோகத்தைப் பெறுபவர்கள், ஆதனவரி மதிப்பீட்டில் மேலதிகமாக 2%த்தினை 01.01.2004இல் இருந்து செலுத்த வேண்டும் என்பதை அறியத்தருகிறேன்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
01.01.2004. (சி32389)(12-21-13-35)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

---

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### சண்முகம் இராமலிங்கம்
(பொன்னப்பா)

மலர்வு 14-02-1929 உதிர்வு 19-12-1999

திதி: 03.01.2004

ஆண்டு நான்கு ஆனாலும் ஆறவில்லை எம்மனது
ஈண்டு உம்மை எண்ணியே நிதம் வாடுகிறோம்
எப்போதும் உம்நினைவால் ஏங்கியே தவிக்கின்றோம்
இப்போது நினைத்தாலும் தாங்காது எம் இதயம்.

செங்குந்தர் வீதி,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

- குடும்பத்தினர்.

(26540) (26-21-13-35)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 29 - 11 - 1946



மறைவு 04 - 12 - 2003

அமரர்
### வேலாயுதபிள்ளை குகதாசன்

பாசத்தின் ஒளியில் ஒளிர்ந்த
எம் அன்புத் தெய்வமே!
எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள்
நினைவு எம் நெஞ்சங்களை விட்டு அகலா!
என்றும் உங்கள் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

முத்தட்டி லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (26379) (26-21-35-13)

நகுலேஸ்வரி குகதாசன்
குடும்பத்தினர்.

---

### நிவாரண விநியோகம்: கிளைகள் மாற்றம்

வலி.வடக்கு.ஜன.3

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச சங்கத்தின் நான்கு கிளைகளில் வழங்கப்பட்ட இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண விநியோகம் சங்கத்தின் வேறு கிளைகளுக்கு மாற்றப் பட்டுள்ளன.

நாயன்மார்கட்டு சந்திக் கிளையில (1ஏ) நிவாரணம் பெறுபவர்கள் கல்வியங்காட்டுக் கிளையிலும் (1பி)-

கொக்குவில் மேற்கு மணியர்காடு கிளையில் (10) நிவாரணம் பெறுபவர்கள் கொக்குவில் மேற்கு அரசடி கிளையிலும் (12) -

கோண்டாவில் நாகபூசணி கிளையில் (4) நிவாரணம் பெறுபவர்கள் கோண்டாவில் கிழக்கு சந்திக்கு அண்மையாக உள்ள கிளையிலும் (17) -

திருநெல்வேலிச் சந்திக் கிளையில் (22) நிவாரணம் பெறுபவர்கள் சங்கத்தலைமையகத்தில் உள்ள கிளையிலும் (2) தமக்குரிய நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இது தொடர்பான அறிவுறுத்தல்களை கிராம அலுவலர்களுக்கு நல்லூர் பிரதேச செயலாளர் வழங்கியுள்ளார்.

(ஒ-86-139)

---

# கூட்டணியின் கூட்டங்களை நடத்த விதிக்கப்பட்டுள்ள தடை நீடிப்பு!

கொழும்பு,ஜன.3

வீ.ஆனந்தசங்கரியின் ஆலோசனையின்றி தமிழர் விடுதலைக் கூட்டணியின் எந்தக்கூட்டத்தையும் கூட்டக் கூடாது எனத் தெரிவித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் விதித்த இடைககாலத்தடை மேலும் 14 நாள்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கின்றது.

இடைக்காலத்தடை உத்தரவை ஜனவரி 14ஆம் திகதி வரை நீடிக்கும பணிப்பை கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி பீ.ஜீ.புஞ்சிஹேவா கடந்த புதன்கிழமை விடுத்தார்.

தமிழர்விடுதலைக்கூட்டணியின் பொதுச்செயலர் இரா.சம்பந்தன், சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோருக்கு எதிராக வீ.ஆனந்தசங்கரி ஏற்கனவே தாக்கல் செய்திருந்த வழக்கில் மேற்படி இடைக்கால உத்தரவு 14 நாள்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

அந்த உத்தரவு கடந்த புதன் கிழமை காலாவதியாக இருந்தநிலையில், அதை மேலும் 14 நாள்களுக்கு நீடித்த நீதிபதி மேற்படி இரு பிரதிவாதிகளும் அன்றையதினம் நீதிமன்றத்தில் தமது தரப்பு நியாயங்களை முன்வைக்கலாம் எனவும் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின மத்திய குழுக்கூட்டத்தை கடந்த டிசெம்பர் 21ஆம் திகதி திருக்கோவிலில் கூட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த சமயம் வீ.ஆனந்தசங்கரி இந்த வழக்கைத்தாக்கல் செய்து இடைக்கால உத்தரவைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 17 - 07 - 1911



கூத்தபிரான் திருவடியில் 26 - 12 - 2001

காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தில்
பிரதம சிவாச்சாரியராக பணியாற்றிய

### அமரர் சிவஸ்ரீ.கணபதீஸ்வரக் குருக்கள் மங்களேஸ்வரக்குருக்கள்

திதி: பூர்வபஷ ஏகாதசி - 03-01-2004

அன்பின் உறைவிடமே!
குருத்துவத்தின் குலவிளக்கே!
பாசத்தின் நிறைகுடமே!
ஆண்டுகள் இரண்டு கழிந்தாலும்
உங்கள் நினைவுகள்
நிலைத்திருக்கும்.
ஓம் சாந்தி!

மயிலணி,
சுன்னாகம்.

சகோதரர், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(34-21-13-35)

(€/32357)

---

உ
சிவமயம்

### காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் திருவாதிரை உற்சவ

## 7 ஆம் திருவிழா விஞ்ஞாபனம்







**சிவன் அடியார்களே!**

நிகழும் சுபானு வருடம் மார்கழித்திங்கள் 20 ஆம் நாள் 04.01.2004 ஆம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் சிவபெருமானுக்கு அபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஆண்டிகேணி ஐயனாருக்கு அபிஷேகம் நடைபெற்று மூலமூர்த்திகளுக்கு விஷேசபூசைகள், ஆராதனைகள் நடைபெறும். பின்னர் 10.00 மணியளவில் நடராஜப் பெருமானுக்கு திருவெம்பாவை ஓதப்பட்டு மாணிக்கவாசகர், வீதியில் உலா வருவார். அதன் பின்னர் வசந்த மண்டபத்தில் விஷேசமாக அலங்கரிக்கப்பட்டு சிங்கப்பூர், மலேஷியா, தென் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட விசேட மலர்மாலைகளால் எம்பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் அலங்கரிக்கப்பட்டு விசேட பூசைகள் நடைபெறும். அத்தருணம் தென்இந்திய தவில் விற்பன்னர்கள் *திருப்புங்கூர் T.G.முத்துக்குமாரசாமி, திருக்கடவூர் G.பாபு* அவர்களுடன் இலங்கை தவில் நாதஸ்வர வித்துவான்கள் நாதகான மழை பொழிவார்கள்.

| நாதஸ்வரம் | | தவில் | |
|---|---|---|---|
| V.K.பஞ்சமூர்த்தி | P.S.பாலமுருகன் | T.G.முத்துக்குமாரசாமி | P.S.செந்தில் |
| V.K.P.குமரேஸ் | G.ரத்தினகுமார் | G.பாபு | S.கணேஷ் |
| P.நாகேந்திரம் | G.பவபிரியன் | K.நித்தியானந்தன் | N.K.கணேஷ் |
| M.P.பாலகிருஷ்ணன் | G.சந்திரன் | T.உதயசங்கர் | N.முருகானந்தன் |
| S.கேதீஸ்வரன் | P.ரஜீவன் | S.கணேஷ் | G.செந்தூரன் |
| | S.சுகந்தன் | | ஆனந்தகணேஷ் |

*சிவனடியார்கள் சகலரும் வருகைதந்து எம்பெருமானுடைய*
*இஷ்ட சித்திகளை பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

7 ஆம் திருவிழா உபயகாரர்கள.

(C/32368-21-13-35)

# இவர்கள் கனவான்களல்ல!




அண்மையில் "ஸ்கை ஸ்போட்ஸ்" (Sky Sports) இணையத்தளத்தில் புதுமையான வீரர்களைக் கொண்ட கிரிக்கெட் அணி பற்றிய தகவல்கள் வெளிவந்தன. உலகில் தரங்கெட்ட வீரர்கள் என இந்த அணி வீரர்கள் குறிப்பிடப்பட்டனர். அந்த அணியின் தலைவராக தென் ஆபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் ஹன்சி குறோன்யே அறிவிக்கப்பட்டிருந்தார். அந்த அணியைச் சேர்ந்த ஏனைய வீரர்கள் மைக்கல் ஆர்தட்டன், கிறெக் சப்பெல், டக்ளஸ் ஜாடின், சலிம் மலிக், மைக் கெட்டிங், இயன் போத்தம், றொட்னி மாஷ், டெனிஸ் லிலி, ஷேன் வோன் மற்றும் சார்லி கிறிபித் ஆகியோராவர்.




இந்த அணியில் ஸ்ரீலங்கா அணியைச் சேர்ந்த எவரும் சேர்க்கப்படவில்லை. அதேபோல கிரிக்கெட் மைதானத்தில் குழப்படிகாரனாக விளங்கிய பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் ஜாவிட் மியன் டாட்டின் பெயரும் சேர்க்கப்படவில்லை.

இந்த வீரர்கள் 11பேரும் கிரிக்கெட் விளையாட்டில் தரங்கெட்ட விதத்தில் எவ்வாறு நடந்து கொண்டனர் என்பதைப் பார்ப்போம்.

*1. ஹன்சி குறோன்யே (தெ. ஆபிரிக்கா அணியின் முன்னாள் தலைவர்).*

தென்ஆபிரிக்க அணியின் தலைவரான ஹன்சி குறோன்யே 2000 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட போது ஆட்ட நிர்ணயச்சதியில் ஈடுபட்டதாகவும் பெருந்தொகையான பணத்தைப் பெற்று தனது அணியைத் தோல்வியடையச் செய்தார் என்றும் குற்றஞ் சுமத்தப்பட்டதுடன் கிரிக்கெட் விளையாட வாழ்நாள் முழுக்கத் தடையும் விதிக்கப்பட்டது.




2001ஆம் ஆண்டு இடம்பெற்ற விமான விபத்தொன்றில் ஹன்சி குறோன்யே கொல்லப்பட்டார்.

*2 மைக்கல் ஆர்தட்டன் (இங்கிலாந்து)*

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரான ஆர்தட்டன் 1994 இல் தென ஆபிரிக்காவுக்கு எதிரான "டெஸ்ட்" போட்டியின்போது தனது காற்சட்டைப் பையினுள் மணல் மற்றும் போத்தல் மூடி ஆகியவற்றை வைத்திருந்து பந்தின் மினுக்கத்தையும் உருவத்தையும் மாற்றினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

*3. கிறேக் சப்பெல் (ஆஸ்திரேலியா)*

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரான கிறெக் சப்பெல் 1981 இல் நியூசிலாந்திற்கு எதிரான ஒருநாள் போட்டியொன்றின் போது நியூசிலாந்து அணி இறுதிப்பந்தில் ஆறு ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி பெறும் நிலையில் இருந்தபோது கடைசி ஓவரை கிறெக் சப்பெலின் சகோதரரான ட்றேவர் சப்பெல் போட்டுக்கொண்டிந்தார். இறுதிப்பந்தை வழமைபோல் வீசாமல் உருட்டி விடும்படி பந்து வீச்சாளரை கிறேக் சப்பெல் பணித்தார். அந்தப் பந்தை உருட்டிவிட்டது குறித்து அக்காலகட்டத்தில் பரவலான கண்டனங்கள் எழுப்பப்பட்டன. ஆஸ்திரேலியாவின் கிரிக்கெட் வரலாற்றில் இது ஒரு பெரிய கரும்புள்ளியாக இன்றும் கருதப்படுகிறது.

*4. டக்ளஸ் ஜாடின் (இங்கிலாந்து)*

1930 - 1940 காலப் பகுதியில் இவர் இங்கிலாந்து அணிக்குத் தலைமை தாங்கினார். அக்கால கட்டத்தில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டொனால்ட் பிரட்மன் ஓட்டங்களைக் குவித்தவண்ணமிருந்தார். பிரட்மன் ஓட்டங்களைக் குவிப்பதை நிறுத்தும் நோக்கில் ஹரல்ட் லாவுட் என்னும் வேகப் பந்து வீச்சாளரைக் கொண்டு பிரட்மனுக்கு உடல் காயம் ஏற்படும் விதத்தில் பந்துவீசத் திட்டமிட்டார். "பொடி லயின் போலிங்" (Bodyline Bowling) என அழைக்கப்பட்ட இந்தப் பந்து வீச்சுக் காரணமாக இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கிடையேயான நட்புறவு கூடப் பாதிக்கப்பட்டது.

*5. சலிம் மலிக் (பாகிஸ்தான்)*

இவர், பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் 1994 இல் கராச்சியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான "டெஸ்ட்" போட்டியின் போது ஆஸ்திரேலிய அணியைச் சேர்ந்த மாக்வோ, ஷேன் வோன் மற்றும் ரிம் மே ஆகியோருக்கு லஞ்சம் வழங்க முற்பட்டார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டது. இதன் காரணமாக அவருக்கு வாழ்நாள் பூராவும் கிரிக்கெட் விளையாடத் தடை விதிக்கப்பட்டது.




*6. மைக் கெட்டிங் (இங்கிலாந்து)*

1987 இல் பாகிஸ்தானுக்கு எதிராகப் பாகிஸ்தானில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின்போது நடுவரான ஷகூர் ராணாவை நோக்கி விரலை நீட்டி தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார். இதன் காரணமாகப் பதற்ற நிலை உருவானது. இதனால் போட்டிகளில் விளையாட அவருக்குத் தடை விதிக்கப்பட்டது.

**—— கஜனி ——**

*7. இயன் போத்தம் (இங்கிலாந்து)*

ஆஸ்திரேலிய அணித் தலைவர் இயன் சப்பெல் மற்றும் பாகிஸ்தான் அணித்தலைவர் இம்ரான் கான் ஆகியோரைத் தூஷண வார்த்தைகளால் ஏசியுள்ளார். மேலும் இவர் போதைவஸ்தை பயன்படுத்தியுமுள்ளார்.

*8. றொட்னி மாஷ் (ஆஸ்திரேலியா)*

உலகில் சிறந்த விக்கெட் காப்பாளராக விளங்கிய றொட்னி மாஷ் 1981இல் இங்கிலாந்திற்கு எதிரான "டெஸ்ட்" போட்டியின்போது இங்கிலாந்தை வெல்வதாக 500:1 என்ற விதத்தில் பந்தயம் பிடித்தார். ஆனால், அந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது.




*9. டெனிஸ் லிலி*

ஆஸ்திரேலியா அணிக்கு விளையாடிய மிகச் சிறந்த வேகப் பந்து வீச்சாளர் டெனிஸ் லிலி இவர் 1979 இல் இங்கிலாந்திற்கு எதிரான "டெஸ்ட்" போட்டியில் அலுமினியத்தாலான துடுப்பைப் பயன்படுத்தினார். 1931 இல் இங்கிலாந்து அணித்தலைவரான மயிக் பிரேயர்லி உடன் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.




*10. ஷேன் வோன் (ஆஸ்திரேலியா)*

சுழற்பந்து வீச்சில் இந்திர ஜாலங்களைக் காட்டுபவர் எனக் கருதப்படும் ஷேன் வோன் மீது பல்வேறு குற்றஞ்சாட்டுகள் சுமத்தப்பட்டன. அவர் நாளொன்றுக்கு 40 சிகரெட்டுகளுக்குக் குறையாமல் புகைக்கும் பழக்கமுடையவர். ஆட்டநிர்ணயக்காரர்களால் வழங்கப்படும் பணத்திற்காகத் தனது அணியைத் தோல்வியுறச் செய்தவர் என்ற குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டது. தடைசெய்யப்பட்ட போதைப் பொருளைப் பயன்படுத்தியுள்ளார். பெண்கள் மீது சேஷ்டைகள் புரிவதில் வல்லவர்.

*11. சாலி கிறிபித் ( மே.இ. தீவுகள்)*

துடுப்பாட்டக்காரர்கள் மீது கொடூரமாகக் பந்து வீசுபவர். 1962ஆம் ஆண்டு இந்திய அணி மேற்கிந்திய தீவுகளில் "டெஸ்ட்" ஆட்டத்தில் ஈடுபட்டபோது இவரது பந்து வீச்சில் இந்திய அணித் தலைவர் நெரிக் கொன்றாக்ரரின் தலை உடைந்தது.

☺ ☺ ☺

---

# இகபர சுகம் பெற்றுத்தரும் வைகுண்ட ஏகாதசி விரதம்

விஷ்ணுவை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் வைஷ்ணவம். விஷ்ணுவை வழிபட்டுத் தமக்கு வேண்டியவற்றைப் பெறலாம் என்பது வைஷ்ணவர்கள் கொள்கை. அதனடிப்படையில் பக்தர்களுக்காகத் தமது நிலையினின்று இறங்கி வந்து அருள் புரியும் தெய்வ இயல்புடையவரே விஷ்ணு என்றும், அவர் காலந்தோறும் நல்லோரைக் காத்துத் தீயோரை அழிக்க எடுக்கும் பிறப்புக்களே அவதாரம் என்றும் போற்றப் படுகின்றது.

"யாம் இச்சரீரத்தைப் பெற்றது இறைவனை வழிபட்டு முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது நாவலர் வாக்கு. தர்மத்தின் வழியான வாழ்வில் எம்மை வழிப்படுத்தும் விஷ்ணுவை வழிபடுவதன் மூலம் கிடைக்கக் கூடிய உயர்வான பேறு வைகுண்டம் புகுதல் என்பதேயாம். இது வைஷ்ணவர்களதும் இந்துக்களதும் அசைக்கமுடியாத நம்பிக்கை.

இதன்படி விஷ்ணுவை வழிபடுவதற்கு ஏற்புடையதும், சிறந்த நற்பலன்களை வழங்குவதும் ஏகாதசி விரதமாகும். ஒரு மாதத்திலே அமாவாசைக்குப்பின் வரும் பதினோராம் நாள் பௌர்ணமிக்குப்பின் வரும் பதினோராம் நாள் என இரு ஏகாதசிகள் வருகின்றன. இந்த ஏகாதசி விரதங்களை கைக்கொண்டு பயனடைந்தோர் காரணமாக அவர்களின் பெயர் கொண்டு அவை விளங்குகின்றன.

மார்கழி மாத வளர்பிறை பதினோராம் நாள் வைகுண்ட ஏகாதசியாகும். இதனை சுவர்க்கவாயில் ஏகாதசி, மோசஷ ஏகாதசி, பெரிய ஏகாதசி எனவும் கூறுவர். இத்தினத்திலே இறப்பு நிகழ்ந்தால் அவ்வாத்மா மறுபிறப்பின்றி வைகுண்டத்திலே விஷ்ணுவுடன் வாழ்வார் என்பது ஐதீகம்.

வைதீக சமயமரபில் தனித்துவம் பெற்று சிறப்பாக விளங்குவன கிரியைகள் ஆகும். கிரியைகளே ஞானம் கிடைப்பதற்குக் காரணமாகி ஆத்ம ஈடேற்றத்திற்கு வழிவகுக்கின்றன. கிரியைகள் அவற்றின் தத்துவார்த்தம், தெய்வீகத் தன்மை என்பவற்றிற்கு இதிகாசங்களும், புராணங்களும் உயர்ந்த முக்கியத்துவம் கொடுக்கின்றன. இதன்வழி இதிகாச புராணங்கள் கூறும் கிரியைகள் வேள்வி, தவம், தீர்த்தம், தோத்திரம், தியானம், விரதம், பூஜை என வகைப்படுத்துகின்றன. இதன்படி ஷண்மதங்களுக்கும் உரிய விரதங்கள் சிறப்பாகப் பேசப்படுகின்றன. அத்தகைய நிலையில் வைஷ்ணவ விரதங்களுள் ஒன்றே வைகுண்ட ஏகாதசி விரதமாகும்.

**ஸ்ரீவத்ஸ.வ.இராஜேஸ்வரக்குருக்கள**
*பிரதமகுரு,*
*வண்ணை ஸ்ரீ வேங்கடேச*
*வரதராஜப்பெருமாள்*
*தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.*

விரதம் தவத்தை ஒத்தது. தவத்தைப் போன்றே சில கடுமையான நிபந்தனைகளுக்குட்பட்டு அமைவனவாக விளங்குவனவே விரதங்களாகும். இவை முற்றும் துறந்த நிலையிலுள்ளவர்க்கன்றி உலகப்பற்றில் வாழ்ந்து வரும் மக்களுக்குரிய காலங்களில் உரிய நிபந்தனைகள், ஆசாரங்கள் என்பவற்றுடன் அனுஷ்டித்து விரும்பிய பலன்களைப் பெற்றுக்கொள்ளுதல் என்பதே இதன் தனித்துவமான அம்சமாகும்.

இந்து சமயமரபில் சைவம், வைஷ்ணவம் என்பன இரு பெரும் பிரிவுகளாகும். சைவத்திற்கு சிவராத்திரியும் வைஷ்ணவத்திற்கு வைகுண்ட ஏகாதசியும் மேன்மையானவை இதனை ஒத்ததே பிரதோஷ விரதமும் ஏகாதசி விரதமுமாகும்.

ஏகாதசி விரத மகத்துவத்தை பவிஷியோத்ர புராணம், அக்னி புராணம், ஸ்காந்த புராணம், நாரத புராணம் மற்றும் கல்ப சூத்திரங்கள் விளக்கியிருக்கின்றன. இவ்விரதம் திதியை பிரதானமாய்க்கொண்டு விளங்குகின்றது.

பத்ம புராணத்தில் பின்வருமாறு கூறப்படுகின்றது. கிருதயுகத்தில் முரன் எனும் அசுரன் தான்பெற்ற வரங்களின் பயனால் யாராலும் வெல்லப்படாமல் தருக்கித்திரிந்தான். இவனால் ஏற்பட்ட துன்பங்களை தாங்கவியலாமல் யாவரும் விஷ்ணுவிடம் முறையிட்டனர். தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு விஷ்ணுவிற்கும், முரனுக்கும் பல ஆண்டுகள் போர் நடந்தது. விஷ்ணு களைப்படைந்தவர் போல் பத்ரிகாசிரமம் எனும் இடத்தில் ஒரு குகையில் யோக நித்திரையில் ஆழ்ந்தார். அங்கும் சென்ற முரன் விஷ்ணுவை போருக்கழைத்தான். அப்போது விஷ்ணுவின் தேகத்திலிருந்து புறப்பட்ட சக்தி முரனை எரித்துச் சாம்பராக்கியது. யோக நித்திரையிலிருந்து மீண்ட விஷ்ணு அசுரனை அழித்த சக்திக்கு ஏகாதசி எனப் பெயரிட்டு ஒரு திதியாகக் கூறி இந்நாளில் என்னை விரதமிருந்து வழிபடுவோர்க்கு நோய், வறுமை நீக்கி இகபர சுகங்களை அளிப்பேன் என வரமளித்தார். தமோ, ராசஷஸ குணங்களின் வடிவமே முராசுரன். உயர்ந்த அறிவுப்பொருளாகவும், குணங்களுக்கு மேலானவராகவும் விளங்குபவர் விஷ்ணு. எங்கும் வியாபகமாக விளங்கும் விஷ்ணுவை உத்தேசித்து கர்ப்பிணிகள், நோயாளர் நீங்கி எட்டுவயது முதல் எண்பது வயதுவரை யாவரும் நற்கதி வேண்டி இவ்விரதத்தை அனுஷ்டிக்கலாம். மறுநாள் துவாதசி அன்று துளசி தீர்த்தமும் நெல்லிக்கனியும் அருந்தி பாரணையை அனுஷ்டிக்கலாம்.

ஈழத்து புராண மரபில் "ஏகாதசிப் புராணம்" வட்டுக்கோட்டை பிரம்மஸ்ரீ ந.சிவசுப்பிரமணிய சிவச்சாரியாராலும் பின்பு சுன்னாகம் வரதபண்டிதர் என்பவராலும் இயற்றப்பட்டுள்ளன. இவ்விரத நியமங்களையும் திதி நிர்ணயங்களையும் கூறி இவ்விரதத்தினை அனுஷ்டித்துப் பயன்பெற்றோர், மகிமையும் உள்ளடக்கியதாக தமிழ்ப்புராண விருத்தப்பாக்களில் அமைந்து விளங்குகின்றது. இதனை புராணபடன மரபு செறிந்த ஆர்வலர்கள் புராணபடனம் செய்து கூறும் பொருளை எல்லோரும் அறியும்படியாக விளங்குவதுடன் அன்றைய பொழுதினை இறைசிந்தனையுடன் கழிப்பர்.

இவ்வாறு மகிமையும் மகத்துவமும் பொருந்திய வைகுண்ட ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து மஹா விஷ்ணுவின் திருவருளைப் பெற்று இகபர சுகமடைவோம்.

"கண்ணன் கழலினை நண்ணும் மனமுடையீர் எண்ணும் திருநாமம் திண்ணம் நாராயணமே".

---

## வீரமணி ஐயர் நினைவு நிகழ்வுகள்

அமரத்துவம் அடைந்த இணுவில் மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயருடைய நினைவஞ்சலிக் கூட்டமும் அன்னாரின் திருவுருவப் படத் திரைநீக்கமும் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் கலாநிதி நா.வீ.மு. நவரத்தினம் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் அமரர் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயருடைய திருவுருவப் படத் திரைநீக்கம் செய்துவைப்பார்.

அமரர் பற்றிய அஞ்சலி உரைகளும் இசை, நடன நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (எ-152)


## சிரமதானம்

நவாலி ஊன்றுகோல் அறப்பணியகத்தினர் நவாலி சென்.பீற்றேஸ தேவாலய வளாகம் நவாலி, வட்டுக்கோட்டை பிரதான வீதி ஆகியவற்றை சிரமதானம் மூலம் துப்பரவுசெய்துள்ளனர். (ஒ-100)

## மாத்தளையில் மேயரின் வீடு மீது குண்டு வீச்சு!

மாத்தளையில் உள்ள நகரமேயர் முகமட் ஷரிப்பின் வீடு மீது நேற்று முன்தினம் அதிகாலை இனந்தெரியாதோர் குண்டு வீசு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணிக்கு - புத்தாண்டு பிறந்து சற்று நேரத்தில் - புத்தாண்டுக் கொண்டாட்டப் பட்டாசு வெடிகளுக்கு மத்தியில் இந்தக் குண்டு வீச்சும் இடம்பெற்றிருக்கிறது. வீடு சேதமுற்றுள்ளது. எனினும் எவரும் காயமடையவில்லை.



# தொடரும் அரசியல் இழுபறிகளால் வெளிநாட்டு உதவிகள் தடைப்படலாம்

**ஸ்ரீலங்காவுக்கு வாக்களிக்கப்பட்ட விதத்தில் வெளிநாட்டு உதவிகள் கிடைக்காமல் போகக்கூடும். சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டதையடுத்து வெளிநாடுகள் ஸ்ரீலங்காவுக்கு உதவிகளை வழங்க முன்வந்தன. ஆனால், தற்போது இந்நாட்டில் இடம்பெறும் சம்பவங்கள் உதவி வழங்கும் நாடுகளுக்கு ஏமாற்றத்தைத் தந்துள்ளன. இந்நிலை தொடருமானால் எதிர்பார்த்த உதவிகள் கிட்டாமல் போகலாம். இதுகுறித்து ரஞ்ஜித் ஆனந்த் ஜயசிங்கா எழுதி 'லங்காதீப' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

ஸ்ரீலங்காவுக்கு உதவி வழங்கும் வெளிநாட்டுச் சமூகங்களால் அண்மையில் விசேட அறிவித்தலொன்று வெளியிடப்பட்டது. ஸ்ரீலங்காவில் திடீர் தேர்தல் இடம்பெறுமாயின் கிடைக்கவிருக்கும் வெளிநாட்டு உதவிகள் கைநழுவிப் போவதற்கான வாய்ப்பு உருவாகலாமென்பதே அந்த அறிவிப்பாகும்.

அபிவிருத்தியடைந்து வரும் எந்தவொரு நாட்டுக்கும் வெளிநாடுகளின் உதவி அவசியமானதே. இரண்டாவது உலகயுத்தம் இடம்பெற்ற பின்னர் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் நிறுவப்பட்டன. இவைமூலம் பின்தங்கிய நாடுகளுக்கு முறைப்படியான உதவி வழங்கும் அணுகுமுறை ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. புதிதாக உருவாக்கப்பட்ட நாடுகளே இத்தகைய உதவிகளைப் பெறும் நாடுகளாகக் கருதப்பட்டபோதும், பின்னர் ரஷ்யா, சீனா போன்ற நாடுகளும்கூட வெளிநாடுகளின் உதவிகளை எதிர்பார்த்தன.

1960களில் ஸ்ரீலங்காவுக்கு வெளிநாடுகளின் உதவிகள் கிடைக்க ஆரம்பித்தன. ஸ்ரீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகள் மற்றும் நிறுவனங்களைக் கொண்ட குழு, 1977இல் ஜனாதிபதி ஜெயவர்த்தன ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னரே முறைப்படி ஒருங்கிணைக்கப்பட்டது. அதன் பின்னர் ஆண்டுதோறும் 70முதல் 80கோடி டொலர் உதவிகள் இலங்கைக்கு வழங்கப்பட்டன. இவ்வுதவிகள் வழங்கப்படுவது தொடர்பான மாநாடு ஆண்டுதோறும் பிரான்ஸில் இடம்பெற்று வருகிறது.

### வெளிநாட்டு உதவிகள்

கடந்த ஜூன் மாதத்தில் ஜப்பானிலும் அதற்கு முந்திய ஆண்டில் ஸ்ரீலங்காவிலும் இவ்வுதவி வழங்கும் அமைப்புக்கள் சந்தித்துக் கொண்டன.

கடந்த ஜூன் மாதத்தில் ஜப்பானில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளுக்கான மாநாட்டில் எதிர்வரும் மூன்று ஆண்டுகளிலும் இடம்பெறவுள்ள அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக 45ஆயிரம் கோடி ரூபாக்கான வெளிநாட்டு உதவித் தொகையை வழங்க உறுதியளிக்கப்பட்டது. இது அண்மைக்கால வரலாற்றில் ஸ்ரீலங்காவுக்குக் கிடைக்கவுள்ள பாரிய வெளிநாட்டு உதவியாகும். இதன்மூலம் ஆண்டொன்றுக்கு 15ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள வாய்ப்புக் கிடைத்துள்ளது.

'ஸ்ரீலங்காவை மீண்டும் கட்டியெழுப்புவோம்' என்ற அபிவிருத்திச் செயற்பாடுகளைக் கொண்ட திட்டமொன்று, உதவி வழங்கும் சமூகத்துக்கு அரசினால் முன்வைக்கப்பட்டுள்ளது. அரசின் துரித பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டுத் திட்டமான, 'ஸ்ரீலங்காவை மீண்டும் கட்டியெழுப்புவோம்' என்ற இச்செயற்பாட்டுத் திட்டம், மிகநீண்ட கால அவதானிப்புக்களின் பிரதிபலிப்பாகும். இது தொடர்பான வெளிநாட்டு வளங்களை ஒன்றிணைப்பது தொடர்பான, குழுவொன்று பிரதமரால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக, பொருளாதாரப் புனரமைப்பு, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சரான மிலிந்த மொறகொட நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஒஸ்லோவில் வைத்து, இந்நாட்டுக்கு அவசரத் தேவையான மனிதாபிமான உதவிகளை வழங்கும் மாநாட்டையும் ஜப்பான் உதவி வழங்கும் மாநாட்டையும் ஒருங்கிணைப்பதற்கான ஒழுங்குகள் அமைச்சர் மொறகொடவினாலேயே மேற்கொள்ளப்பட்டன. இவ்விரு அமைப்புக்களும் கொண்டுள்ள ஒரே நோக்கு சமாதானமும் அபிவிருத்தியுமாகும்.

இருபது ஆண்டுகளாக இடம்பெற்று வந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, யுத்தநிறுத்தமொன்று செயற்படுத்தப்பட்டமையும், பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு, பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதற்காக மேற்கொள்ளப்பட்ட பெருமுயற்சியுமே, எதிர்பார்க்கப்பட்ட உதவி இலங்கைக்குக் கிடைப்பதற்கான தகுதியை வழங்கியுள்ளதாக மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

### அரசியல் மாற்றம்

ஆனால், மூன்று அமைச்சுக்களைக் கையேற்ற ஜனாதிபதியின் திடீர் நடவடிக்கையைத் தொடர்ந்தே நாட்டின் அரசியல் களத்தில் ஸ்திரமற்ற நிலை உருவாக்கப்பட்டது.

இப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமென, உதவி வழங்கும் நாடுகளாலும் - நட்புறவு நாடுகளின் தூதுவர்கள் மூலமாகவும், பலமுறை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் கடுமையான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன.

இன்று நிலவும் அரசியல் சிக்கல் தீர்க்கப்படாத நிலையில், நாடு தேர்தலை நோக்கித் தள்ளப்படுமாயின், ஸ்ரீலங்காவுக்கென ஒதுக்கப்பட்டுள்ள 45ஆயிரம் கோடி ரூபாவும் கைநழுவிப்போகும் என்பதே அரசுக்கு உதவி வழங்கும் நாடுகளால் கூறப்பட்டுள்ள விடயமாகும். அது நிகழுமானால், அரசு அடுத்த ஆண்டில் முன்வைக்கவிருக்கும் வரவு - செலவுத் திட்டத்திற்கான மதிப்பீடுகளை மேற்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியேற்படலாம். அதுபோன்றே, வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் வழங்க ஆலோசிக்கப்பட்டுள்ள ஒரு சில சலுகைகளும் அபிவிருத்தி நடவடிக்கைகளும் நிறுத்தப்படக்கூடும்.



சர்வதேச நாணய நிதியத்திலிருந்து, ஜனவரி மாதத்தில் இலங்கைக்கு வழங்கப்படவிருக்கும் 18 கோடி 10லட்சம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படுவது தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபையின் கூட்டம், டிசெம்பர் மாதத்தில் வாஷிங்ரனில் நடைபெற இருந்தது. ஆயினும், இன்றைய அரசியலில் நிலவிவரும் ஸ்திரமற்ற நிலைமையில் மாற்றமேற்படும் வரையில் இப்பணிப்பாளர் சபையின் கூட்டத்தை ஒத்திவைக்கக் கடந்த வாரம் அச்சபை தீர்மானித்துள்ளது. இந்நிதியத்தின் மூலம் பெறப்படவுள்ள, 18கோடி 10லட்சம் அமெரிக்க டொலர்களும் நீண்ட காலப் பொருளாதாரத் திட்டச் செயற்பாடுகளுக்கான இரண்டாவது கட்டக் கொடுப்பனவாகும்.

இத்தொகை நாட்டின் வறுமை ஒழிப்புச் செயற்பாடுகளுக்கும், அபிவிருத்தி தொடர்பான திட்டச் செயற்பாடுகளை (P.R.G.F.) மேற்கொள்வதற்கும் பயன்படுத்தப்பட இருக்கிறது. அரசின் வரவு - செலவுத் திட்டத்துக்குக் கிடைக்கவிருக்கும் உதவி நிதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டால் பாரதூரமான பிரச்சினை உருவாகலாம்.

அதற்கிடையில், இன்று நிலவும் அரசியல் பிரச்சினை சீர்செய்யப்படுவது தொடர்பாக, பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற தொடர் பேச்சுக்கள் எதுவித பலனையும் அளிக்கவில்லை.

எவ்வாறாயினும், குறுகிய கால வரையறைக்குள் இது தொடர்பான பேச்சுக்கள் முடித்துக்கொள்ளப்பட வேண்டுமென்பது ஏற்கனவே ஜனாதிபதியும் பிரதமரும் மேற்கொண்ட முடிவாகும்.

ஜனாதிபதியால் கையேற்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சு, மீண்டும் அரசிடம் கையளிக்கப்படும் வரையில், தம்மால் சமாதான முயற்சிகளுக்கான பொறுப்புகளை ஏற்க முடியாதென்பதே பிரதமரின் முடிவாகும். ஆயினும், உயர்நீதிமன்றத்தால் தமக்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைய பாதுகாப்பு அமைச்சு தம்வசமே இருக்க வேண்டுமென்பது, ஜனாதிபதியின் நிலைப்பாடாகும். ஆனால், அண்மையில் ஜனாதிபதியால் பெறப்பட்டுள்ள உயர்நீதிமன்ற ஆலோசனைகளில், பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதியே கொண்டிருக்க வேண்டுமென்பது பற்றி வலியுறுத்தப்படும் எத்தகைய குறிப்புக்களும் காணப்படவில்லையென்பதை அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களில் முடிவு எட்டப்படாத நிலையில், அதிகாரம பகிர்ந்துகொள்ளப்படுவதையோ, நோர்வேயின் மத்தியஸ்தத்தின் மூலம் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதையோ கடுமையாக எதிர்க்கும் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்துகொள்வதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

ஜே.வி.பியோ, இக்கூட்டு கைச்சாத்திடப்பட்ட மூன்று மாத காலத்திற்குள் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்ற தனது ஒரே கோரிக்கையை முன்வைத்துள்ளது.

### திட்டங்கள் தடைப்படும்

உதவி வழங்கும் சமூகம், இவ்வாறான உற்சாகமற்ற அறிவித்தல்களை விடுக்கும்போது, ஸ்ரீலங்காவில் புதிதாக முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்கள் மத்தியிலும் தயக்கம் ஏற்படலாம். முக்கியமாக, அரசு இவ்வாண்டில் முன்வைத்துள்ள தனது வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள, தென் மாகாணத்தில் நிறுவப்படவுள்ள சர்வதேச விமான நிலையம், அம்பாந்தோட்டையில் உருவாகவுள்ள துறைமுகம், அம்பாந்தோட்டை ஊடாக கிழக்கு நோக்கி அமைக்கப்படவிருக்கும் அதிவேக நெடுஞ்சாலை, அம்பாந்தோட்டை எண்ணெய் விநியோகம் போன்ற திட்டங்களை மேற்கொள்வதில் பாரதூரமான பிரச்சினைகள் உருவாகலாம்.

நாட்டின் சனத்தொகையில் 80 வீதமானோருக்கு நீர்மின்சாரம் வழங்கவுள்ளதற்கான திட்டமும் தடைப்படலாம். நாட்டின் மொத்தச் சனத்தொகையிலும் சுமார் 65 வீதமானோரே இன்று மின்சாரத்தைப் பெறுகின்றனர். அதுபோன்றே, மட்டக்களப்பு, கண்டி, பொலன்னறுவை, மூதூர் மற்றும் அம்பாந்தோட்டைப் பிரதேச மக்களுக்கு வழங்கப்படவுள்ள நீர் விநியோக வசதி மற்றும் சுகாதார வசதிகள் தொடர்பான முக்கிய திட்டங்கள் கூட, வெளிநாடுகளின் உதவி கிடைக்காதவிடத்து, செயற்படாதுபோகலாம்.

இதுதவிர, பியகமவில் அமைக்கப்படவுள்ள இரண்டாவது ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயத்தின் மூலம், மேலும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவதும் அரசின் எதிர்பார்ப்பாக உள்ளது. இன்றுள்ள நிலையில், உதவி வழங்கும் சமூகம் உதவிகளை வழங்கத் தயக்கம் காட்டுமாயின் எம்மால் இவை எவற்றையுமே செயற்படுத்த முடியாது.

**தமிழில் : சரா**

அதனால் முக்கிய இரு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் நல்லெண்ணத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். எவரது எதிர்பார்ப்புக்களும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்வதாகவே இருக்கும். அரசியல் அதிகாரம் என்னும் கிரீடத்தின் முன்னால் ஏனைய சகலமும் இரண்டாம் பட்சமே. அதிகாரச் சச்சரவுகளின் மத்தியில், நாடு, மக்கள், ஜனநாயகச் சிந்தனைகள் என்பன இவர்களால் மழுங்கடிக்கப்படுகின்றன. சகலரது நோக்கங்களும் நிறைவேற்றப்படுவதற்கு, நாமெல்லோரும் சிறப்பாக வாழ்வதற்குகந்த நாடொன்றே எமது தேவையாகும். கழுத்துப் பறிபோகாமல் இருந்தால் மாத்திரமே தாலி கட்ட முடியும் என்பதை அதிகாரச் சண்டையில் ஈடுபட்டுள்ளவர்கள் சிந்திக்க முற்படுவது பெறுமதி மிக்கதாகும். ★

# எண்கணித ஜோதிடம் - 2004

## எண் - 1

1, 10, 19, 28 ஆம் திகதிகளில் பிறந்த நீங்கள் மனபலம் கொண்டவர்கள். முரட்டு அன்பு கொண்ட நீங்கள் குறிக்கோளுடன் வாழ்வீர்கள். மனிதநேயம், கடவுள் பக்தி உங்கள் உடனிருப்பவைகள். 'ஆசைகளையும், தேவைகளையும் குறைத்துக்கொண்ட மனிதரே சுதந்திர மனிதர்' என்ற தத்துவத்தை நேசிப்பவர்கள். தியானமும், யோகப் பயிற்சியும் உங்கள் மனதிற்கும், உடலுக்கும் உரமாகும்.

அடிக்கடி மனம் எதையோ இழந்துவிட்டது போன்று சோர்வடையும். அதுமட்டுமல்லாது, நீங்கள் போடும் திட்டமும் மாறுபடும். கடமை தவறாது வாழ வேண்டும் என்பதே உங்கள் ஆசை. மற்றவர்கள் சின்ன விஷயம் என்று தூக்கிப் போடுவதைக்கூட நீங்கள் பெரிதாக எடுத்துக்கொண்டு வேதனைப்படுவீர்கள். அடிக்கடி மன இறுக்கம் ஆகாது எதையும் இலகுவாக எடுத்துக்கொள்ளப் பழகவேண்டும்.

சில நேரங்களில் மற்றவர்கள் பேசுவதை முழுவதும் கேட்காது குறுக்கே பேசுவீர்கள். எந்த வேலையை எடுத்துக் கொண்டாலும் அதைச் சிறப்பாகச் செய்துமுடிப்பீர்கள். சில பிரச்சினைகளை யாரிடமும் சொல்லாது மனதில் வைத்துக்கொண்டு புழுங்குவீர்கள். பணம் இருந்தால் மகிழ்ச்சியாகக் காணப்படுவீர்கள். பணம் பையில் குறைந்துவிட்டால் மனப்பயம் வந்துவிடும்.

'காசேதான் கடவுளடா' என்பதே உங்கள் தத்துவம். கஷ்டமான காலங்களில்கூட நியாயமாக வாழ முற்படுவீர்கள். எதிர்வாதம் செய்வதில் நீங்கள் பலே கில்லாடி. செய்த தவறை உணர்ந்து திருந்திவிடுவீர்கள். அடிக்கடி உங்களின் உள் மனதை விசாரணை செய்து பார்ப்பீர்கள். பலரோடு நீங்கள் பழகினாலும் ஒரு சிலர்தான் உங்களிடம் உண்மையாக இருப்பர்.

உங்கள் உடல் சளியாலும், உஷ்ணத்தாலும் பாதிக்கப்படும். இதனால் காரம், உப்பு இரண்டையும் குறைத்துக்கொள்வது மிகவும் நல்லது. மனதில் அவ்வப்போது ஏற்படும் இறுக்கம் குறைய தியானம் செய்யவேண்டும். அதிகமாகக் கவலைப்படுவதால் நீரிழிவு வியாதி வர வாய்ப்பு உள்ளது. மனதிற்கு அமைதி தரக்கூடிய பக்திப் பாடல்கள் கேட்பதும் நல்லது.

பொதுவாக உணவில் கீரை வகைகளைத் தினம் சேர்த்துக்கொள்ளவேண்டும். அசைவம் சாப்பிடும் பழக்கம் உள்ளவர்கள் இறைச்சி சாப்பிடுவதை நிறுத்திவிடுவது மிகவும் நல்லது. அசைவம் சாப்பிடுபவர்கள் கண்டிப்பாக அதிகமான நெய் பதார்த்தங்கள், எண்ணெய்ப் பதார்த்தங்கள் போன்றவற்றைத் தவிர்க்கவேண்டும்.

பொதுவாக நீங்கள் எல்லோரையும் அன்புடன் நேசிக்கும் குணம் உள்ளவர்களாதலால் பசி என்று கேட்டவர்களுக்கு உணவு அளிக்க முன்வருவீர்கள். அழகான ஆடைகள் அணிவதில் ஆசை கொள்வீர்கள். ஞானம், பக்திப் பேச்சு உங்களுக்கு மிகவும் பிடிக்கும். எதையும் சாதிக்கக்கூடிய திறமை இருந்தாலும் அவ்வப்போது உங்களுக்குத் தெம்பு கொடுக்க ஒரு குரு வேண்டும். அதிகமான தூக்கம் நல்லதில்லை என்பதை நீங்கள் உணர வேண்டும்.

அதிகாலையில் எழுந்தவனும், இளவயதிலேயே மணந்தவனும் எக்காலத்திலும் வருந்தியதே இல்லை. அதிகாலை சிந்திப்பதற்கும், நல்ல முடிவெடுப்பதற்கும் சரியான நேரம். முடியாது என்ற வார்த்தையை உபயோகப்படுத்தாதீர்கள். உழைப்பால் உயரவேண்டும் என்ற எண்ணம் கொண்ட உங்களுக்கு அவ்வப்போது தடைகளும், சோதனைகளும் வரலாம். ஆனால், அதைப் பற்றிப் பெரிதாக நீங்கள் கவலைப்படவேண்டியதில்லை.

தன்னம்பிக்கை, சுயமரியாதை இதையெல்லாம் உங்களிடம் இருக்கும். ஆனால், அவ்வப்போது சஞ்சலம் அடைவதுதான் பெரிய சிக்கல். எந்த ஒரு பொறுப்பைக் கொடுத்தாலும் கடமை உணர்வுடன் செய்து நல்ல பெயர் எடுப்பீர்கள். சில நேரங்களில் மற்றவர்களுக்காகச் செய்யும் காரியங்களைச் சிறப்பாகச் செய்துமுடித்துக் காட்டுவீர்கள். அதேநேரத்தில் தனக்கென்று ஒரு வேலையைச் செய்யும்போது பிறகு செய்வோம் என்று தள்ளிப்போடும் தன்மை காணப்படும். இதை உடனே போக்கிக்கொள்ள வேண்டும். மனதை சிதறவிடாது பார்த்துக்கொள்ள வேண்டும்.

முறிந்த கையைக் கொண்டு உழைக்க முடியும். ஆனால், உடைந்த உள்ளத்தை கொண்டு உழைக்க முடியாது என்பதை நீங்கள் உணரவேண்டும். எது எப்படிப்போனாலும் தொடர்ந்து எதையும் செய்து வரவேண்டும். குழப்பமான நேரங்களில் இறைவனை நினைக்க வேண்டும். உங்களையே நீங்கள் விசாரணை செய்து வரவேண்டும். அப்பொழுது தான் நீங்கள் செல்கின்ற பாதை சரியானதா என்று உணர முடியும்.

### நோய்

உஷ்ண உடல் கொண்ட நீங்கள் தண்ணீர் அதிகம் அருந்த வேண்டும். நரம்புத் தளர்ச்சி, கால் வலி, சளித் தொந்தரவு வந்து நீங்கும். யோகப் பயிற்சி, தியானப்பயிற்சி நல்லது.

உணவில் கீரை வகைகள் சேர்த்துக் கொள்வது உடல் நலத்திற்குச் சிறப்பாகும்.

### மாணவர்களுக்கு

உங்கள் திறமை, உழைப்பு இவற்றிற்கு தகுந்த பலன் இல்லை என்று ஏங்கிக்கொண்டு இருக்காதீர்கள். இந்த ஆண்டு அந்தக் கவலையைத் தூக்கித் தூர வீசுங்கள். பொதுவாக உங்களிடம் பிடிவாதம், எடுத்தெறிந்து பேசும் பழக்கம் இருக்கும். அதைக் கண்டிப்பாக ஒதுக்கி விடுங்கள். பெற்றோர்களை நேசியுங்கள். ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்துங்கள். அவ்வப்போது ஆண்டவனை நினைத்து தியானம் செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும். ஒழுக்கம் என்பது ஆரோக்கியத்தின் மறு பெயர் என்பதை நீங்கள் மறந்துவிடாதீர்கள். மேற்கல்வி வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

### மாதப் பலன்கள்

*ஜனவரி* : ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் உங்களுக்கு மனப்பலமும் செயல் பலமும் மிகமிக அதிகம். சில நேரங்களில் ஏற்படும் சோம்பேறித்தனம்தான் உங்கள் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை. பணம் பல வழிகளில் வரும். அடிக்கடி மன இறுக்கம் ஏற்படும். பாராட்டும் புகழும் கூடும். உல்லாசப் பயணம் ஏற்படும். சிறு விபத்து ஏற்பட்டுத் தப்புவீர்கள். பெரிய ஞானிகளின் சந்திப்புக் கிடைக்கும். வாழ்க்கையில் புதுமையாக எதையும் செய்ய வேண்டும் என்று முயற்சிப்பீர்கள். எதிர்ப்புக்கள் இருக்கும். குடும்பத்தில் வாக்குவாதம் காணப்படும். மருத்துவச் செலவு உண்டு. தொழிலில் தடைகள் ஏற்பட்டு நீங்கும். நன்றிகெட்ட சிலரை நினைத்து வேதனைப்படுவீர்கள். சளித் தொந்தரவு இருக்கும். புதினாக்கீரை துவையலை உணவில் சேர்த்துக்கொள்வது நல்லது.

*பெப்ரவரி*: கெட்டதைக் கழித்து நல்லதைப் பெருக்கும் உங்களிடம் பலர் பழகினாலும் சிலர்தான் உங்களிடம் உண்மையாக இருப்பர். எதிர்பாராத நன்மைகள் நடக்கும். பிரச்சினைகள் தோன்றினாலும் சூரியனைக் கண்ட பனிபோல் அது மறையும். கெட்டவைகளைக் கழித்து நல்லவைகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். காதல் கைகூடும் . வாய்வுக் கோளாறு உங்களை வாட்டும்.

எதிர்பாராத அதிஷ்டமடிக்கும். சொத்துக்கள் வாங்க, விற்க திருப்தியாக முடியும். மனதில் அவ்வப்போது புதுப் புதுக் கருத்துக்கள் தோன்றிக்கொண்டேயிருக்கும். பெரிய மகான்களின் சந்திப்புக் கிடைக்கும். பணம் பல வழிகளில் வரும். வெளிநாட்டில் இருந்து நல்ல செய்திகள் வரும். கல்வியில் வெற்றி பெறுவீர்கள். உடல் நலம் உஷ்ணத்தால் பாதிக்கும்.

*மார்ச்:* உங்களுக்கு அடிக்கடி நல்லதும் கெட்டதும் கலந்து வருவதால் அனுபவச் சாமர்த்தியம் அதிகம் என்றுதான் கூறவேண்டும். உஷ்ண உடல் கொண்ட உங்களுக்கு அவ்வப்போது மூலம், வயிற்றுக் கோளாறுகள் தோன்றி காணாமல் போய்விடும். இந்தமாதம் காதல் கைகூடும், பணம் பல வழிகளில் வரும். வெளியூர், வெளிநாட்டுப் பயணம் செய்வீர்கள், வீடு, வாகனம், நிலம் குழப்பம் தோன்றினாலும், உடனே அது மறைந்துவிடும்.

சளி சம்பந்தமான வியாதி தோன்றி மறையும். பெரிய மகான்களின் உதவியும், ஒத்துழைப்பும் மனதிற்கு இதமாக இருக்கும், எந்தக் காரியமும் உங்களுக்கு முடிந்துவிடும், தொழில் உயரும், பொருள்சேர்க்கை உண்டு. வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வரும். சிலருக்குக் கடல் கடந்த பயணம் ஏற்படும்.

*ஏப்ரல்:* அடிமேல்அடியடித்தால் அம்மியும் நகரும் என்ற பழமொழியை நன்கு அறிந்த நீங்கள், எதையும் தொடர்ந்து செய்து ஜெயிக்காமல் விடமாட்டீர்கள். இந்தமாதம் நீங்கள் எடுத்த காரியம் இழுபறியாக இருந்தாலும் முடிவு வெற்றியாக இருக்கும், பெரிய மகான்களின் சந்திப்பு கிடைக்கும், போட்டி பொறாமையைக் கடந்து முன்னேற்றப் பாதையில் செல்வீர்கள்.

வெளியூர், வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்வீர்கள், காதல் கைகூடும்! திடீர் பணவரவு, தேவையில்லாத மனஇறுக்கம் அவ்வப்போது வரும். கொடுக்கல், வாங்கல் சுமாராகச் செல்லும். புதியதிட்டங்கள் செயல்படும். கடின உழைப்பால் செய்யவேண்டியதை எளிதில் முடிப்பீர்கள். கடன் கட்டுக்கடங்கி இருக்கும். கல்வியில் உயர்வு உண்டு. வழக்கு சாதகமாகச் செல்லும். தோல் வியாதி வரவாய்ப்பு இருப்பதால், உடல் நலத்தில் கவனம் தேவை, கல்வியில் அக்கறைகாட்ட வேண்டும்.

*மே:* ஊட்டி வளர்த்தவர் காட்டிக்கொடுக்கலாம், உறவு திருட்டுப் பகையாய் மாறலாம் என்பதை அடிக்கடி கூறுவீர்கள். யாரையும் எளிதில் நம்பமாட்டீர்கள். ஆண்டவனைத் தவிர எல்லாம் பொய் என்று கூறுவீர்கள். பாராட்டும், மதிப்பும் கூடிக்கொண்டே செல்லும். பெரிய மகான்களின் சந்திப்பும் கிடைக்கும். உறவினர்கள் வருகை. அவர்களினால் செலவு ஏற்படும். போட்டிகளும், எதிர்ப்புகளும் இருந்தபோதிலும் அதைச் சாமர்த்தியமாகச் சமாளித்து வெற்றி பெறுவீர்கள்.

எங்கு சென்றாலும் நல்ல வரவேற்பு கிடைக்கும். கொடுக்கல் வாங்கல் திருப்தியாகச் செல்லும். வழக்கு பெரியவர்கள் வாயிலாக சமாதானத்தில் முடியும். கல்வியில் உயர்வு பெறுவீர்கள். பாகப்பிரிவினை, குடும்பத் தகராறு இவைகள் சுமுகமாக முடியும். திடீர் பணவரவு உங்கள் மனதுக்கு மகிழ்ச்சியூட்டும். கெட்ட மனிதர்கள் உங்களை விட்டு ஒதுங்கிச்செல்வர். சிறுநீரகம் சம்பந்தமாக நோய்கள் வந்து விலகிச்செல்லும். கல்வியில் உயர்வு உண்டு. பெரிய திட்டங்களைப் போட்டு அதை வெற்றிகரமாக முடிப்பீர்கள்.

ஜூன்:- அடைமழை ஓய்ந்தாலும் செடிமழை ஓயவில்லை என்பதைப்போல சில பிரச்சினைகள் முடிந்தது என்று நிம்மதியாக மூச்சுவிட்டால் திடீரென புதிதாக பூகம்பம் உருவாகுகிறதே என்று புலம்புவீர்கள், இழுபறியாகக்கிடந்து எதுவும் செய்யமுடியும். வெளியூர், வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ள வாய்ப்பு உண்டு. சொத்துக்கள் வாங்க, விற்கமுடியும். திடீர் நன்மைகள் நடக்கும். காதல் கசக்கும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் தோன்றி மறையும். ஆடை, ஆபரணம் வாங்கிச் சேர்ப்பீர்கள்.

வயிற்று நோய் வந்து நீங்கும். எதிர்ப்புக்கள் தோன்றி மறையும். உடல் உஷ்ணத்தால் பாதிக்கும். கனவுத் தொல்லை இருக்கும். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வம்பு வழக்கு வந்துபோகும். அதை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். நீண்டநாள் பழகிய ஒருவரைப் பிரியநேரும். காரணமில்லாத மனப்பயம் ஏற்படும். உத்தியோகம் தொழில் இவற்றில் ஒரு அழுத்தம் இருக்கும். கல்வியில் உயர்வு இருக்கும். வழக்கு வெற்றி பெறும்.

ஜூலை:- எந்தப் புற்றிற்குள் எந்தப் பாம்பு இருக்கும் என்று யாருக்குத் தெரியும் என்று கூறுவீர்கள். சந்தேகம் மனதில் அடிக்கடி வலம்வரும். பணம் பல வழியில் வந்தாலும் செலவு காத்துக்கொண்டிருக்கும். மனதில் இனம் புரியாத குழப்பம் வந்து நீங்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு, சண்டை, சச்சரவு வந்துபோகும். எதையும் போராடி முடிக்கவேண்டியிருக்கும். பாராட்டும், புகழும் கூடும். சொத்துக்களில் ஏற்பட்ட வில்லங்கம் நீங்கும். எதிரிப் பயம் காணப்படும். முன்பின் ஆராய்ந்து செயற்படுவதால் எதிலும் தப்பிவிடுவீர்கள். எதையோ இழந்தது போன்று அடிக்கடி மனம் பேதலிக்கும். வாகனம் வைத்திருப்பவர்களுக்கு வாகனத்தால் செலவு உண்டு. நினைப்பது ஒன்று நடப்பது வேறொன்றாக இருக்கும். புனித யாத்திரை செல்வீர்கள். தெய்வீகச் சக்தி படைத்த நீங்கள், தியானம் செய்வதால் உயர்ந்த நிலையை அடைவீர்கள். அன்பாகப் பழகும் உங்களுக்குப் பலருடைய ஆதரவும், அரவணைப்பும் கிடைக்கும்.

*ஓகஸ்ட்*: திடீர் நன்மைகள் நடக்கும். பெரிய பிரச்சினை கூட எளிதில் முடிந்துவிடும். பாராட்டும், மதிப்பும் உயரும். நல்லவர்கள் நட்புக் கிடைக்கும். பணம் பல வழியில் வரும். திடீர்ப் பயணங்கள் ஏற்படும். எடுத்த காரியங்கள் கைகூடும். சுபகாரியத் திட்டம் போடுவீர்கள். காதல் மோதலில் முடியும். அடிக்கடி சிந்தனைகள் தோன்றி மறையும். எதிர்பாராத வகையில் ஆடை, ஆபரணச் சேர்க்கை, சொத்துக்கள் வாங்க, விற்க வாய்ப்பு ஏற்படும். கொடுக்கல் - வாங்கல் சிறப்பாக இருக்கும். வருமா, வராதா என்று நினைத்த காரியங்கள் கூட உடனடியாக முடிந்துவிடும்.

*செப்ரெம்பர்*: எதிலும் துடுக்காகச் செயற்பட்டு துரிதமாகக் காரியத்தை முடிப்பீர்கள். அடிக்கடி வம்பு, வழக்கு வராதவாறு கொஞ்சம் எச்சரிக்கை தேவை. எதையும் உடனே செய்யமுடியாது தவிப்பீர்கள். பணம் பல வழியில் வந்து உங்கள் பையை நிரப்பும். ஆனால், தண்டச் செலவு வந்து பணத்தைப் பறித்துச்செல்லும். பெரிய மனிதர்களின் உதவியும், நண்பர்களின் ஒத்துழைப்பும் மனதிற்கு மருந்து போன்று இருக்கும். பல திட்டங்கள் போடுவீர்கள். காதல் கசக்கும். அடிக்கடி கோபம் வரும். நரம்பு சம்பந்தான வியாதி தோன்றி மறையும். எதிர்ப்புகளைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். நிம்மதி குறைவதாக நினைப்பீர்கள். அடிக்கடி மனதை ஒரு நிலைப்படுத்தித் தியானம் செய்தால் மனம் அமைதி பெறும். மனதிற்குள் தெம்பு பிறக்கும். பொதுவாக புனித யாத்திரை செய்யும் வாய்ப்பும் உண்டு.

*ஒக்ரோபர்*: பணம் மட்டும் வாழ்க்கை இல்லை. அத்துடன், நல்ல மனமும் வேண்டும் என்பதே உங்கள் வேதாந்தம். இந்தக் காலத்தில் அப்படிப்பட்ட நல்ல ஆள்களைக் கண்டுபிடிப்பதே குதிரைக் கொம்பாக இருக்கிறது என்று கூறி அடிக்கடி வேதனைப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி அளிக்கும். சொத்துக்களில் ஏற்பட்ட வில்லங்கம் நீங்கும். வீடு, வாகனம், நிலம் வாங்க, விற்கச் சிறப்பாக இருக்கும். எதிலும் அவசரமிருக்கும். பாராட்டும், புகழும் கொடி கட்டிப் பறக்கும். இடுப்பு, கால் இவற்றில் வலி வந்து நீங்கும். பலருடைய ஒத்துழைப்பு மனதிற்குப் பலமாக இருக்கும். வயிற்றில் நோய் வந்து நீங்கும். கல்வி, உத்தியோகம் உயரும். சிறு விபத்து ஏற்பட்டு தப்பிவிடுவீர்கள். கொடுக்கல், வாங்கல் சிறப்பாக இருக்கும். கெட்டவர்கள் விலகிச்செல்வர். சில பிரச்சினைகள் பெரிதாக உருவெடுத்து, கடைசியில் பெரியவர்கள் வாயிலாக சமாதானமாகும். வாய், கை நிதானம் தேவை.

*நவம்பர்*: முடியுமா முடியாதா என்று பயந்து கொண்டிருந்த காரியங்கள் உடனே முடிந்துவிடும். அவ்வப்போது குழப்பங்கள் தோன்றி மறையும். மனதில் மகிழ்ச்சி நிலவும். திடீர்ப் பயணங்கள் செய்வீர்கள். கனவுத் தொல்லை இருக்கும். பணமும், பாராட்டும் உங்கள் மனதிற்கு தெம்பளிக்கும். எதைச் செய்தாலும் அதை உடனே முடிப்பீர்கள். கொடுக்கல், வாங்கல் நன்றாக இருக்கும். தொழில் சூடுபிடிக்கும். வீடு, வாகனம், நிலம் வாங்க, விற்க சிறப்பாக இருக்கும். வயிற்றில் வாய்வுத் தொந்தரவு காணப்படும். மனதில் புதுப்புது யோசனைகள் தோன்றி, முன்னேற்றப் பாதையில் கூட்டிச்செல்லும். கெட்டவர்கள் ஒதுங்கிச் செல்வர். வில்லங்கம் நீங்கும். எதிர்பாராத உயர்வும், வழக்கும் சாதகமாகும். அரசாங்க ஆதரவும், பெரிய மனிதர்களின் உதவியும் கிடைக்கும். பணம் கேட்ட இடத்தில் கிடைக்கும்.

*டிசெம்பர்*: சில காரியங்கள் இழுத்துக் கொண்டே சென்று கடைசியில் தான் முடியும். உழைப்பை நம்பியிருக்கும் உங்களுக்கு அதிர்ஷ்டம் அடிக்கும். மனம் நிலை கொள்ளாது. எதிலும் உங்கள் கை ஓங்கி நிற்கும். திடீர்ப் பயணங்கள் மேற்கொள்வீர்கள். தேவையில்லாத விஷயங்களை மனதில் போட்டுக் குழப்புவீர்கள். காதல் கசக்கும், பெரிய மனிதர்களின் ஆதரவும். ஒத்துழைப்பு மனதிற்கு தெம்பூட்டும். சுபகாரியம் அமையும். செலவு அதிகரிக்கும். சொத்துக்கள் விவகாரம் இழுக்கும். எதையும் நிதானமாகச் செய்யவேண்டும். வாயுத் தொந்தரவு இருக்கும். கொடுக்கல், வாங்கல் சுமாராகச் செல்லும். தூரதேசப் பயணம் செய்வீர்கள். கெட்ட கனவுகள் வந்து உங்களைத் தொந்தரவு செய்யும். வெளிநாட்டுத் தொடர்பு நன்றாக இருக்கும். உறவினர்கள் நச்சரிப்பு மனத்திற்கு வேதனையைத் தரும்.

(வளரும்)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

புங்கன்குளம் வீதி, கொழும்புத் துறையில் 3 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.27/17, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை. T.P. 0777 570279, 0777 305533 (சி-31984)

## விற்பனைக்கு

பொலிகண்டிச் சந்தி[illegible]அண்மை யில் 10 பரப்புக் காணியும் நாற்சார் வீடும் (உலாந்தாவீடு) விற்பனைக்குண்டு. தொடர்பு க.பூரணச்சந்திரன் 15/1, பிள்ளையார் கோவில் வீதி, நாயன்மா கட்டு, யாழ்ப்பாணம் T.P. No. 0777 - 570215, 0777 - 570216 (26688)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் விலை ரூபா 42, Prima பேட்டுக் குஞ்சுகள விலை ரூபா 62. 05.01.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவுசெய்யவும். பருத்தித் துறை கிளையிலும் விநியோகிக்கப் படும். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (26356)

## மணமகன் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த கொழும்பில் தனியார் நிறுவனத்தில் தொழில் புரியும் 1971ஆம் ஆண்டு பிறந்த B.Com படித்த செவவாய் தோசமுள்ள மணமகளுக்கு உள நாட்டிலோ வெளிநாட்டிலோ மணமகன தேவை. படம், ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும் பொருத்தமில்லையேல் உடன் திருப்பி அனுப்பப்படும். தொடர்பு: விளம்பர இல. 2135, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (26564)

## English/Maths

Spoken English இரண்டு மாதங்களில் Toefi ஆங்கிலம், கணிதம் ஆண்டு 6 முதல் O/L வரை, ஆங்கிலம A/L, G.A.Q. முதல் B.A. வரை கற்பிககப்படும். தொடர்பு: இல.85, சிவன் கோயிலடி மேற்கு வீதி, திருநெல்வேலி. (26664)

## விற்பனையாளர்கள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழகவிரும்புவர்களும் தேவை.

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
**44,42,பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.**
(26-21-16-19) (26618)

## வீதியோரத்தில் கழிவு: பயணிகள் சிரமம்

வலி.வடக்கு,ஜன.3

திருநெல்வேலி குடியேற்றத்திட்டம் ஊடாக கோண்டாவில் கிழக்கிற்குச செல்லும் வீதியின் கரைகளில் கொட்டப்படும் கழிவுகளால் அவ்வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதற்கிடையில் -

இவ்வாறு கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதைத் தவிர்கும் வகையில், உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதிப் பொது அமைப்புக்கள் நல்லூர் பிரதேச செயலாளர் யாழ். அரச அதிபர் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்குக் கடிதம் அனுப்ப ஏற்பாடுகளைச் செய்துள்ளன. (எ-86)

## வீடு விற்பனைக்கு

வீட்டுடன் அடங்கிய காணி மற்றும் தனிக்கிணற்றுடன் 3½ பரப்பு யாழ். நகரில் வண்ணார்பண்ணை தபாற்கந்தோருக்கு மிகச் சமீபமாக விற்பனைக் குண்டு. தரகர்களைத் தவிர்த்து நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

S.S.தங்கராஜா. T.P.222-6724.
"மருத மஹால்", இணுவில் வீதி, மானிப்பாய். (26689)(21-19-16-34)

## A/L 2005 2006

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
03-01-2004 (4.30p.m.)
யாழ். பல்கலைக்கழகம், இராமநாதன் நுண கலைக்கழகம் ஆகியவற்றுக்குரிய
சமஸ்கிருத வகுப்புக்கள்
ஆரம்பம்: **N.E.I,** (21-19-16-34)
நல்லூர், கொக்குவில். (26679)

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வித்தக விநாயகர் ஆலயம்

### தேவஸ்தான உதவியாளர் பதவி

மேற்படி ஆலயத்தில் சைவ ஆசாரமுறைப்படி நாளாந்தக் கருமங்களை ஆற்றுவதற்கு ஆண் உதவியாளர் ஒருவர் தேவைப் படுகின்றார். இதற்குப் பொருத்தமானவர்கள் 10-01-2004 சனிக்கிழமை சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்லூரிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

*தலைவர்.*
சிவயோகம் அறக்கட்டளை நிதியம், லண்டன்
03.01.2004. (21-16-19) (C/32393)

## இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் தனது 46ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் மாபெரும் மென்பந்துச் சுற்றுப் போட்டி - 2004

மேற்படி போட்டி 7பேர் பங்குபற்றும் 10பந்து பரிமாற்றங்களைக் கொண்டது. இந்தப் போட்டியில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பப் படிவங்களைக் கீழ்க்காணும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

- ▲ ராஜ் சகோதரர்கள் & எலக்ரோனிக் — புதிய பஜார் வீதி, யாழ்ப்பாணம்.
- ▲ இலட்சுமி உணவகம், (அன்ரப்பா) — கே.கே.எஸ். றோட், இணுவில்.
- ▲ மகாலட்சுமி பான்சி கூட்ஸ் — பஸ் நிலையம் முன்பாக ~ சுன்னாகம்.

☞ விண்ணப்பக் கட்டணம் ரூபா 100/=
விண்ணப்ப முடிவு திகதி :12-01-2004
(26690)(35-21-19-16)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட டாக்டர்கள் சிபார்சு செய்வது
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By: Royal Industries, Colombo. ☎.0112334603




ஏக விநியோகத்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567
சந்திரத்துச் சந்திக்கு அருகில் ⇨

## இசைக் குறிப்புகள்

ஓகன்(Organ), கிற்றார் (Guitar), வயலின், வீணை போன்ற இசைக் கருவிகளில் இசைப்பதற்கான சினிமா, பக்தி, கிறிஸ்தவப் பாடல்களுக்கான இசைக்குறிப்புகள் சிறப்புத் தள்ளுபடியில் விற்பனையாகின்றன.

**5 பாடல்களைக் கொண்ட ஒரு புத்தகத்தின் விலை ரூபா 50.00 மட்டுமே!**

*இச்சலுகை இன்றும் நாளையும் மட்டுமே!*
தொடர்பு: **S.S.றஜீந்திரன்**
கரவீனா இசைமன்றம், கோயில் வீதி, நல்லூர்.
T.P.: 0777 031293
(கைலாய பிள்ளையார் கோவிலில் இருந்து 150 m தெற்கே) (26680) (25-21-19-16)

## தேவை

எமது ஸ்தாபனத்துக்கு விற்பனையாளர்கள்.. கணக்காளர், சாரதி ஆகியோர் தேவை. (சாரதி 50 வயதுக்கு மேற்பட்டவர்).

**7 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.**

தொடர்பு:
விளம்பர இல.2134
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.
(26501) (21-19-16)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவக்கொழுந்து ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அச்சுவேலி, தோப்பைப் பிறப்பிடமாகவும், நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து ஆறுமுகம் 29-12-2003 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் (ஓய்வுபெற்ற பொலீஸ் அதிகாரி) அன்பு மனைவியும் திருமதி சுகிர்தராணி - சயனொளிபவன் (ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை), திருமதி இந்திராணி - தயாகுணரட்ணசிங்கம் (ஆசிரிய ஆலோசகர், வவுனியா), தெய்வேந்திரன் (பொறியியலாளர், லண்டன்), சிவஞானம் (கணக்காளர், லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சயனொளிபவன் (முன்னாள் களஞ்சிய பொறுப்பதிகாரி நெல் சந்தைப்படுத்தும் சபை), தயாகுணரட்ணசிங்கம் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர், செயலகம், வவுனியா), கலாவல்லி (லண்டன்), சுகமதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் முகுந்தன், தாட்சாயினி, சுகிற்றா, நிலானி, சரவணன், சாய்கிருஷ்ணா, செந்தூரன், சேந்தன், சுகந்தன், சுதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2004) சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தோப்பு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'வசந்தம்'*
*இராச வீதி, தோப்பு,*
*அச்சுவேலி.*
(26651) (26-21-11-19)

தகவல்:
ஆ.சிவஞானம் *(மகன்)*

## கண்ணீர் அஞ்சலி

எமது உதவிப் பொதுமுகாமையாளர்
திரு.க. பாலசுப்பிரமணியம்
அவர்களின் அன்பு மனைவி
**திருமதி லோகநாயகி பாலசுப்பிரமணியம்**



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்,
இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை
(26571)(32-21-18-11)

## நீங்காத நினைவில் எட்டாண்டு

மலர்வு
24
03
1944



உதிர்வு
21
12
1996

### முத்துச்சாமி மகாலிங்கம்

திதி: ஏகாதசி 03-01-2004

உங்கள் ஆத்மாவுக்கு
எங்கள் ஆத்ம உணர்வுகள் என்றென்றும்
அன்புடன் உறுதுணையாக
எத்தனை சுழற்சிவரினும் தொடரும்...

- குடும்பத்தினர்.

*53, பெரிய தம்பிரான் வீதி,*
*வண்ணார்பண்ணை.*
(26681)(32-21-19-16)



# சீனாவில் அதிவேக ரயில்

சீனாவில் காந்த விசை மூலம் அந்தரத்தில் மிதந்தபடி அதிவேகமாகச் செல்லும் ரயில் போக்குவரத்து புத்தாண்டு தினத்தில் தொடங்கியது.

மணிக்கு 430 கி.மீ. வேகத்தில் செல்லும் இந்த ரயிலை ஜேர்மன் நிறுவனம் வடிவமைத்துள்ளது. இதற்கான மொத்தச் செலவு 5,400 கோடி ரூபா (இந்தியப் பணத்தில்).

இந்த அதிவேக ரயில் போக்குவரத்தை ஜேர்மன் பிரதமர் ஜேராட்டு ஷ்ரோடர் முறைப்படி கடந்த 2002 டிசெம்பர் 31ஆம் திகதி தொடக்கி வைத்தார்.

அப்போது, அந்த ரயிலில் ஷ்ரோடரும் சீனாவின் அப்போதைய பிரதமர் ரோங்ஜியும் பயணம் செய்தனர்.

அதன்பின் பல்வேறு சோதனைகளையடுத்து, இந்த ரயில் பயணிகள் சேவைக்காக இப்போது ஓடத் தொடங்கியுள்ளது.

இதன்படி, முதல் ரயில் காலை 8.32 மணிக்கு லோங்யாங் ரயில் நிலையத்திலிருந்து 10 பயணிகளுடன் புறப்பட்டது. 30 கி.மீ. தொலைவில் உள்ள புரோங் சர்வதேச விமான நிலையத்தை 7 நிமிடம் 20 வினாடிகளில் சென்றடைந்தது. இந்த ரயிலில் கட்டணம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.



ஜப்பானின் தகாஷிமயா நகைக் கடையில் புத்தாண்டு விற்பனைக்காக வைக்கப்பட்ட நெக்லஸ் மற்றும் வீட்டை அலங்கரிக்கும் அலங்கார விளக்கு இவை.

50 கரட் வைரங்கள், 465 கிறிஸ்டல்கள் மற்றும் 1 கிலோ சுத்தத் தங்கம் ஆகியவற்றைக் கொண்டு இவை தயாரிக்கப்பட்டன. இவற்றின் விலை 9 லட்சத்து 35 ஆயிரம் டொலர்கள். இதை இந்த விலை கொடுத்து வாங்கியவர் யார் என்பதுதான் தெரியவில்லை.

# 'டிரம்ஸ்' வாத்தியம் இசைத்து இந்தோனேஷியர் சாதனை

தொடர்ந்து 72 மணித்தியாலயங்கள் 'டிரம்ஸ்' இசைத்து உலக சாதனை நிகழ்த்தியுள்ளார் இந்தோனேஷியர் ஒருவர்.

குன்டோ ஹர்டோனோ (வயது 26) என்ற அவர் தொடர்ந்து நான்கு நாள்கள் 'டிரம்ஸ்' இசைத்து, தனது சாதனையை கடந்து வியாழக் கிழமை பூர்த்திசெய்தார்.

பிரிட்டனைச் சேர்ந்த அலிஸ்டர் ப்ரெளன் என்பவர் 58 மணி நேரம் 'டிரம்ஸ்' இசைத்து சாதனை நிகழ்த்தியிருந்தார். அந்தச் சாதனையை முறியடித்துள்ளார் குன்டோ.

குன்டோ போன்ற ஒரு குடிமகனைப் பெற்றிருப்பது இந்தோனேஷியாவுக்குப் பெருமை. 'நம் நாடு வலுவாக சாதனை நிகழ்த்த வல்லது என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார் அவர்' - என்றார் இந்தோனேஷிய சுற்றுலாத்துறை அமைச்சர் ஜஜிடே ஆர்டிகா.

குன்டோவின் பெயரை கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெறச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

# ஒரு பிரசவத்தில் 4 குழந்தைகள்

அமெரிக்காவின் கொலாடோ மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பெண் பிரசவத்துக்காக அங்குள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது. அந்தத் தாய்க்கு மட்டற்ற மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சி மேலும் அதிகரித்தது ஏன் தெரியுமா?

முதல் குழந்தை பிறந்த ஒரு சில நிமிடங்களில் 2 ஆவது குழந்தை பிறந்தது. அத்துடன், முடியவில்லை. 3 ஆவது குழந்தையும் அதை அடுத்து 4ஆவது குழந்தையும் பிறந்தன. இந்த 4 குழந்தைகளும் ஆண்கள். தாயும் குழந்தைகளும் நலமாக இருக்கிறார்கள். இந்த நான்கு குழந்தைகளும் ஒரே சாயலில் இருக்கின்றார்கள்.


# கோயில் யானைக்கு வெள்ளிக்கொலுசு



தமிழகத்தின் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் யானையான பார்வதிக்கு வெள்ளிக் கொலுசு அணிவிக்கப்பட்டது.

4கால்களுக்கும் 3ஆயிரத்து 335 கிலோ கிராம் எடையுள்ள வெள்ளிக் கொலுசுகள் அணிவிக்கப்பட்டுள்ளன.

மதுரையைச் சேர்ந்த உபயதாரர் ஒருவரால் இந்திய மதிப்பில் 31 ஆயிரத்து 700 ரூபா செலவில் செய்யப்பட்டு இக்கொலுசுகள் யானைக்கு அணிவிக்கப்பட்டுள்ளன. கோயில் யானைக்கு வெள்ளிக்கொலுசு அணிவிக்கப்படுவது தமிழகத்தில் இதுதான் முதல்முறை என மீனாட்சியின் கோயில் வட்டாரங்கள் தெரிவித்தன.



பகாமாஸ் நாட்டு எண்ணெய் கப்பல் ஒன்று இத்தாலியின் போர்ட்டோ டாரீஸ் துறைமுகத்தில் எண்ணெய் இறக்கிக்கொண்டு இருந்தது. அப்போது அந்தக் கப்பலில் வெடிவிபத்து ஏற்பட்டது. அந்த எண்ணெய்க் கப்பல் பயங்கரமாகக் கொளுந்துவிட்டு எரியும் காட்சி. இந்த எண்ணெய்க் கப்பல் மூழ்கினால் அந்தக் கடல் பகுதி முழுவதும் கடல் நீர் பாழாகிவிடும் அபாயம் ஏற்படும் என்று அஞ்சப்படுகிறது.

# ஆரோக்கியத் துவாய்களின் விளம்பரங்களுக்குத் தடை!

உணவு சாப்பிடும் நேரத்தில் பெண்களுக்கான ஆரோக்கியத் துவாய்கள் பொருள்களின் விளம்பரங்களுக்கு சீன அரசு தடை விதித்துள்ளது. இந்தப் புதிய தடை உத்தரவு புத்தாண்டு முதல் அமுக்கு வந்தது. சாப்பிடும் நேரத்தில் இது போன்ற விளம்பரங்கள் அடிக்கடி ஒளிபரப்பாவது குறித்து நேயர்கள் சிலர் ஆட்சேபம் தெரிவித்திருந்தனர். இதையடுத்து இந்தத் தடை பிறப்பிக்கப்பட்டது. இந்த விளம்பரங்களால் அருவருப்பு ஏற்பட்டு உணவு உண்ண முடியாமல் உள்ளதாக முறையிடப்பட்டது. மேலும் ஒரு நிகழ்ச்சிக்கு நடுவில் விளம்பரங்களை ஒளிபரப்புவதற்கு சில கட்டுப்பாடுகளை அரசு விதித்துள்ளது.

வானொலி, தொலைக்காட்சி பார்ப்பவர்கள் அதில் வரும் விளம்பரங்கள் குறித்துத் தங்களுக்கு ஏதும் ஆட்சேபம் இருந்தால் தெரிவிக்க வசதியாக தொலைபேசி வசதி செய்து தரப்பட்டுள்ளது. அத்துமீறி செய்யப்படும் விளம்பரங்கள் பற்றி புகார் தெரிவித்தால் உடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சீன அரசின் இந்த திடீர் உத்தரவு நேயர்களுக்கு மகிழ்ச்சி அளித்தாலும், நிறுவனங்களுக்குத் தர்ம சங்கடமான சூழ்நிலையும் தொலைக்காட்சி நிலையங்களுக்கு விளம்பர வருவாய் இழப்பும் ஏற்பட்டுள்ளது.

இரவு 7முதல் 9மணிவரைதான் முக்கியமான நேரமாகக் கருதப்படுகிறது. அப்போது செய்யப்படும் விளம்பரங்கள் மூலம் அதிக வருவாய் கிடைக்கிறது. தற்போது விதிக்கப்பட்டுள்ள தடையால் விளம்பர வருவாய் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அக்கரைச் சீமையிலே...

## நீர் யானை தாக்கி மணப்பெண் பலி!

நீர் யானை தாக்கி தென்னாபிரிக்காவில் மணப்பெண்ணொருவர் பரிதாபமாக இறந்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன் மணம் முடித்த இவர் தனது கணவருடன் தலைநகர் ஜோகனஸ்பேர்க்கிலுள்ள ஆற்றில் உல்லாசமாகப் படகுப் பயணம் செய்துகொண்டிருந்தார்.

அப்போது அங்கிருந்த நீர் யானையொன்று அவர்கள் பயணம் செய்த படகைக் கவிழ்த்து அவர்களைத் தாக்கியது. இதில் இவர் அந்த இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். இவரது கணவரும் நீர்யானையின் தாக்குதலால் படுகாயமடைந்து வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

# 'பொலீஸார் என்னை அடித்து உதைத்தனர்' மைக்கல் ஜக்ஸன் பரபரப்புப் பேட்டி!

விசாரணையின்போது பொலீஸாரால் தான் கடுமையாகத் தாக்கப்பட்டேன் என்று சிறுவர் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டில் சிக்கியிருக்கும் பிரபல பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜக்ஸன் பரபரப்புப் பேட்டி அளித்திருக்கிறார்.

சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டின் கீழ் மைக்கல் ஜக்ஸன் மீது வழக்குத் தொடரப்பட்ட பின்னர், முதல் தடவையாகத் தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் பேட்டி அளித்தார். அந்தப் பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:-

நான் சிறுவர்களைப் பார்க்கும் போது கடவுளின் முகத்தைப் பார்க்கிறேன். அதனால்தான் நான் குழந்தைகளை அதிகளவில் நேசிக்கிறேன்.

சிறுவர்களுடன் ஒரே படுக்கையில் படுப்பதில் எந்தத் தவறும் இல்லை. அதில் துஷ்பிரயோகம் எதுவும் இல்லை என் மனம் அந்தப் பாதையில் செல்லவில்லை. நான்பெற்ற குழந்தைகளையே, எனக்கு நன்கு தெரிந்த ஒருவரது படுக்கையில் தூங்குவதற்கு நான் அனுமதிப்பேன்.

நான் யாரைத் தவறான உபயோகக்



குப் பயன்படுத்திக் கொண்டேன் என்று குற்றஞ்சாட்டப்பட்டேனோ, அந்தச் சிறுவனுக்கு முன்பு புற்றுநோய் இருந்தது. அந்தச் சிறுவனை, பண ஆசை பிடித்த சிலர் தவறாக என்மீது குற்றஞ்சாட்டுவதற்குப் பயன்படுத்திக் கொண்டனர் எனக்கு அந்தச் சிறுவனின் மன தில் என்ன இருக்கிறது என்பது தெரியும்.

நான் அவனை எனது இச்சைக்குப் பயன்படுத்திக் கொண்டேன் என்று கூறுவது தவறு.


இது தொடர்பான விசாரணையின் போது பொலீஸார் என்னிடம் கடுமையாக நடந்துகொண்டனர். என்னை அடித்து உதைத்தனர். இதில் என் தோள்பட்டை கீழே இறங்கிவிட்டது. இதனால், எனக்கு வலியும், வேதனையும் ஏற்பட்டுள்ளது.

பொலீஸார் என்னை நாற்றம் பிடித்த குளியல் அறையில் 45 நிமிடத்துக்கும் மேலாக அடைத்து வைத்தனர்.

1993ஆம் ஆண்டு இதேபோல ஒரு வழக்கு என்மீது தொடரப்பட்ட போது நான் பணம் கொடுத்து சமரசம் செய்து கொண்டேன். அதைத் தொடர்ந்துதான் பணத்துக்காக என் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன - என்றார்.

அதேநேரம், இந்த வழக்குத் தொடர்பாக ஜக்ஸனின் பெற்றோர் மற்றும் உதவியாளர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் ஜக்ஸனின் வலதுகரமாகச் செயற்பட்டுவந்த அவரது உதவியாளர் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். இது ஜக்ஸனுக்கு மேலும் சிக்கல்களை உருவாக்கலாம் என்று கூறப்படுகிறது.

பொலீஸார் தன்னை அடித்து உதைத்தனர் என்று மைக்கல் ஜக்ஸன் கூறிய குற்றச்சாட்டை பொலீஸார் அடியோடு மறுத்திருக்கின்றனர்.



அமெரிக்காவைச் சேர்ந்த மெக்லியோட் என்ற விமானி புதிய சாதனை ஏற்படுத்தத் தனது குட்டி விமானத்தில் புறப்பட்டு இருக்கிறார். 4இருக்கைகள் கொண்ட அந்தக்குட்டி விமானத்தில் அவர் தன்னந்தனியாக உலகை சுற்றிவரப்போகிறார். வடதுருவம் மற்றும் தென்துருவ பகுதிகளுக்கும் இந்த விமானம் செல்லும். மெரிலேண்ட் பகுதியில் உள்ள விமான நிலையத்தில் இருந்து அந்த ஒற்றை இயந்திர விமானம் புறப்பட்டு சென்றது. 2 மாதத்தில் இந்தப் பயணம் முடிவடையும்.

# 9ஆயிரம் டெஸ்ட் ஓட்டத்தை நேற்றுக் கடந்தார் சச்சின்

ஆஸ்திரேலிய அணியுடனான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் போது இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் சிறப்பாக துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல 73 ஓட்டங்களை பெற்றார். தனது 9 ஆயிரமாவது டெஸ்ட் ஓட்டத்தையும அவர் நேற்றுக் கடந்தார்.

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நேற்று இப்போட்டி ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுததாடத் தீர்மானித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஆகாஷ் சோப்ராவும் வீரேந்தர் ஷேவாக்கும் முதல் விக்கெட்டுக்காக 123 ஓட்டங்களைப் பெற்றனர்.

தொடர்ச்சியாக இரு டெஸ்ட் போட்டிகளில் சோப்ரா - ஷேவாக் ஜோடி முதல்' விக்கெட்டுக்காக நூற்றுக்கும் மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மதிய உணவு இடைவேளையின பின்னர் ஷேவாக் 115 பந்துகளில் ஒரு சிக்ஸர், 5பௌண்டரிகள் உட்பட 72 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கிலெஸ்பின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

ஷேவாக் ஆட்டமிழந்தபின் இந்திய அணி மேலும் 5 ஓட்டங்களைப் பெற்ற போது ஆகாஷ் சோப்ராவை பிரெட்லீ ஆட்டமிழக்கச் செய்தார்.

அதன் பின் டெண்டுல்கர் - திராவிட் ஜோடி 66 ஓட்டங்களைப் பெற்றது. 82 பந்துகளில் 38 ஓட்டங் களைப் பெற்ற ராகுல் திராவிட் கிலெஸ் பியின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

4ஆவது விக்கெட்டுக்காகடெண்டுல்கரும் வி.வி.எஸ். லஷ்மனும் நேற்றைய ஆட்டமுடிவு வரை 90 ஓட்டங்களைப் பெற்றனர்.

நேற்றைய ஆட்டமுடிவின்போது இந்திய அணி 3 விக்கெட் இழப்புக்கு 284 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

டெண்டுல்கர் 73 ஓட்டங்களுடனும் லஷ்மன் 29 ஓட்டங்களுடனுமஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இப்போட்டியில் டெண்டுல்கர் 36 ஓட்டங்களைப் பெற்ற போது டெஸ்ட் போட்டிகளில் அவர் பெற்ற ஓட்ட எண்ணிக்கை 9 ஆயிரமாக உயர்ந்தது.

126 வருடகால கிரிக்கெட் வரலாற்றில் 9 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த நான்காவது வீரர் டெண்டுல்கர் ஆவார்.

சுனில் கவாஸ்கர், அலன் போர்டர், ஸ்ரீவோ ஆகியோர் மாத்திரமே டெண்டுல்கரை விட அதிக டெஸ்ட் ஓட்டங்களைப் பெற்ற வீரர்களாவர்.

கடந்த வருடம் 13 இன்னிங்ஸ்களில் மொத்தமாக 153 ஓட்டங்களை மட்டுமே பெற்ற சச்சின் டெண்டுல்கர் இவ்வருடம் முதல் போட்டியிலேயே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடதக்கது.

நேற்று தனது 37 ஆவது அரைச் சதத்தை 100 பந்துகளில் பூர்த்தி செய்தார் அவர்.ஆஸ்திரேலியாவுடனான தற்போதைய டெஸ்ட்தொடரில் டெண்டுல்கர் பெற்ற முதலாவது அரைச்சதம இவாகும்.

இப்போட்டி ஆஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்வ்ரீவோ பங்கு பற்றும் இறுதி டெஸ்ட் போட்டியாகும். இப்போட்டியை நேற்று 44,901 ரசிகர்கள் நேரில் பார்வையிட்டனர்.

## 'ரன்னா'களுக்குத் தடை: ஸ்ரீவோ கோரிக்கை

'கிரிக்கெட் போட்டிகளில் துடுப்பாட்ட வீரர்கள் காயமடையும் போது 'ரன்னர்' களைப் பயன்படுத்து வதற்குத் தடை விதிக்கவேண்டும்.' -இவ்வாறு ஆஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணித்தலைவர் ஸ்ரீவோ நேற்று முன்தினம் கூறினார்.

"துடுப்பாட்டவீரர்கள் காயமடைந்தால 'ரன்னர்'கள் தேவையென நான் எண்ணவில்லை."

துடுப்பாட்ட வீரர்கள் காயமடைந்தால் அவாகள் அடித்து ஆடவேண்டும அல்லது வெளியேறவேண்டும்.

'ரன்னர்'கள் களமிறங்கும்போது களத்தில் அதிக குழப்பங்கள் ஏற்படுகின்றன. சம்பந்தப்பட்ட துடுப்பாட்ட வீரர் உண்மையாகவே காயமடைந்துள்ளாரா என்பதிலும் சந்தேகம் ஏற்படும்.

-இவ்வாறு இந்திய அணியுடனான நான்காவது டெஸ்ட் போட்டிக்கு முன்னர் செய்தியாளர்களிடம் பேசுகையிலே ஸ்ரீவோ கூறினார்.

2001 ஆம் ஆண்டு இங்கிலாந்து ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் போட்டியில் காலில் காயமடைந்த ஸ்ரீவ்வோ ஆட்டமிழக்காமல் 157 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'விதிகளில் வேறு என்ன மாற்றம் செய்யவேண்டும்?' என அவரிடம் வினவப்பட்டபோது 'லெக்பை' குறித்து குறைகூறினார் ஸ்ரீவ்வோ

"பந்துகளைத் தவறவிடுபவர்களுக்கு ஏன் ஓட்டம் வழங்கவேண்டும எனப்புரியவில்லை"

-இவ்வாறு ஸ்ரீவ்வோ பதிலளித்தா.

# மகளிர்தினத்தையொட்டி விளையாட்டுப் போட்டி

வலி.வடக்கு,ஜன.3

அனைத்துலக மகளிர்தினத்தை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவினர் யாழ். மாவட்டத்தில் விளையாட்டுப் போட்டியொன்றை நடத்தவுள்ளனர்.

பெண்கள் மட்டும் கலந்து கொள்ளவுள்ள இந்தத் தடகளப் போட்டி சம்பந்தமான கலந்துரையாடல் யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோத்தர் றொகான் இராஜசிங்கம் தலைமையில யாழ். செயலக விளையாட்டுத்துறை அறையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் மாதுளன், துணைப் பொறுப்பாளர் தீபன், மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்கள், யாழ் மாவட்டமகளிர் கோட்ட அரசியல் துறையைச் சேர்ந்த வசந்தி, வர்ணா, அன்பு, பூமகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

போட்டிகளில் கலந்து கொள்பவர்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்களுடனோ அன்றி கோட்ட பிரதேச மகளிர் அமைப்புப்பொறுப்பாளர்களுடனோ தொடர்பு கொண்டு தமது விண்ணப்பங்களைக் கையளிக்கும்படி விளையாட்டுத்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தடகளப் போட்டிகளுடன் குழுநிலையிலான கிளித்தட்டு (தாச்சி) கரப்பந்தாட்டம் என்பனவும், சையிக்கிளோட்டம், மரதன் என்பனவும் இடம் பெறவுள்ளன. (ஓ-86)

## கபடி

வலி.வடக்கு,ஜன.3

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கபடிப்போட்டிகள் நாளை காலை 9 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

## கரப்பந்தாட்டம்

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையேயான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி இன்று காலை 9.00 மணிமுதல் திருநெலவேலி முடமாவடி ஞானவைரவர் விளையாடுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ஓ-86)


## மனமுவந்து நன்றி கூறி மகிழ்கிறோம்



எமக்கு , மலசலகூடம் அமைப்பதற்கும் திருத்தஞ் செய்வதற்கும் சிமெந்து தந்து உதவிய இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் மாண்புமிகு அமைச்சர் கௌரவ

**தியாகராசா மகேஸ்வரன்**

அவர்களுக்கும்

இந்த உதவியை எமக்களிப்பதற்கு உதவிய ஆங்கிலக் கல்லூரியின் இந்து தமிழக் கலாசார மன்றத்தினருக்கும் நாம் மனமுவந்து நன்றி கூறிமகிழ்கின்றோம்.

இவர்களது சேவை மேன்மேலும் தொடர இறை ஆசிவேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

- நன்றி கூறி மகிழ்பவர்கள்:

**J/281, J/282, J/ 283, J/284, J/285, J/ 286**

*அச்சுவேலி.* **கிராமசேவகர் பிரிவுகளில் உதவி பெற்றவர்கள்.**

(26704)(36-12-16)

## ஓடுதல், நடத்தலால் ஏற்படும் நன்மைகளை வெளிக்கொணர்வதற்காக நடத்தப்படும் சிறப்பு நிகழ்வு

குப்பிளான் சந்தியல் நாளை (04.01.2004) ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி யாழ். மணிக் கூட்டுக் கோபுரத்தடியில் முடிவடையும் இந்நிகழ்வில் சைக்கிள் ஓட்டம் ஓடுவதற்கும், மரதன் ஓட்டம் ஓடுவதற்கும், நடப்பதற்கும் ஆர்வமுடைய அனைவரையும் பங்குபற்றுமாறு அன்போடு அழைக்கின்றோம.

*குப்பிளான், ஏழாலை.* **க. தேயாபிரகாசினி.**

(26699)(36-12-16)


## இதய அஞ்சலி

**கனகசபாபதிப்பிள்ளை பொன்னம்மா**

(அளவெட்டி கிழக்கு)

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோக்தராக கடமைபுரியும் திருமதி சிவபாலன் மங்களேஸ்வா' அவர்களின் தாயார் 02.01.2004 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், தெல்லிப்பழை.

(26722)(36-12-16)

## துயர்பகிர்தல்

எமது வங்கியில் பணியாற்றும்
செல்வி மேரி அசுந்தா மரியாம்பிள்ளை
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி பிலிப் ஆச்சிமரியாம்பிள்ளை** அவர்கள்
காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள், ஊழியர் நலன்புரிசங்கம்,
மக்கள் வங்கி - பிரதான வீதி கிளை, யாழ்ப்பாணம்.

(12-16) (26720)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சீதேவிப்பிள்ளை இரத்தினசபாபதி

அல்லாரை தெற்கு, மீசாலையைச் சேர்ந்த திருமதி சீதேவிப்பிள்ளை இரத்தினசபாபதி நேற்று (02.01.2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - தங்கமுத்து தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், தம்பையா இரத்தினசபாபதியின் (ஓய்வுபெற்ற பொலீஸ் தலைமைப் பரிசோதகர்) மனைவியும் காலஞ்சென்ற திருமதி அன்னம்மா கார்த்திகேசு, திருமதி இராசம்மா அப்பர் மற்றும் சரஸ்வதி வல்லிபுரம் ஆகியோரின் சகோதரியும் திருமதி செல்வநாயகி நல்லையா (ஜேர்மனி), திருமதி செல்வராணி செல்வரஞ்சன் (கல்விவலயம், வவுனியா), இ.ஸ்ரீபஞ்சாட்சரம் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும் சி.நல்லையா (ஜேர்மனி), பெர்னாண்டோ செல்வரஞ்சன் (வவுனியா), தர்மலிங்கம் மேனகா (நோர்வே) ஆகியோரின் மாமியாரும் டிலானி, டிலக்சி, ரிபோகா (ஜேர்மனி), அலன்ரினா, சஜீனா (வவுனியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

*அல்லாரை தெற்கு, மீசாலை.* (26705)(35-12-16)

தகவல்: த.இரத்தினசபாபதி (கணவர்)

## திருமதி பிலிப் ஆச்சி மரியாம்பிள்ளை

(செல்லம்)

கரம்பன் கிழக்கு ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பிலிப் ஆச்சி மரியாம்பிள்ளை அவர்கள் நேற்று (02-01-2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை (சீனியர்) அவர்களின் அன்பு மனைவியும் சில்வெஸ்ரர் (ஜேர்மனி), ஸ்கொலஸ்ரிக்கா, மேரி அசும்தா (கலா -மக்கள் வங்கி யாழ்.பிரதானகிளை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சேவியா (கொழும்பு), மேரி மக்டெலின் செல்வமகள் ஆகியோரின் அன்பு மாமியாரும் அனிற்றா சுபாசினி, டயானா, டிலானா, சாம் ஆகியோரின் அன்பு போத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03-01-2004) சனிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்திற்கு எடுத்து செல்லப்பட்டு, இரங்கற் திருப்பலியின்பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*859/16, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.* (26750)(35-12-16)

தகவல்: ம.மேரி அசும்தா (கலா-மகள்)

## திருமதி செல்வராணி சிவபாலசிங்கம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் தற்பொழுது வெள்ளவத்தை கொழும்பில் வசித்து வந்தவருமான திருமதி செல்வராணி சிவபாலசிங்கம் 01.01.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லத்துரை - தங்கம்மா அவர்களின் அன்பு மகளும், காலஞ் சென்ற நாகலிங்கம் - பாக்கியம் அவர்களின் அன்பு மருமகளும், சியாமிளா, சிவகுமார் (ரஞ்சன்-கனடா), ஷர்மிளா (கௌரி-நோர்வே), சசிகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயகுமார், தர்ஷினி (கனடா), அரவிந்தன் (நோர்வே), சிவப்பிரியா ஆகியோரின் அன்பு மாமியாரும், சிந்துஜா, வெங்கடேஸ், லக்ஷிகா, சரவணா, சரண்யா, லாவண்யா, சௌமியா, சஞ்ஜய், சந்தோஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற வைரமுத்து, காலஞ்சென்ற சத்தியானந்தன், நித்தியானந்தன், விவேகானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.37, நெல்சன் பிளேஸ், வெள்ளவததையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நாளை (04.01.2004) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

S.சசிகுமார் (மகன்)
*37,நெல்சன் பிளேஸ்,*
*வெள்ளவத்தை.*
**0777 319641 2560465** (26710) (35-12-16)

தகவல்:
வ.குமாரசாமி,
சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.




கற்பகன் துணை
தென்கோவை

## கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்

இருபாலை, கோப்பாய்.

திருவாசக முற்றும் ஓதலும்
தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள
தருமபுர ஆதீனம்
டாக்டர் ஸ்ரீமத் குமாரசாமி தம்பிரான் சுவாமிகளின்
அருளுரையும் ஆசியும்
காலம் 04.01.2004 ஞாயிற்றுக்கிழமை
காலை 6 மணிக்கு திருவாசக முற்றோதல் ஆரம்பமாகி முற்பகல் 10.30 மணிக்கு சுவாமிகளின் அருளுரையும் நடைபெற திருவருள் கூடியுள்ளது

இருபாலை, கோப்பாய். தேவஸ்தானம்.

விளம்பர அனுசரணை
தயா நகைப்பூங்கா,
213 C கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (சி.32451)(36-11-18)

## கண்ணீர் அஞ்சலி



பரந்தன் இரசாயனக்கூட்டுத்தாபன
முன்னாள் போமன்
**சிவானந்தம் வாதவூரன்**
அவர்கள் 01.01.2004 இல் காலமானதையிட்டு நாம் மிகவும் வேதனையும் துக்கமும் அடைகிறோம். இவரது மறைவில் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் கண்ணீர் அஞ்சலயைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தியடைய இணுவையூர் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

இணுவில். (26713)(11-18-36) - உறவினர்கள்.

## நெஞ்சம் நெகிழ்ந்த அஞ்சலி

மண்ணில்
10
09
1927



விண்ணில்
02
01
2004


நீர்வேலி
ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோயில் பிரதமகுரு
**சிவஸ்ரீ கார்த்திகேயக்குரு சாம்பசதாசிவக்குரு**
அவர்கள்
இயற்கையெய்தியமையையிட்டு நாம் மிகவும் கவலைப்படுகிறோம்.
அன்பு முகமும் அமைதியான பேச்சும்
பணிவு நிறைந்த பண்பும்
இலக்கணமாய்க்கொண்ட
இவரின் இழப்பு ஈடுசெய்யமுடியாதது.
ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
ஸ்ரீ விக்னேஸ்வரப் பெருமானைப் பணிந்தேத்தி
வணங்குகிறோம்.

- ச.புவிச்சந்திரன்
வினோ நகைப் பூங்கா
யாழ்ப்பாணம்.

(சி.32448)(36-11-18)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணகத்தில்
மைந்தனாக
09
10
1971



விண்ணகத்தில்
தெய்வமாக
04
12
2003

**அமரர் தம்பிராஜா சுதர்சன் (சுதா)**
(ஆசிரியர், யா/புங்குடுதீவு, மகாவித்தியாலயம்)

தாய்க்குத் தலைமகனாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசமிகு நற்புதல்வராய்
உற்ற சகோதரர்க்கு ஆசை அண்ணாவாய்
மாணவச் செல்வங்கட்கு நல்லாசிரியராய்
பழகியோருடன் பண்பாளராய்
பார் போற்றப் பிறந்த எம் செல்வமே!
நொடிப் பொழுதில் காலன்-உங்களை
எம்மிடமிருந்து பிரித்தெடுத்த விட்டான்!
உடல் தன்னில் உயிர் இருக்கும் வரை
உங்கள் இழப்பு ஈடுசெய்ய முடியாது ஐயனே!
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

04-12-2003 அன்று எம்மையெல்லாம் ஆறாத்துயரில் விட்டு மீளாத் துயில் கொண்ட எமது பாசமிகு மகனின் இறுதிக்கிரியைகளின்போது நேரடியாகவும், தொலைபேசி, தபால், தந்தி மூலமாகவும் ஆறுதல் கூறியோருக்கும் கண்ணீர் அஞ்சலியைப் பிரசுரித்தும் பத்திரிகைகளில் வெளியிட்டும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் அவரது பூதவுடல் நெடுந்தீவை நோக்கி வந்த வேளை வர்த்தக நிறுவனங்களை மூடி துயர் பகிர்ந்த புங்குடுதீவு மக்கள் யா/புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் , பெற்றோர்கள் கல்விசார ஊழியர்கள் மற்றும ஏனைய பாடசாலை சமூகத்தினருக்கும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த எம் தீவக மக்கள் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவருக்கும எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முதலாம் வட்டாரம், உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.
நெடுந்தீவு. (26716)(36-1118)

## விபத்தில் காயம்

கபொதசாதாரணதரப் பரீட்சை விணாதாள் திருத்தச் சென்ற புலோலி வலய ஆங்கிலக் கல்விப் பணிப்பாளர் சதாசிவம் சுந்தரமூர்த்தி (வயது 47) மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி படுகாயமடைந்தார். பருத்தித்துறை, சாரையடிப் பகுதியைச் சேர்ந்த இவர் நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவேளை, ஆவரங்கால் பகுதியில் விபத்துக்குள்ளாகினார்.(ம-15)

SUBRA(14)
2006 A/L
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள்
ஆரம்பம் :
03.01.2004
சனி காலை - 8.30.
(சி.32377)

O/L DAY CLASS
பிரிவு I ஆரம்பம்
05.01.2004
MON.-8.30 a.m.
"SUPER GRADE"
ஆசிரியர் குழு
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (26719)

தரம் 5
புலமைப் பரிசில் - 2004
சுந்தர் வெளியீடு
(பரீட்சை நிலையம்)
எமது நிறுவனத்தில் ஞாயிறு தோறும் மேற்படி நிறுவனப் பரீட்சை நடைபெறும்.
பரீசை I இல்பரிசுக்குரிய மாணவர்கள்
★ க.நிஷாந்தினி - 184 (யாழ்/இந்து ஆரம்பப் பாடசாலை)
★ உ.நிலுக்யா - 176 (யாழ்/ புனித ஜோன் பொஸ்கோ)
★ மு.தனுஜா - 175 (மனிப்பாய் மெமோறியல் கல்லூரி)
அடுத்த பரீட்சை - 04.01.2004
ஞாயிறு காலை 9.00
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (26718)

ஆசிரியர்
போட்டிப் பரீட்சை
Science Hall வகுப்பு (26726)
சனி. ஞாயிறு, 2- 4 மணி

உயர் கல்விக் கழகம்
கண்டிவீதி, கைதடி
யாழ். முன்னணி ஆசிரியர் - குழுவினருடன்
A/L கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்: 07.01.2004 புதன்
காலை 8.00 மணி
நிர்வாகி,
உயர்கல்விக் கழகம்
(26687)(36) கைதடி.

நாகம்ஸ் சுன்னாகம்
கருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த
எனக்கு 20 (ரீலஸ்) உனக்கு 18 (பு.நே.)
தினசரி காட்சி : 11.00, 3.00.
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 7 மணி
(C-32372)(12)

நிறஞ்சனாஸ் சங்கானை
மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமான தோழி (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு
KEOMA
இரவு 8.45 இற்கு (பு.நே.)
(C-32175) (12)

ராஜா யாழ்ப்பாணம்



இளைய தளபதி விஜய், ஜோதிகா நடித்த
திருமலை (ரீலஸ்)
காட்சிகள் 10.30,2.30,6.30,9.30 (பு.நே.)
(சி-32369) (32)

லிபேட்டி அச்சுவேலி



அஜித், மீராஜஸ்மின் நடித்த
ஆஞ்சநேயா (ரீலஸ்)
தினசரி காட்சி நேரம்: 3.00, 7.00.
சனி, ஞாயிறு : 11.00, 3.00,7.00 (பு.நே.)
(C-32371) (32)

# மரண அறிவித்தல்கள்

### யக்கரசு துரைராசா

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த யக்கரசு துரைராசா அவர்கள் நேற்று(02.01.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (04.01.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அடைக்கல நாயகி சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உயரப்புலம், து.ஞானசேகரன்(யோகம்)
ஆனைக்கோட்டை. (26725)(36-11-18) - மகன் -

### சிவானந்தம் வாதவூரன்

**(முன்னாள் போமன், இரசாயனக் கூட்டுத்தாபனம், பரந்தன்)**

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது பிரான்ஸில் வசித்துவந்தவரான சிவானந்தம் வாதவூரன் அவர்கள் 01.01.2004 வியாழக்கிழமை இணுவிலில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவானந்தம் - பூரணத்தின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினம் - பாக்கியத்தின் அருமை மருமகனும் சாரதாம்பாளின் அன்புச் கணவரும் வசந்தி (ஜேர்மனி), மீரா (பிரான்ஸ்), சிவானந்தராஜா (சிவா - பிரான்ஸ்), சிவபாலன் (சின்னதம்பி- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் குஞ்சிதபாதம் (ஜேர்மனி) காமாட்சி சுந்தரம் (பிரான்ஸ்), சோதீஸ்வரி(பிரான்ஸ்),சியாமளா(சிங்கப்பூர்) ஆகியோரின் அருமை மாமனாரும காயித்திரி (ஜேர்மனி), கோபிநாத் (ஜேர்மனி), கார்த்திகா (ஜேர்மனி) புருசோத்தமன் (பிரான்ஸ்), கீர்த்தனா (பிரான்ஸ்), பார்த்தீபன் (பிரான்ஸ்), பிரதீப் (பிரான்ஸ்), பிரசாந் (பிரான்ஸ்), தினேசன் (பிரான்ஸ்), பிரியங்கா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் அம்மிஅம்மா (மட்டக்களப்பு), திலகவதி (கைதடி), திரவியராசா (கைதடி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி (மட்டக்களப்பு), தவில்மேதை பழநிமலை (கைதடி), வசந்தாதேவி (கைதடி), கமலாம்பிகை (நாச்சிமார் கோயிலடி), நாதஸ்வர மேதை N.Rகோவிந்தசாமி (இணுவில்), திருமதி செல்லம்மா (இணுவில்), தவில் மேதை N.Rசின்னராஜா (இணுவில்), மற்றும் திருமதி ஜெகதாம்பிகை (இணுவில்), திருமதி சத்தியபாமா (ஜேர்மனி), திருமதி வேதநாயகி (பிரான்ஸ்), நாதஸ்வர வித்துவான் N.R சந்தான கிருஷ்ணன் (இணுவில்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும.

தகவல்:
சிவானந்தராஜா (சிவா)
சிவபாலன்(சின்னத்தம்பி)
இணுவில். (26712)(36-11-18) (மகன்மார்)

### சின்னத்தம்பி மயில்வாகனம்

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி மயில்வாகனம் 01.01.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும் நவமணி (நோர்வே) காலஞ்சென்ற தவபாலன் (முன்னாள் உத்தியோகத்தர் மஸ்கன் லிமிட்டெட்) வேல்மன்னன் (நோர்வே), சிவமணி (ஆசிரியை யா/கைதடி குருசாமி வித்தியாலயம்), தவமணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கருணாகரன் (நோர்வே) மனோரஞ்சிதம் (ஆசிரியை யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்) நடராஜகுமார் (யா/ வ.தொ.கூ.ச. யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிஷாகவன், நிரோதனன்(நோர்வே) ரொசாந்தன் (யா/ பரியோவான் கல்லூரி), ரொசாளினி (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), யதுசனன், கீர்த்தனன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று (02.01.2004) வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவபுர வீதி, கைதடி வடக்கு. தகவல்:
கைதடி. (26687)(36)இ.நடராஜகுமார்.(மருமகன்)

### திருமதி பொன்னம்மா கனகசபாபதிப்பிள்ளை

கேணிக்கரை, அளவெட்டி கிழக்கைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா கனகசபாபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (02.01.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் கேதீஸ்வரன் (சுவிஸ்), கேதஸ்வரி (கனடா), விக்கினேஸ்வரி, மங்களேஸ்வரி (சமுர்த்தி உத்தியோகத்தர்- வலி. வடக்கு பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயலட்சுமி (சுவிஸ்), ஸ்ரீகாந்தன் (கனடா) செல்வச்சந்திரன் (C.T.B.வவுனியா), சிவபாலன் (தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, ஊர்காவற்துறை) ஆகியோரின் அன்பு மாமியாரும் தயானந்தன் சயந்தன், தயாநிதி, தயநிதி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2004) சனிக்கிழமை பி.ப 1.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணிக்கரை,
அளவெட்டி கிழக்கு, தகவல்:
அளவெட்டி. (26723)(36-11-18) - பிள்ளைகள்

### வல்லிபுரம் இரத்தினம்

**(இளைப்பாறிய பொலீஸ் அதிகாரி)**

அரசடி லேன், தாவடி கொக்குவிலைச் சேர்ந்த வல்லிபுரம் இரத்தினம் அவர்கள் நேற்று (2.1.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும், கணேஸ்வரன், மகேந்திரன் (ஜேர்மனி), ஜெயபாலன் (ஜேர்மனி), குமாரஸ்ரீகந்தன்(கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(3.1.2004) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'மலர்மஞ்சம்'
அரசடி லேன் தாவடி வடக்கு தகவல்:
கொக்குவில். (26727)(36-11-18) இ.கணேஸ்வரன்(மகன்)

### செல்வி உதயகுமார் மதிவதனி

பத்திரகாளி கோயில், சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் சுதுமலை மத்தி மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி உதயகுமார் மதிவதனி நேற்று (2.1.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (3.1.2004)சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சி.மோகனகுமார்(நாதஸ்வரம்) தகவல்:
சுதுமலை மத்தி.மானிப்பாய். (26728)(36-11-18) குடும்பத்தினர்.

# நுளம்புகளை ஒழிப்பதற்கு புகையூட்டும் நடவடிக்கை

## மாநகர சபை மேற்கொள்கிறது

யாழ்ப்பாணம்,ஜன.3

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில நுளம்புகளை ஒழிப்பதற்காக புகையூட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

வீதியோரங்களில் கொட்டப்படும் குப்பைகள், கழிவு நீர்வாய்க்கால்கள் மற்றும் நீர்தேங்கிய குட்டைகள் ஆகியவற்றில் டெங்கு காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள் பெருகுகின்றன.

இதனைக்கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக யாழ்.மாநகர சபையின் சுகாதாரப்பிரிவினர் இந்தப்புகையூட்டும் நடவடிக்கையை மேற்கொள்கின்றனர்.

மண்ணெண்ணெய் மற்றும் மலத்தியோன் ஆகிய இரண்டையும் சேர்த்து இயந்திரமூலம் புகையாக விசிறப்படுகிறது.

இதில் முதல் கட்டமாக குருநகர், கொண்டலடி மற்றும் வைமன் வீதி ஆகிய பகுதிகளில் தற்போது புகையூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை தமது வீடுகளில் சேரும குப்பை கூளங்களை வீதிகளில வீசாது பாதுகாப்பான இடத்தில் அவற்றைச் சேர்த்து வைத்து யாழ். மாநகர சபையின் சுத்திகரிப்பு தொழிலாளர்களிடம் ஒப்படைக்குமாறு. சுகாதார வைத்திய அதிகாரி பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-5)

# யாழ். இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். இராணுவத்தின் 51ஆவது சேனாதிபதியாக கடமையாற்றும் மேஜர் ஜெனரல் ரஞ்சித் டி.சில்வா கொழும்பு பிரதேசத்துக்குப் பொறுப்பான கூட்டு நடவடிக்கை கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இராணுவப் பேச்சாளராகக் கடமையாற்றிய பிரிகேடியர் சனத் கருணாரத்ன யாழ். இராணுவத்தின் 51 ஆவது படைப் பிரிவின் பிரதிக் கட்டளையிடும் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருகிறார். யாழ். 53ஆவது படைப்பிரிவின் சேனாதிபதியாக கடமையாற்றிய பிரிகேடியர் உதேனி முனசிங்க இராணுவத் தலைமையகத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறார்.

யாழ்ப்பாண 51ஆவது, 53ஆவது படைப்பிரிவுகளின் கட்டளைத் தளபதிகள் இன்னமும் நியமிக்கப்படவில்லை. அப்படைப் பிரிவுகளின் பதில் கட்டளைத தளபதிகளாக பிரிகேடியர் சனத கருணாரதன் (51ஆவது பிரிவு) பிரிகேடியர் சந்திரவங்ச (53ஆவது பிரிவு) ஆகியோர் கடமையாற்றுவர் என்று இராணுவத் தலைமையகம் தெரிவித்திருக்கிறது.

இதற்கிடையே, இராணுவத்தளபதியின் புதிய செயலாளராக பனாகொடை 11ஆவது படைப்பிரிவின் சேனாதிபதியான மேஜர் ஜெனரல் கே.பி. எகொடவெல நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## நான்கு அமைச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட தமது பொறுப்பில் இல்லாத அமைச்சுகளிலும் தலையிடக் கூடியதாகவே ஜனாதிபதி இந்நியமனங்களின் மூலம் செயற்பட்டிருக்கிறார் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

பொலீஸ்மா அதிபராக இருந்த ரி.ஈ.ஆனந்தராஜாவை 60 வயதுடன் ஓய்வு பெறச் செய்த ஜனாதிபதி, தனது தெரிவான பிரதிப்பொலிஸ்மா அதிபர் இந்திரா டி.சில்வாவை புதிய பொலீஸ்மா அதிபர் பதவியில் அமர்த்தினார். ஜனாதிபதிதனது அதிகாரத்தை இப்போது அரசின் ஏனைய அமைச்சுகளிலும் விஸ்தரித்து வருகிறார் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது என்று அரசியல் அவதானிகள் கூறியிருக்கின்றனர்.

## திறமை அடிப்ப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட அடிப்படையிலும் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யவும் யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

2006 ஆம் ஆண்டிலிருந்து பின்தங்கிய மாவட்டங்களின் அடிப்படையில் மாணவர்களை அனுமதிக்கும் முறையை முற்றாக ஒழிக்கவும் தேசிய கல்வி ஆணைக்குழு யோசனை தெரிவித்திருக்கிறது.

## குமார் நினைவு தினம்

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் 5ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலா சபதி கலையரங்கில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் உபதலைவர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறஉள்ளது.

நாவாந்துறை பங்குத்தந்தை அருட்திரு ம.சேவியர் கருணாரத்தினம், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தா பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். பல்கலைக கழகத் தமிழ்துறைத் தலைவர் பேராசியரிர் எஸ். சண்முகதாஸ், அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ் கட்சித் தலைவர் அ.விநாயகமூர்த்தி, யாழ் பல்கலைகழக மாணவா ஒன்றியத் தலைவா பயகீதரன், இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் தமகாசிவம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் எஸ்.கஜேந்திரன் ஆகியோர் நினைவுரைகள் நிகழ்துவர் (ம-51)


**கணக்கீடு**

A/L 2006 ஆரம்பம் நாளை 3 p.m.

ஆசிரியர்: S.தவா (B.COM(HONS)[ACC.SPL.]

NEW SCIENCE COLLEGE JAFFNA

(26621)(36)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

- MS OFFICE XP
- DESKTOP PUBLISHING
- VISUAL BASIC
- WEB DESIGNING (HTML)
- HARDWARE

04/01/2004 & 07/01/2004

- காலை, மாலை நேர வகுப்புகள் வசதிக்கேற்ற ஒழுங்குகள்
- கூடுதல் நேர செய்முறை தமிழிலும் விளக்கக்குறிப்புகள்
- குறைந்த கட்டணம், இலவச பாடக்குறிப்புகள்
- குறைந்தளவு அனுமதி தனிப்பட்டகவனிப்பு

GLOBAL VILLAGE COMPUTER EDUCATION

India வின் சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ்

CCS College of Computer Studies

302/1, நாவலர் வீதி, ஆனைப்பந்தி.. யாழ்ப்பாணம்

**யாழ்நகரில் முதன்முறையாக கணனியூடான முழுமையான கணக்கியல் கற்கை நெறியுடன் நீங்கள் இணைந்திருங்கள்**

எதிர்கால தொழில் வாய்ப்பின் நுழைவாயில

CAT Certifed Accounting Technologist

Accounting + Information Technology

Stage I,II,II இற்குரிய விரிவுரைகள்.

aat

Stage - I - 9.00 a.m.
Stage - II - 9.00 a.m. } ஆரம்பம் 03.01.2004
Stage - III -9.00 a.m. } ஆரம்பம் 04.01.2004

Special Offer for University Students
Mediam English & Tamil

CAREER COMINSTITUTE

(சி-32388) NO. 79,Main st. JAFFNA.

**பிரத்தியேக வகுப்பு**

இராமநாதன் வீதி, திருநெல்வேலி.

A/L 2006 (பல்கலைக்கழகம் முன்பாக) A/L 2006

வணிகக்கல்வி

V.முரளி B.B.A (FM SPL.)

ஆரம்பம்: தைப்பொங்கல் தினத்தில் வியாழக்கிழமை 3 p.m.

(26620)(18)

**தென்னிந்தியாவில் இருந்து**

மூனறாவது முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்



ராஜகுருசாமி அவர்கள்

புத்தாண்டை முன்னிட்டு 2004 ஆம் ஆண்டு புதுப் பலன்களை அறிவதற்கு மீண்டும் யாழ்.மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க வருகை தந்துள்ளார்.

பார்க்கும் நேரம்: காலை 9.00 - 6.00 மணி
கைரேகை மட்டும் 9.00 - 1.00 மணிவரை

★ கைரேகை★ ஜாதகம் ★ எண்கணிதம்★ பெயர்ராசி, ★ திருமணப்பொருத்தம்,

இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.

ராஜகுருசாமி T.P. 5867

மிலேனியம் மல்ரி கொம்பிளக்ஸ்

(14) 60/1 [112], TEMPLE ROAD [Near ICRC], JAFFNA. (26505)

**யாழ்நகரில்**

கல் இல்லாத
K.R.S No. I றோஸ்நாடு
K.R.S No. I சம்பா
அனைத்துக் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இராசம் அரிசி ஆலை
மின்சார நிலைய வீதி,
சுன்னாகம்.

**Lingam master - swiss**

சுவிஸ் வாழ் தமிழர்களின் முன்னணி ஆசிரியர்
Deutsch - பெரியவர்களுக்கு
Deutsch - பாடசாலை மாணவர்களுக்கு

தொடர்பு:
062 7974164 - 079 3344733,
4665 Oftringen - Swiss. (26642)(36)

**THE BARBARA MULVANEY Computer Training Centre**

123, Temple Road, Jaffna
T.P:-222 - 5971

இலவசக் கருத்தரங்கு

இன்று எமது நிறுவனத்தில் CISCOபற்றிய இலவசக் கருத்தரங்கு ஒன்று காலை 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது. கணனி ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகம்

**SPOKEN ENGLISH with GRAMMAR**

LECTURES BY:
MR.M.A.HARI

★ புதிய பிரிவு ஆரம்பம★
04.01.2004 ஞாயிறு மாலை 4 மணி

SUN DAY
SATUR DAY } 4 p.m. - 5 p.m.

HARY'S INSTITUTE

இல.564, கஸ்தூரியார் வீதி (யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்), யாழ்ப்பாணம். (26629)(36)

**வர்த்தகக் கல்லூரி**

வல்லை வீதி, சங்கானை

A/L 2005

பங்குடமை கணக்குகள
புதிய பிரிவு
ஆரம்பம்: 05.01.2004
திங்கள் மாலை 4.30
BY: S.S. சீலன்
(26810) B.B.A. (F.M.Spl.)

**விக்கி (B.Com.)**

பிரத்தியேக வகுப்புகள் (வீட்டில் வந்தும் கற்பிக்கப்படும்)

★ A/L 2006 வர்த்தக வகுப்புகள்
★ O/L வர்தகமும் நிதியும்
★ 5 ஆம் ஆண்டு புலமைபரிசில

தொடர்புகளுக்கு:
ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு.
T.P.: 077 6218306 (26643)


# மரண அறிவித்தல்கள்

### கந்தர் பொன்னுத்துரை

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் பொன்னுத்துரை 31.12.2003 இல் காலமானார்

அன்னார் லீலாவின் அன்புக் கணவரும் தங்கமலர்(சுவிஸ்), ஸ்ரீரங்கநாயகி, சோதி.(சுவிஸ்), பராசக்தி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2004) ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், ஊறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் கிழக்கு. (26730)(36-11-18) தகவல்: சோதி(மகன்)

### சூசை பாவிலு

4ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூசை பாவிலு அவர்கள் நேற்று (02.01.2004) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசை - அந்தோனிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் சிசிலியாவின் அன்புக் கணவரும் அல்பிறட்மரியதாஸ், திருச்செல்வராஜா (கொலண்ட்), றெபேட் சந்தானநாயகி (சுவிஸ்), அல்பிறட் அமலராஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மேரி றெஜினா, சகாயராணி (கொலண்ட்), மரியானந்ததேவராஜா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வலண்டைன் கின்செப்பினாபிறாசற்றி, யூட்பிறாசற்றி (மாவீரர்), சுதாகரன றொசற்றி, நற்கருணைராஜா நிலோந்தி (நோர்வே), யூட் ஜெயசீலி, யூட் பிரமிளா, ஜெஸ்வின் சுயாதினி (கொலண்ட்), செந்தா.அஸ்வினி (கொலண்ட்), பிறின்சியா (கொலண்ட்),இதயராஜன் லுமுனா (கொலண்ட்),பிரபாகரன் கில்டா(சுவிஸ்), ஜெனதன்(கொலண்ட்) ஆகியோரின் பாசமிகு பேரனும் பிரியங்கா, றொசான் (சுவிஸ்) றொக்சன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.01.2004) சனிமாலை 3.00 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பருத்தித்துறை முனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை. (சி.32454)(36) தகவல்: அல்பிறட் மரியதாஸ்.

### கார்த்திகேய ஐயர் சாம்பசதாசிவக்குருக்கள் (பிரதம குருக்கள் அரசகேசரிப்பிள்ளையார் கோயில்)

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு நேற்று (02.01.2004) வெள்ளிக்கிழமை காலை சிவபதமடைந்து விட்டார்,

அன்னர் காலஞ்சென்ற கார்த்திகேச ஐயர் குப்பம்மா அவர்களின் மகனும கௌரி அம்மாவின் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.01.2004) வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் நீர்வேலி இந்துமயானத்தில் இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசசேரிப்பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி. (26729)(36-18) தகவல்: குடும்பத்தினர்.

### முத்துலிங்கம் சிவதாசன்

அச்சுவேலி வறணன், கதிரிப்பாயைப் பிறப்பிடமாகவும் பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் சிவதாசன் நேற்று (2.1.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பரிமளத்தின் அன்புக் கணவரும் ஜெயமாலா, சயாமளா, நிமலதாஸன், கோமளா, பரிதாஸன், கிருஸ்ணதாஸன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலசுப்பிரமணியம், சரவணபவன், பத்மசீலன், தேவிகராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராசாத்தி, பரமேஸ்வரி, புஸ்பராணி, சிதம்பரநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாருஜன், கணோஜன், விதுஜா நிருஜா, வனஜா, தினேஸ், அஞ்சனா ஆகியோரின் பேரனும் விக்கினேஸ்வரன், சிவகுமார், வினோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2004) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தமேனி தீர்த்தாங்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிளாக்கர் வீதி, பத்தமேனி,அச்சுவேலி. (சி.32453)(36-18) தகவல்: சி.பரிமளம் (மனைவி).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.